
குடிவரவாளரின் அரசியல்



காலை உணவு கனடாவில் தமிழருக்கு என்ன?

இது ஒரு முழக்கம் வெளியீடு


இதழ் 2 ஒக்தோபர் 2005

தங்கள் துணைவரிடமிருந்து மறைப்பதில் முக்கியமானவை:


ஏதாவது ஒன்றிற்காக எவ்வளவு செலவிடுகிறோம் என்பது	33 %
குழந்தைகளின் நடத்தை அல்லது கல்வி பற்றிய தரவுகள்	13 %
பணியிடத்தில் தோல்வி	7 %
வண்டிக்கு ஏற்படும் சேதம்	5 %
கண்டபடி சாப்படுவது பற்றி	2 %
குடித்தல் அல்லது பிற போதைப்பழக்கம்	1 %

அட! கனடியக் கணவன் மனைவியர் குறைவாகப் பொய் சொல்கிறார்களே?

பொய்சொல்லும் துணைகள் ரொரன்ரோவில் 50 %. ஆனால் மொன்றியலில் கனடாவிலேயே மிகக் குறைவாக 33 %. ஏதாவது ஒன்றிற்காக செலவடும் தொகையைச் சொல்வதில் 30 % ஆண்கள் மறைக்கிறார்கள். பெண்கள் 37 % பேர் !
அதேபோல குழந்தைகளின் தகவல்களை மறைப்பதில் பாதிக்கு பாதி பெண்கள் முன்நிற்கிறார்கள்.
பணியிடத் தோல்விகளை மறைப்பதில் ஆண்கள் 60 வீதத்தால் முன்நிற்கிறார்கள்.
வருமானம் கூடிய குடும்பங்களில் இந்த மறைப்பு குறைவான வருமானமுடைய குடும்பங்களைவிட அதிகமாயிருக்கிறது!



கருத்துப் படம் – கதைப் படம்



இட்லருக்கு உதவிய பாட்டன் புஷ்

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் புஷ்சின் பாட்டனார் இட்லர், முசோலினி ஆகியோரை மிகவும் போற்றினார். பாசிஸ்டு தத்துவத்தையும் செயல்முறைகளையும் பின்பற்ற வேண்டும் என சக அமெரிக்கர்களிடம் பரப்புரை செய்தார்.

இத்துடன் அவர் நிற்கவில்லை.

இரண்டாம் உலகப் போரின் போது எதிரி நாடுகளான ஜெர்மனி, இத்தாலி ஆகியவற்றுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததாகத் தண்டிக்கப்பட்டவர் அவர்.

இவர் மட்டுமல்ல இவரைப் போன்ற பல அமெரிக்கர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இட்லருக்கும், முசோலினிக்கும் உதவினார்கள். தொழில் நுட்பம், நிதி முதலீடு போன்றவை தாராளமாக வழங்கப்பட்டன.

அமெரிக்க பெருந் தொழிலதிபரான ஹென்றி போர்டு இட்லரின் பிறந்தநாள் விழாவின் போது 50,000 மார்க் பெறுமான பரிசை வழங்கினார்.

அன்று பாட்டனார் புஷ் இட்லரைப் போற்றினார். ஆனால் இன்று பேரன் புஷ் நவீன இட்லராகவே மாறி ஈராக்கில் பாசிச வெறித் தாண்டவமாடுகிறார்.

தென்செய்தி

நேர்காணல்

இளங்குமரன் பக் 52



படித்ததில் பிடித்தது பக் 56

தடுக்கவியலா விசை கொண்டதுபோல் சூரியன் கீழே, இன்னும் கீழேயாய் விழுந்துகொண்டிருந்தது.

இலங்காபுரம் நாவல்

பக் 9



ஆண்கள் குழந்தை பெறலாமா? பக் 40

நீ
அவல் கொண்டு வா நான்
உமி கொண்டு
வருகிறேன்...
குசுப்புவின் குழறுபடி

பக் 41





அட்டைப்பட சந்திப்பு பக்கம் 16

உள்ளே

முழக்கு பறை நொறுக்கு சிறை
-கவிஞர் காசி ஆனந்தன்

தொகுதி: 1 இதழ்: 2 2005 ஒக்தோபர்

பதிப்பாசிரியர்:
திரு

பொறுப்பாசிரியர்:
மாமூலன்

ஆசிரியர் குழு:
நக்கீரன்
வானதி

தட்டச்சு:
கலைச்செல்வி

வடிவமைப்பு உதவி:
சுகந்தன், சந்துரு

படங்கள்:
சந்துரு
மாதுளா

வெளியீடு:
முழக்கம்
104 ஹைமஸ் வீதி
ரொன்ரோ ஒன்ராரியோ
M1L 2C9
416 261 9099

அச்சு:
ARROW WEB PRINTERS
அம்பு செய்தித்தாள் அச்சகம்

இணையம்:
www.parai.org
மின்னஞ்சல்:
info@parai.org

வணக்கம் !

ரொரன்ரோவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தெருவில் நடந்து போகையில் முதுகு கூசுகிறது. ஒரு துப்பாக்கி குண்டு தற்செயாலாக வந்து தாக்கிவிடுமோ என்று. ஏதாவது வண்டி வந்து நோக்கத்துடனாவது மோதிவிடுமோ என்று. நன்றாக ஓடுவதற்குப் பயிற்சி எடுத்து வைத்தால் சில வேளைகளில் இவற்றிலிருந்து காப்பாற்றும். பல வேளைகளில் சிந்தனையே காப்பாற்றும். பலர் புலம் பெயர்ந்ததன் நோக்கம், பயனற்றுப் போகும் வகையில் சூழலை எமது சமூகத்தின் நடைமுறைப் போக்கு மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறது. இவற்றை விடுத்து நாம் செய்யக் கூடிய பல பயனுள்ள செயல்கள் காத்துக்கிடக்கின்றன.

- - - -

ரொரன்ரோவின் ஒன்ராரியோவின் நூலகங்களில் தமிழ் நூற்களை என்ன அளவு கோல்களில் வாங்குகிறார்கள்? இங்கிருக்கும் தமிழர்களுக்கு தெரியாமல் ஏன் இப்படிப்பட்ட பல குப்பைப் புத்தகங்கள் அங்கு வருகின்றன? இது குறித்து சிலர் சேர்ந்து நூலகக் குழுவிற்கு தொடர்பு கொண்டு சில நல்ல விளைவுகளை ஏற்படுத்தலாம். ஒரு பெரிய எதிர்காலச் சந்ததிக்கு நன்மை பயக்கும் ஒரு செயலை இதன்வழி செய்யமுடியும். நூலக ஆணைக் குழுவிற்கு கடிதம் அனுப்பி தொடர்புகளை ஏற்படுத்தி அதில் நமது நிலையை உறுதியாக்கலாம். நூல்களே நமது வழிகாட்டியும் ஆசானுமாக இருக்க திறம் படைத்தவை. அதை எமது சந்ததிக்குச் சேர்த்து வைக்க வழிசமைப்போம்.

இந்த நூல் தேர்வு குறித்து ஒரு தமிழர் நூலகத்திற்கு கடிதம் அனுப்பியிருக்கிறார். நூலகத்திலிருந்து 'நாங்கள் தமிழ் தெரிந்த ஒருவரை நூல்கள் தெரிவு செய்ய வைத்திருக்கிறோம்' என்று புத்திசாலித்தனமாகப் பதில் அனுப்பியிருக்கிறார்கள். ஆங்கிலம் தெரிந்தவர் போதுமா ஆங்கில நூல்களை நூலகத்திற்கு வாங்குவதற்கு? துறைசார் அறிவு தேவையில்லையா? இதை இடித்துரைக்க ஒரு சிறு குழு தமிழில் செயற்படலாம். தனியொருவரென்றால் பதில் பொறுப்புணர்வுடன் வராது. குழு என்றால் பொறுப்பான பதிலை பெறலாம். இதற்கெல்லாம் சங்கம் கட்டத் தேவையில்லை என நினைக்கின்றேன். தமிழ்ச் சமூகத்திற்கு பொது நன்மை விரும்பும் நாலுபேர் போதுமானது. பின்னாளில் இந்தக் குழுவினர் தங்கள் குழுவைச் சேர்ந்தவர்களது பதிப்புக்களை மட்டும் கனடிய நூலகத்திற்கு அனுப்பாது பொறுப்பாகச் செயற்படவும் வேண்டும்.

எத்தனை நல்ல நூல்களும் எத்தனை சிறப்பான நூல்களும் எத்தனை வாசிப்பதற்கரிய நூற்களும் வாசிப்பதற்குரிய நூல்களும் கனடாவில் தமிழர்களால் வெளியிடப் பெறுகின்றன. அவற்றைப்பற்றி நூலகத்திற்கு இடித்துரைத்துப் புரிய வைக்க சில பெரியோர் முயற்சிக்கலாம்.

இரண்டாவது. ரொரன்ரோவின் பல அரசுப் பணியகங்களில் குறிப்பாக முதியோர் சென்று பயன் பெறும் இடங்களில் தமிழ் மொழி தெரிந்த ஒருவரையாவது பணிக்கு இருத்தவேண்டும் என்பதை வலியுறுத்தலாம். எனக்குத் தெரிந்த ஒரு பணியகத்திற்கு முதியோர் எப்போதும் யாராவது துணையுடன் செல்வதைப் பாரத்திருக்கிறேன். உள்ளே சென்று கேட்டால் உரிய பதில் சொல்ல யாரும் இல்லை. அமைச்சிடம் கேட்கும்படி சொல்கிறார்கள். இதையும் சிலர் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம். நீங்கள் அதைச் சாதித்தால் செய்யத் தொடங்கினால் நாங்கள் ஊடகமாகவிருப்போம்.

இங்கு அமைச்சிற்கு அனுப்பும் மின்னஞ்சலுக்கும் மதிப்பிருக்கிறது. யாராவது சிலர் சேர்ந்து இதையும் முயற்சிக்கலாம். நமது மக்களுக்கு வேலை வாயப்பும் நமது முதியோருக்கு அலைச்சலும் மிச்சம். ஐரோப்பிய நாடுகளில் இப்படி மொழிபெயர்க்கப் போவது பல தமிழருக்கு பகுதி நேர வேலையாகவும் வேறுபலருக்கு முழுநேர வேலையாகவும் உள்ளது. கனடாவில் இருக்கும் பல்லின பண்பாட்டுச் சலுகைகளை நாம் இதற்கெனப் பயன்படுத்தலாம். இவற்றிற்கான முனைப்பு டையவர்களுக்கு தொடர்பிடங்களையோ முகவரிகளையோ தெரியப்படுத்த எமது பணிமனையில் வழியுள்ளது.

பறை தொடர்பாக...

பறைக்கு பல ஆதரவுக் குரல்கள். வெறும் பாராட்டுக்கள் என்பதை விட தட்டிக்கொடுப்புக்கள். எதிர்பார்க்கமுடியாத மூலைகளிலிருந்தும் கிடைத்திருப்பது குழுவினருக்கு மகிழ்ச்சி. இலங்கைக்கு நாங்கள் தொடர்பு கொள்ளுமுன்னரே பறையை அனுப்பி மகிழ்ந்தவர், ஐரோப்பாவிற்கு பல நாடுகளுக்கும் தனிப்பட்ட வகையில் அனுப்பி மகிழ்ந்த பலரது விருப்பார்வம் எனப் பல. அனைத்திற்கும் நன்றிகள்.

இலங்கை மற்றும் தமிழர் புலம் பெயர்ந்த அனைத்து நாடுகளிலிருந்தும் பங்கேற்பாளரை இணைத்துக் கொள்ள தொடர்பிலிருக்கிறோம்.

நன்றி. மாமூலன்

கனவுக்கு என்ன பதில்?

தமிழகத்திலிருந்து பறைக்காக **அகரன்**

ஈழத்திலிருந்து அகதியாக தமிழ் நாட்டில் சேலம் மாவட்டம் மேலூர் மேனிலைப்பள்ளியில் பிளஸ் 2 படித்த மாணவன் சி. உதயராஜ் பிளஸ் 2 தேர்வில்



பெற்ற மதிப்பெண்கள் 1200க்கு 1137. உயிரியல், வேதியியல் பாடங்களில் நூறு விழுக்காடு பெற்று மாவட்டத்தில் முதன்மை பெறுகிறார். மிகவும் வறிய குடும்பத்தைச் சோந்த அவருக்கு மருத்துவராக வேண்டுமென்ற குறிக்கோள். பள்ளி ஆசிரியர்களின் உடை மற்றும் பொருள் உதவிகளோடு நுழைவுத் தேர்வுப்பயிற்சி மையத்தில் சேர்ந்து விடா முயற்சியுடன் உழைத்து நுழைவுத் தேர்வில் வெற்றி பெறுகிறார்.

உயிரியலில் 49,58. இயற்பியலில் 47 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுத் தேறுகிறார். அதன்பின் மருத்துவப் படிப்புக்கான இட ஒதுக்கீட்டு ஆலோசனைக்கு அழைக்கப் படுகிறார். அங்கே அவருக்கு மருத்துவப் படிப்புக்கான இடம் மறுக்கப் படுகிறது. அனைத்துத் தகுதிகள் இருந்தும் அவரது கூடுதல் தகுதி காரணமாக மறுக்கப் படுகிறது.

கூடுதல் தகுதி ?

அவர் ஒரு புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர் என்பதுதான். 1990 ஆம் ஆண்டு இராமேசுவரத்தில் தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளோடு தமிழக்கத்தில் வந்திறங்கிய சிவலிங்கம் உதய ராஜின் தந்தை, தனது மகன் மருத்துவராகி ஏழைகளுக்கு சேவை செய்வதே தனது கனவெனக் கூறுகிறார்.

இன்று உதயராஜ் குடும்பத்தின் நாளாந்த வாழ்க்கையை நகர்த்த தந்தைக்கு உதவியாக விறகு உடைத்துக் கொண்டிருக்கிறார். (இது டெக்கான் க்ராணிகிளிலில் 08.10.2005 நாள் சென்னைப் பதிப்பில் வெளிவந்த செய்தி.)

இந்தச் செய்தி நமக்குக் கூறும் செய்தி என்ன? நம்முள் எழுப்பும் கேள்விகளென்ன? தமிழகத்தில் நமக்குள் தூண்டும் உணர்வுகள் என்ன?

வள்ளுவனின் படங்களையும் மொழிகளையும் பணிமனைகள் முதல் பேருந்துவரை மாட்டிவைத்து அழகு பார்க்கும் தமிழ்நாடு அரசு 'முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்' எனும் குறளை மெய்ப்பித்த தமிழ் இளைஞனுக்குத் தரும் கூலி இதுதானா?

தமிழுக்குச் செம்மொழி த்தகுதி கேட்டுப்பெற்ற தமிழகத் தலைவர்கள் உதயராஜ் போன்ற நீதி மறுக்கப்படும் தமிழ் இளைஞர்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள்? இதே உதயராஜ் அகதியாக இல்லாமல் முறைப்படி விசா, கடவுச்சீட்டுடன் வந்தால் அவருக்கு வெளி நாட்டவருக்கான தகுதி மற்றும் 'பொருள்' அடிப் படையில் இந்தப் படிப்புக்கான இடம் மறுக்கப்படுமா? இன்னும் வெளிநாட்டு மாணவர்கள் தமிழ்நாட்டில் மருத்துவப்படிப்பு மேற்கொள்வதில்லையா?

புலம் பெயர்ந்தவர் - தமிழ் அகதி என்பதுதான் தடை என்றால் அது உதயராஜின் பிழையா? உயிர் பிழைப் பதற்காக அகதியாகப்போவது படிப்பிற்கே தடையாகும் அளவுக்குத் தவறா?

கனவு காணுங்கள் என்று நாள் தோறும் இளைஞர்களுக்கு கூறிவரும் குடியரசுத்தலைவர் அறிவியல் தமிழன் அப்துல்கலாம் தன்னைப் போன்ற வறிய சூழலில் இருந்து விடாமுயற்சியுடன் போராடி வெற்றியின் விளிம்பில் உரிமை மறுக்கப்பட்ட இந்த தமிழ் இளைஞனின் கனவுக்கு என்ன பதில் வைத்திருக்கிறார்?

வாய்ப்புகள் கிடைக்கும் போது போதிய வசதிக- ளில்லா வறுமைச் சூழலிலும் உதயராஜ் போன்ற இளைஞர்கள் தம் குறிக்கோளை அடைய போராடுகிறார்கள்.


வாய்ப்புகள் கிடைக்கப் பெறும் வசதியுள்ள நமது தமிழ்க் இளைஞர் இன்று தங்களுக்கென என்ன குறிக் கோளை அடையப் போராடு கிறார்கள். வாய்ப்புகள் கிடைக்கப்பெறும் வசதியுள்ள நமது இளைஞர் இன்று

இந்த இளைஞரின் கல்வி நலம் குறித்து தற்போது நீதிமன்றில் ஒரு மனு முன்வைக்கப் பட்டிருக்கிறது. அக்கறையுடைய தமிழ்நாட்டு அன்பர்கள் இந்த இளைஞனின் கல்விக்கு முயற்சியெடுத்து வருகின்றனர.

தங்களுக்கென என்ன குறிக்கோளைக் கொண்டுள்ளனர்? கிடைக்கும் வாய்ப்புகளை சமூக முன்னேற்றத்துக்குப் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணுகின்றனரா?

நல்ல உடைகளைக் கூட உடுத்த வழியில்லா நிலையிலும் தனக்கென்று தன் சமூகத்துக் கென்று ஒரு குறிக்கோளை அடையப்போராடும் உதயராஜையும் மேலை நாகரிக மோகத்தில் சிக்கி 'ஜாலி'யாக இருக்க வேண்டும் எனும் மனம் - சமூகத்தைப்பற்றி ஏன் தம்மைப்பற்றியும் துளியும் அக்கறையில்லாத இளைஞர்களையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

வறுமையின் கோரப்பிடியுள் சிக்கினாலும் மனம்தளராது உழைத்து உரிய தகுதியும் பெற்றபின்பு கல்வி உரிமை - அடிப்படைஉரிமை மறுக்கப்பட்டு தந்தைக்கு உதவியாக விறகு உடைத்துக் கொடுக்கும் அறுவைக்கத்தி பிடிக்க வேண்டிய கைகளில் கோடரியைப் பிடித்துக் கொண்டிருக்கும் உதயராஜிற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்பது உங்கள் கடமையில்லையா? உதயராஜிடம் இருந்து நமது இளைஞர்கள் கற்க வேண்டிய பாடங்கள் அதிகமில்லையா? நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நமது இளைஞர்கள் எதைக் கற்கப் போகிறார்கள்?



கென்யாவில் கல்வி கற்கும் வாய்ப்பு அனைவருக்கும் கிட்டவில்லை. பல நாட்கள் கல்வி குறிப்பிட்ட சிலரிடமே இருந்தது. தற்போது கல்வி கட்டணமின்றி கிடைக்கும் நிலை ஏற்பட்டதும் தனக்கு இல்லாமல் போன வாய்ப்பை பயன்படுத்த வந்திருக்கும் முதியவர் வகுப்பில் பிற சிறார்கள் - மாணவருடன் அமர்ந்திருக்கிறார். கல்விக்கு தடையை யாரும் செய்யக் கூடாது. யாருக்கும் செய்யக் கூடாது.

கழுதை போகட்டும்...

நீதிமன்றத் தீர்ப்பு...

சமீபத்தில் உச்ச நீதிமன்றம் ஒரு புர்ர்ர்ர்ர்சிகரமான தீர்ப்பை வழங்கினாலும் வழங்கியது நாடு முழுவதும் கொந்தளிப்புதான். சுய நிதிக் கல்லூரிகளில் இந்தியாவில் இருக்கும் "தேசத் துரோக" இந்தியர்களுக்கு இட ஒதுக்கீடு கூடவே கூடாது. ஆனால் ஓடுகாலி "இந்தியர்களுக்கு" (அதாவது NRI)மட்டும் 15 பர்செண்ட் கொடுக்க வேண்டும் என்கிற தீர்ப்புதான் அது. இதை பாராளுமன்றத்தில் விவாதித்தால் கோபம் கொப்பளிக்கிறது உச்சிக்குடுமி அடச்சே...உச்ச நீதி மன்றத்திற்கு. நீதி மன்றம் குறித்தும் நீதிபதிகளின் லட்சணம் குறித்தும் அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும் என்கிற கட்சியில் நானும் ஒருவன். ஜனநாயகம் பூத்துக் குலுங்குவதாகச் சொல்லப்படும் நாட்டில் நீதித் துறையை மட்டும் விமர்சிக்கக் கூடாது என்பது என்ன நியாயமோ? தீர்ப்பளித்த "நீதி"பதிகளில் ஒருவரது வாரிசாவது அல்லது பேரன் பேத்திகளாவது அரசு கல்லூரிகளில் படித்திருக்கிறார்களா...அல்லது படித்துக் கொண்டிருக்கிறார்களா என்பது குறித்து முதலில் விசாரிக்க வேண்டும்.

இதையெல்லாம் பார்க்கும் போது இன்றல்ல 45 ஆண்டுகள் முன்பே முதல்வர் காமராசரை அத்து மீறி விமர்சித்த உயர் நீதி மன்ற நீதிபதியைக் கண்டித்து பெரியார் பேசிய பேச்சுத்தான் நினைவுக்கு வருகிறது.

> "ஜட்ஜுகள் 100 க்கு 90 பேர்கள் யோக்கியப் பொறுப்பற்ற குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தானே? இந்த ஜட்ஜுகள் எங்கேயிருந்து வந்தார்கள்? வக்கீலிலிருந்து வந்தவர்கள்தானே? வக்கீல் என்றால் என்ன? காசுக்கு மனசாட்சியை விற்கிறவர்கள்தானே...... நேற்றுவரை பித்தலாட்டம், மனசாட்சிக்கு விரோதமாகப் பேசுகிற பிழைப்பில் இருந்துவிட்டு, இன்று ஜட்ஜாக வந்து விட்டால் அவர்கள் சுத்தமாகிப் போய் விடுவார்களா? என்ன தைரியம்? வக்கீல்களிலிருந்து ஜட்ஜுகளைப் போடுவது ஏன்? ஜட்ஜாக வரவேண்டுமென்றால், அதற்காக தனியாகப் பயிற்சி கொடுத்துச் சொல்லிக் கொடுப்பதுதானே?"

(30.10.1960 திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டப் பேச்சு)

பெரியாரின் இந்தத் தார்மீகக் கோபத்தை அந்தக் கால கட்டத்தில் யார் யாரெல்லாம் வழக்குரைஞர்களாக... நீதிபதிகளாக இருந்தார்கள் என்பதைக் கூர்ந்து பார்த்தால் புரிந்து போகும்.

சரி ரிலாக்ஸ்....

இங்கிலாந்து நாட்டில் 18வது நூற்றாண்டில் ஜெப்பரீஸ் என்பவர் நீதிபதி. மிக மிகக் கோபக்காரர். கடுமையாகத் தண்டிப்பவர். ஒரு வழக்கில் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் ஒரு கைதியைத் தமது பிரம்பால் சுட்டிக் காட்டி "இந்தப் பிரம்பின் கோடியில் ஒரு போக்கிரி இருக்கிறான்" என்று கடுமையாகக் கூறினார். அப்போது அந்தக் கைதி மிகப் பணிவாகவும், பவ்யமாகவும் "எந்தக் கோடியில் பிரபு?" என்றாராம் மிக அமைதியாக. இது எப்படி?

கட்சிக்காரர்களுக்கு வாஜ்பாய் "வாழும் மகாத்மா".

திருமாவுக்கு ஜக்கி வாசுதேவ் "காவி கட்டிய பெரியார்".

கலைஞருக்கு வைகோ "வாழும் சேகுவேரா".

அது சரி...
காந்தி
பெரியார்
சேகுவேரா மேலெல்லாம் இவர்களுக்கு அப்படி என்ன கோபம்?

இப்போது எழுந்துள்ள இத்திடீர் பிரச்சனை வளைகுடா நாடுகளைக்கூட ஒரு ஆட்டு ஆட்டும்தான் போலிருக்கிறது.

இதுவரை நீடித்து வந்த அமைதிப் பேச்சுக்கும் இப்படி ஒரு பங்கம் இந்த ரூபத்தில் வந்து சேரும் என எவருமே எண்ணக்கூட பார்த்திருக்க முடியாது.

இதன் எதிரொலி ஏதென்ஸ் தொடங்கி எத்தியோப்பியா வரையிலும் எதிரொலிக்க இருப்பதை நினைத்தால் பயமாகத்தான் இருக்கிறது.

மூன்றாம் உலக நாடுகளை விடுங்கள்....கனடா...ஜெர்மனி.... போன்ற நாடுகளது மக்கள் நிலை என்னவாகுமோ ஏதாகுமோ என னைக்கையில் எவரும் அஞ்சாமலும் இருக்க ஏலாது.

அகதியாகத் தஞ்சம் பெற்றவர்களோ அல்லது அரசியல் தஞ்சம் கோரியவர்களோ எவராயினும் இனிவரும் நாட்களில் சற்று அவதானமாக இருப்பது நல்லது.

ருவாண்டா..கியூபா கூட இவரது குறிக்குத் தப்புவது சற்றுச் சிரமம்தான்.

எதற்கும் மக்கள் பல வாரங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை சேகரித்து வைத்துக் கொண்டு ஊரடங்கு உத்தரவு தளர்த்தப் பட்டிருக்கிறதா இல்லையா என்று பார்த்துவிட்டு தெருவுக்கு வருவது நல்லது.

பிறகு என்னதான் சொல்வது....?

காஞ்சிபுரத்திலேயே கைதைக் கண்டித்து கதவைச் சாத்தவில்லை மக்கள். ஆனால்... கூரை ஏறிக் கொரங்கு புடிக்காதவன் ஈபிள் டவர் ஏறி எலி புடிக்கப் போறேன்..ன்ன கதையா...

"அனுராதா புகழ்" லோககுருவை விடுவிக்காவிட்டால் இதை சர்வதேச பிரச்சனை ஆக்குவேன்...என சுப்ரமணியம்சாமி குடியரசுத் தலைவரிடம் மனு கொடுத்திருக்கிறாரே....இதற்கு எங்கே போய் முட்டிக்கொள்வது....?

திருக்கணித சித்தாந்தப்படி வருகின்ற பார்த்திப வருடம் புரட்டாசி மாதம் 11 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை 59.01 நாழிகைக்கு ஆங்கில தேதிப்படி 28.09.2005 அதிகாலை 5.37 மணிக்கு குரு கன்னி ராசியிலிருந்து துலாம் ராசிக்கு பிரவேசம் செய்கிறாராம். கன்னியோடு என்ன பிரச்சனையோ நமக்குத் தெரியாது. அந்த நேரத்தில் எந்த வாகனத்தில் போய்ச் சேருகிறார் என்பதும் அவருக்கு மட்டுமே வெளிச்சம். இப்படிக் கூடு விட்டு கூடு பாயும் இந்த ஆசாமி போன இடத்தில் சம்மணங்கால் போட்டு உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு மிகச் சரியாக 27.10.2006 இரவு 1.19 மணிக்கு அங்கிருந்து கிளம்புகிறாராம். அடுத்து எங்கே போய் பாயைப் போட்டுப் படுப்பார் என்பது இந்த ஜோசியகாரனுகளுக்குத்தான் தெரியும்.

இதுதான் சமயம் என்று இந்த ராசிபலன் பார்ட்டிகள் அவனவனுக்கு வசதிப்பட்ட சைசில் புத்தகங்களாக வேறு போட்டுத் தள்ளுகிறார்கள். இதில் வியாபாரிகளுக்கு...விவசாயிகளுக்கு... அரசியல்வாதிகளுக்கு என பல வகையறாக்களை பிரித்துப் போட்டு தாக்கியிருப்பதோடு...

நெய் விளக்கு....
எள்ளெண்ணை விளக்கு....
பெட்ரோல் விளக்கு....
பெட்ரோமாக்ஸ் விளக்கு....

என பல விளக்குகளை இவர்கள் சொல்கிற இடங்களில் எல்லாம் போய் ஏத்த வேண்டுமாம். அப்பத்தான் குரு கடாட்சம் இதுகளுக்குக் கிடைக்குமாம்.

போதாக்குறைக்கு ஒரே நேரத்தில் எதிரெதிர் பார்ட்டிகள் இருவருக்குமே நன்மை விளையும் என்று போட்டிருப்பதுதான் இவர்களது உடான்சின் உச்சகட்டம்.

நோயாளிக்கும் டாக்டருக்கும் எப்படி ஒரே நேரத்தில் நல்ல நேரம் வரமுடியும்.? நோய் வந்தா டாக்டருக்கு நல்ல நேரம். நோயாளிக்கு கெட்ட நேரம்.

நோயாளிக்கு நல்ல நேரம் வந்தா டாக்டரே நோயாளி ஆயிடுவாரே அதுக்கென்ன பண்ணப் போகுதுக இந்தக் கிறுக்குக?

உதாரணத்திற்கு அதுகள் போட்டிருப்பதில் ஒன்றே ஒன்றை மட்டும் பார்க்கலாம்.

அரசியல்வாதிகளுக்கு:

உங்கள் பலம் கூடி எதிரியின் பலம் குறைந்து போகும். மக்களின் ஆதரவையும், தொண்டர்களின் நன்மதிப்பையும் பெறுவீர்கள்.

எழுத்தாளர்களுக்கு:

உங்களின் எழுத்துக்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும்.உங்களுக்கு ரசிகர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகும்."

இப்படி விரிந்து கொண்டே போகிறது இவர்களது கப்சா. எழுத்தாளனின் வேலையே டுபாக்கூர் தலைவர்களை அம்பலப்படுத்துவதுதான். அப்படி இருக்கையில் அந்தக் கிராக்கிகளுக்கும் செல்வாக்கு அதிகரித்து எழுத்தாளர் களுக்கும் வரவேற்பு கூடி ரசிகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகும் என்கிறார்களே....? எங்கே.... ஜெயிலிலா?

(உதை......ச்சே... கதை தொடரும்....)





தேவகாந்தன்

'லங்காபுரம்' தொடர் நாவல்

படலம் 1

பொழுது படு கரையில் இன்னும் மெதுவாகத் தெரிந்து கொண்டிருந்தன, இறங்கும் சூரிய குடத்தின் இறுதி விசைக் கதிர்கள். அதனெதிர்த் திசையில் இருள் விரிந்தெழுந்துகொண்டிருந்தது. அவ் விரிதலின் விசையில் காலத்தின் மிகச் சிறு துகளப் பொழுதான கணங்களையும் கண்டபடி நடந்துகொண்டிருந்தான் நாகன்.

ஒரு பரவசத்தில் போல் கண்கள் அவனுக்குக் கிறங்கியிருந்தன. தன் வலிய கால் பதித்து தும் தும்மென நடந்தவாறே மனித சாத்தியமான தூரங்களையும், வெளியையும் அளக்கும் தன் பயணங்களின் பெறுபேறெனப் பலரிடமும் தான் சொல்லியதுபோன்றதாய் அப்போதும் ஒரு பரவசம் தன்னில் திகைந்தெழுவதை அவன் உணர்ந்துகொண்டிருந்தான்.

தடுக்கவியலா விசை கொண்டதுபோல் சூரியன் கீழே, இன்னும் கீழேயாய் விழுந்துகொண்டிருந்தது. அப்போதுதான் திணியும் அவ்விருளில் வழிகடத்தல் அரிதாகப் போகின்றமை அவனின் பிரக்ஞையில் உறைத்தது. சட்டென அவனை மூடிக் கவிந்தெழுந்தது ஓர் ஆயாசச் சுழல். எட்டிக் காலெறிந்து நடந்து கொண்டிருந்தவன் வேகம் தணிந்தான். பொழுது படுவதன் முன் தலைநகர் எல்லையைச் சேர்ந்துவிடுகிற அவனதெண்ணத்தின் சாத்தியம் தன் கண்ணெதிரிலேயே தொலைந்துகொண்டிருப்பது கண்டான். முதிரும் தன் வயதிலும், அதனாலான தளர்ச்சியிலும் அவனுக்கு அத்தருணம் எரிச்சலாக வந்தது. நெடுந்தொலை வாகவும், நெடுங்காலமாகவும் தான் ஒரு பயணிய-ாய் இருந்துகொண்டிருப்பதில் ஒரு தயவினைக் கொஞ்சங்கூட அவன் தன்மேல் பட்டுக்கொள்ளவில்லை.

அவனிடத்தில் மிக முக்கியமான விஷயங்கள் இருந்தன, அரசனோடு பேசுவதற்கு. அவனுக்கில்லை யெனினும் அரசனுக்கு முக்கியமான தகவல்கள் அவை. அவை அவன் மனத்துக்குள் கிடந்து தாமே பறந்து போய்விடுவனபோல் துடித்துக்கொண்டிருந்தன. பாண்டிநாட்டின் தலைநகரான கபாடபுரத்திலிருந்து ஒரு அவசரத்தில் புறப்பட்டவன் ஒரு வேகத்தில் ஏறிப்போல்தான் மாந்தையை நடந்து அடைந்திருந்தான். பின்னால்கூட அவன் கடக்கவேண்டியிருந்த பாலை வெளியிலும் வேறு பயணிகள், யாத்திரீகர்களின் துணைக்குக் காத்திருக்காமல் அவன் தனிப் பயணம் மேற்கொண்டு வந்ததுக்கும் அதுவன்றி வேறு காரணம் அவனிடம் இருக்கவில்லை. அதனால்தான் இறக்கிவைக்கும் அவசரத்தை மறு நாள்வரை ஆறப்போடக்கூட அவன் மனது சம்மதப்படாதிருந்தது.

நாகன் எதிரே விரிந்து பரந்து கிடந்த வெளியில் பார்வையை வீசினான்.

ஒரு ஊமை இறுக்கத்துள் முனங்கிக் கொண்டுபோல் வறண்டும், பிளவைகள் பட்டும், காற்றசைவில் பொடி பறத்தியும்கொண்டு நெடித்துக் கிடந்தது எதிர் கிடந்த மலைப்பிரதேசம். இன்னும் ஓரிரண்டு கூப்பிடு தொலைவில் அய்தாகிக்கொண்டிருக்கும் அவ் வனம் வெளியாக விரியத் துவங்கிவிடும். வடமேற்குநோக்கிய விரி பாதை ஊடறுத்த அவ்வனம் கொடு விலங்கினத்தின் வாழிடமாக இருந்தது. பாதையின் இருமருங்கும் விலங்குகளின் அலைவு இல்லையெனினும் அடர்த்தி குறைந்ததாயும் அது இருக்கவில்லை. முதல்நாளிரவினை வனாந்தரப் பாதை ஓரத்திலேயே அவன் கழித்திருந்திருந்தான். கவனிப்பற்றதில் அழிபாடடைந்த ஒரு பயணிகள் மடம் இருந்தது. சூளை வைத்த மண் கல்களில் எழும்பியிருந்தது. அதுவே அச்சத்தின் ஆதாரத்தில் நின்றுபோல் தங்க வருவோரை அச்சப்பட வைத்துக்கொண்டிருந்தது. நித்திரையை ஊடறுத்து அவ்வப்போது அச்சங்கள்

தம்மிருப்பைக் காட்டிக்கொண்டே இருந்தன நாகனில். விடுதலை அவன் நேசிக்கும்படிக்கே மனத்தில் அந்தரம் முகிழ்த்தது. விடுந்த வெளி ஆசுவாசத்தை நிறைத்தது.


அப்போது அவன் பயணப்படவேண்டியிருந்த அம் மலைப்பகுதி, கடந்து வந்த வனப்பிரதேசத்தை விடக் கடுமையானதும் கொடுமையானதுமாகும். மலைதிரி வேடரும், நகரமும் கிராமமும் சாராக் குழுமம் குழுமமான இயக்கரும் சதா செய்யும் பயணிகளின் வதையிலும் கொலையிலும் வெகு ருசி பெற்றிருந்தனர். இரவு தங்களுக்காகவே வருவதுபோல்தான் அவர்களது அட்டகாசம் மக்களின் ஊசலாட்டம் குறைவான அவ்வெளியில் அதிகமிருந்ததை அவன் அறிந்தேயிருந்தான்.

மூன்று மலைமுடிகள் அம் மங்கிய வெளிச்சத்திலும் தொலைவிலாய்த் தெரிந்து கொண்டிருந்தன. அவற்றைக் கடந்தால் லங்காபுரம்தான். அவற்றுள் குறுமையான இரண்டு மலைகளினிடையே பாதை இரட்டை வெண்வரிகளாய் ஓடி மறைந்திருந்தது. அது வடமேற்கிலிருந்து லங்காபுரத்தை அடைவதற்கான பிரதம பாதை. பயணங்களும் வாணிபப் பொருள்களும் அப்பாதையூடாகவே லங்காபுரத்தை அடைந்துகொண்டிருந்தன. கிழக்கே ஒரு துறைமுகம் இருந்தது நாவாய்களினூடான பொருட்களின் இறக்குமதிக்கு. அரசன் நினைத்திருந்தால் அப்பா தையின் பயமழித்து மனித சஞ்சாரத்தைச் சுலபமானதாக ஆக்கியிருக்க முடியும். உண்மையில் அது அப்படி இல்லாததில் அவனுக்கேதுமில்லைத்தான். பாதுகாப்பு ஒரு யோசனையாகவே அவனில் கிளரும். அஞ்சி அவன் பயணம் கைவிட்ட தருணங்கள் அதுவரை ஏதுமில்லை. ஆனால் கடத்தலரிதானதாய் அந்த வடமேற்குத் திசைப் பாதை ஏன் இருந்ததென்று அவன் அதிகமான வேளைகளில் எண்ணியதுண்டு. அதைத் திட்டமிட்டேதான் ராவணன் விட்டுவைத்திருப்பதாகச் சிலமுறை அவன் எண்ணமெழப் பெற்றிருக்கிறான். அச்சத்தைக் குறிப்பிட்ட ஓரிடத்தில் வளர்த்து வைத்திருப்பதென்பது அவனளவில் சின்ன விடயமில்லை. ஒரு வாய்ப்பான பொழுதில் தன் சந்தேகத்தை ராவணனிடம் கேட்டுவிடுகிற தீர்மானம்கொண்டான் நாகன்.

அவன் மறுபடி கண்ணோடிய பொழுது மலைமுகடுகளின்மேல் ஒருபெரும் கருந்துணி அசைந்துகொண்டிருப்பது தெரிந்தது. மழை வந்தாலும் வரலாம், பிறகு அம் மலைவழியில் நடப்பது இயலாததாக இருக்குமென அவன் எண்ணி முடிக்குமுன்னரே அது மழை முகிலில்லையென ஏதோவொன்று இரகச-ியமாய் அவனது காதுக்குள் சொல்லிப் போனதுபோலிருந்தது. அம்மாதிரி மேகங்களது கவிவின் பின் ஊர்களுக்கு, அரசுகளுக்கு சொல்லிவைத்ததுபோல் தீங்குகளே விளைந்திருக்கின்றதை அவன் தன் நீண்ட வாழ்நாட் காலத்தில் அதிகமும் கண்டிருக்கிறான். ஆம், அது துன்னிமித்தத்தின் அடையாளம். அவனும், அவன் மக்களும், தந்திரங்களும் மாயங்களும் நிறையச் செய்பவர்களான சில குழும இயக்கர்களும்கூட இன்னும் நிவர்த்தியறியாது தவித்திருக்கும் இயற்கையின் சில மூர்க்கங்களுள் அது ஒன்று.

அது இலையுதிர்வின் முதிர் காலமாயிருந்தது. மரங்கள் பலவும் இலையுதிர்த்து நிறுமாணமாய் நின்றுகொண்டிருந்தன. வீசிய சற்றுப் பலமாயான காற்றுக்குச் சருகுகள் உருண்டு பறந்து அம் மலைப் பக்கமாய் அள்ளுண்டு போயின. ஒரு பயங்கரமான ராட்சத வாய்க்குள் அவை அடித்துச் செல்லப் படுவனபோல் மனதில் பட்டுக்கொண்டிருந்தது அவனுக்கு. சிறிதுநேரத்தில் தானே அதற்குள் அடங்கச் செல்வதாக ஒரு கற்பிதமெழ, அவனுக்கு மெல்லிய கலவரமொன்றின் மனத்துள்ளான படர்கை. அச்சங்களை வெல்லும் தன் அறிவினதும் உடம்பினதும் திண்மையினால் அது வியாபித்தெழும்பு முன்னமே நாகன் அடங்கிப்போகச் செய்துகொண்டான்.

அப்போது தான் அடைந்துகொண்டிருந்த உணர்வுகளின் மூலமாயிருந்தவை தனக்கு என்றைக்கும் இல்லாதவாறான விசித்திர அனுபவங்களை உருவாக்கியிருப்பதை அவன் அதிசயத்தோடு எண்ணினான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. எனக்கு என்ன நடந்தது? அச்சத்தின் உறைப்பு ருசியெழல் என்னுள்ளும் நிகழ்ந்து விட்டிருக்கிறதா? என சொல்கள் மனத்தில் பெருகின. மெய்தான். தன்னை அதிர வைத்த அச்சத்தை அவன் என்றைக்கும் அடைந்ததில்லை. ஆறு ஏழு குகைவாழ் இயக்கர்களே ஒன்றுதிரண்டு வந்தாலும் அஞ்சுகிற மனதில்லை அவனது. அஞ்சுகிற உடம்புமில்லைத்தான். அய்ந்து முழ உயர மேனி. தோள்வரை தொங்கும் விரிசடை. அடிக் கமுகின் வலிய கால்கள். கைகளும் அவைபோல. வெய்யிலும், மழையும், பனியும், காற்றும் சிதைக்க முயன்று முடியாது தோற்றது அவனிடத்தில்தான் நடந்திருந்தது. அந்தப் பெருமைகளை அவனே சிலவேளைகளில் நெருக்கமானவர்களிடம் கூறுவதுண்டு. தனக்குள்ளோ அவற்றை எண்ணிக் கர்வமாய்ப் படுவான்.



முன்னிரவு நேரத்தில் தலைநகருள் நுழைந்திருந்தாலும் அவனால் அரண்மனைக்குள் தடையேதுமின்றிச் சென்றிருக்க முடியும். அகாலத்தில் அது தகாது. அவனுக்கிருந்த அரசனைச் சந்திப்பதற்கான அவசியம் அரசனுக்கேயானதுதான். ஆனாலும் அதை அகாலத்தில் செய்துவிட அவன் மனது சம்மதிக்காது. அதனால் இரவோடிரவாகத் தலைநகரை அடைவதின் ஆவல் அவனுக்குக் கெட ஆரம்பித்துவிட்டது. இடையே எங்காவது

தங்கி மறுநாள் அதிகாலையில் பயணத்தைத் தொடங்குவதுதான் உசிதமென்றாகினான்.

நாகன் அன்றைக்கான தங்குமிடத்தைக் கண்களால் துளாவியவாறு கவியும் இருட்போர்வைக்குள் போய்க்கொண்டிருந்தான். இடையே ஒரு குறுகலான வழி பிரிந்து புதர்களுக்குள்ளால் ஓடி காட்டுள் மறைந்திருந்தது. மனித இருப்பில் நம்பிக்கை எழுந்தது. நாகன் மேலே யோசிக்காமல் திரும்பி அவ்வழியில் நடந்தான்.

வெகுதூரம் போகுமுன்னரே, “நாகரே!“ என்று தடித்த குரலின் அழைப்பொன்று காட்டின் இடையிலிருந்து கேட்டது. திரும்பிப் பாராமலும், ஞாபகத்தைப் புரட்டாமலும்கூட அது யாரின் குரலென்பதைச் சட்டெனவே அடையாளம் கண்டுகொண்டான் நாகன். வியாழியை அவனால் அத்தனை இலகுவில் மறந்துவிட முடியாது.

அவனது பயணங்கள் முடிந்தவோ தொடங்குமுன்னவோவான ஏதோவொரு பொழுதில், அத் தீவைச் சுற்றிய ஏதோவொருவிடத்தில் அவர்கள் சந்திப்பு நடந்துகொண்டேயிருந்தது. அவனது இன்னொரு பயணத்தின் முடிவிலும் அங்கே மறுபடி வியாழி. அவன் நாடிச் செல்லாமலே வலிய வரும் இன்பமாகவிருந்தாள் வியாழி. அவளை அணுகுவதில் அதிக சுகிப்பின் பயமிருந்தது அவனுக்கு. அவன் தூர தேசங்கள் பயணியாய்ப் போன கடந்த இரண்டு வருஷ காலத்தில் அவளை அவன் நினைக்கவில்லை. காமமெழுந்து சதிரிடா வயது ஆகியவன் அவன். எனினும், ஆசையே இல்லையென்றுமில்லை. கழிக்கவேண்டியிருந்த இரவுப்போதும் அவள் இடம் செல்ல அவனை உந்தியது. நாகன் தன் மேலில் போர்த்தியிருந்த போர்வை விலகிக் கையினில் விழத் திரும்பினான்.

வியாழி ஒரு குச்சு வாசலின் முன்னாலுள்ள மரத்தோடு அட்டகாசமாக நின்றுகொண்டிருந்தாள்.


நாகன் மெல்ல அவளை நெருங்கினான். அவளது திணிந்த முகத்தில் கண்களை வீசினான். கண்கள் சிவந்திருந்தாள் இயக்கி. பானகம் ஏதோ அருந்தியிருந்தாளென்று புரிந்தது. ஈஞ்சு மூங்கில் ஓலை தழைகளால் வேயவும் அடைக்கவும் பட்டிருந்த அந்தக் குச்சுக்குள் இருள் பரந்திருந்தது. குழந்தையொன்று தூங்கிக்கொண்டிருந்திருக்கவேண்டும். அசைவில் தெரிந்தான் நாகன். போன தடவை சந்தித்தபோது அவளுக்கு அந்தளவு சின்னவயதில் குழந்தை இருக்கவில்லை. அதனால் அதற்கு இரண்டு வயதுக்குள் இருக்கவேண்டுமென அவனால் அனுமானிக்க முடிந்தது. அப்போது அவளோடு கூட வசித்துக்கொண்டிருந்தவனின் பிள்ளையாக இருக்கலாமென்று கருதுதலும் சுலபத்தில் கூடியது. அவன் எங்கேயோ? என்றொரு எண்ணமெழுந்தது நாகனிடத்தில். வளர்ந்த ஒரு மகனும் வியாழிக்கு இருந்தான். அவன் எங்கே.

முன்னர் வேறொருவன் அவளோடு கூட இருந்துகொண்டிருந்தான் கணவனாக. அவனை தான் விரட்டியடித்துவிட்டதாக அவளே சொல்லியிருந்தாள். அவன் ஊண் மிகவுண்டான் என்பது அவளது குற்றச்சாட்டு. அவள் தனியாகவேதான் என்றுமிருந்திருக்கிறாள்போலவே அப்போது நினைக்கத் தோன்றியது நாகனுக்கு. ஏறக்குறைய உண்மையும் அதுதான். புணர்ச்சியும் உறக்கமும் உணவுமான உலகம் அவளது. புற உலகத்து விதிகள் அவளைக் கட்டுப்படுத்துவதில்லை. இயக்கர்களில் ஊர் துறந்தோரினதே தனியுலகம்தான். வியாழியினதோ இன்னும் தனியானது. அவள் ஒருவனோடு மட்டும் வாழ்தல் அறியாதவள். அவளுக்கு வெளியே வேறு உலகமில்லை. இருக்குமெனில் அதில் அவளுக்குக் கரிசனையில்லை. தன்னுலகத்தில் தன்னிச்சைகளில் அவளது வாழ்வு நிலைகொண்டிருந்தது. நகரோ கலையும் கல்வியும் அழகும் செல்வமும் பூண்டது. ஊர்கூட உழைப்பு, உறவுகளின் அணைப்பு என்றும், அவ் வாழ்தலுக்கான வழிபாடுகள், நியமங்களென்றும் ஒரு கட்டுமானத்துக்குள் அடங்கியது. அவளதோ உணர்ச்சியும், உணவும், உறக்கமும் என்றுமட்டுமாகி கட்டுமானம் உடைத்தது. நாகன் கண்ட தேசங்களில் வியாழியினது வியக்கக்கூடிய வாழ்க்கை.

அவன் எண்ணி முடியுமுன்னே தொலைவிலெங்கோ பார்வை பதித்திருந்தவள், நிதானமாகித் திரும்பி,

“இந்தநேர வாக்கில் எங்கைபோலே?“ என்று கேட்டாள்.

“தலைநகருக்கு“ எனப் பதிலிறுத்தான் நாகன்.



“கண்டும் கன காலம்போல.“

“ரண்டு வருஷம்.“

“அவ்வளவு காலமோ?“

“ம்!“

“இருக்கும்தான். எத்தனை மாரி வந்துபோனது! அப்ப போனதுக்கு இப்பதான் திரும்புகையா?“

“ம்“ என்றான் அவன்.

“அங்க பார்த்தீரா, கரும்புகார்?“

“ம், கண்டேன்.“

“கண்டுமா அந்த வேகத்தில் நடை?“

“எங்காவது தங்கிப் போக இடம் தேடித்தான் வந்தேன்.“

“சரி, இஞ்ச தங்கிப் போறதுதானே? வாரும் உள்ளே“ என்று வழி விலகினாள் வியாழி.

அப்போதுதான் இன்னொரு பெரிய உருவமும் அங்கேபடுத்திருப் பதைக் காணக் கூடியதாகவிருந்தது

நாகனால். நாகன் தயங்கினான். அவளது வாழ்வில் எதிர்ப்பட்ட இன்னு மொருவனோ? நாகனின் விழிகள் வியாழியை நோக்கித் திரும்பின.

அவனது விழிகளின் வினாவை அறிந்துகொண்ட வியாழி அவசரமாய்ச் சொன்னாள்:

"அப்பிடியில்லை அப்பிடியில்லை"

"அது என் சின்னப்பிள்ளை. மிகச் சின்ன வயது. நீர் வரக் கொஞ்சம் முந்தித்தான் கரும்புகாரும், மலை வழியும் கண்டு அஞ்சிக் கொண்டு இந்தப் பாதையில் வந்து கொண்டிருந்தது. நானேதான் கூப்பிட்டு படுத்திட்டுப்போகக் கேட்டன்."

நாகன் சமாதானமடைந்தான். ஆனால் பேச்சரவத்தில் எழும்பிய அம் மனிதன்தான் கலவரத்தோடு நாகனை நோக்கினான்.

அவன் பார்வைக்கு வியாபாரி போலத் தோன்றினான். இளமையாகவிருந்தான். ஒற்றன் போல் அவன் பார்வை நாகனில், வியாழியில் ஏற இறங்க மொய்த்த படியிருந்தது சந்தேகம் கிளர்த்தி. வியாபாரியெனில் கூட்டமாக வந்திருக்கக்கூடிய தன் மற்றைய வியாபார நண்பர்களை எங்கே தொலைத்தானோ?

இளம் விருந்தினனின் முகத்தில் பயப் பரவலைக் கண்ட வியாழி நாகன் தனக்கு வேண்டிய வனென்றும், அரசனின் அணுக்க காரனெனவும் சொல்லி அவனைத் தெளிவித்தாள். மறுகணமே மறுபடியும் படுத்துக்கொண்டு அவன் தூங்க ஆரம்பித்துவிட்டான்.

வியர்வையில் அப்பிய புழுதிச் சுமையில் தன் உடம்பு கனப்பதாய்த் தெரிந்தான் நாகன். வியாழி காட்டிய குளத்தில் அவன் குளித்துவிட்டு வர, தேனில் போட்டு வைத்திருந்த இறைச்சியும், மதுக் குடுவையுமாக நின்றுகொண்டி ருந்தாள் அவள். உண்டும் அருந்தியும் அவளது உபசாரத்தை ஏற்ற பிறகு, நிதானமாய் வியாழி நோக்கித் திரும்பினான் நாகன்.

கண்கள் அவளை அளைய ஆரம்பித்தன.

அவள் மென்தோலாலான ஆடையொன்றை இடுப்பில் கட்டியி ருந்தாள். நெஞ்சகம் வெறுமை யாய்க் கிடந்தது. இரண்டு கரு முலைகளும் இன்னும் மதர்த்து நிமிர்ந்துநின்று திமிறிக் கொண்டி ருந்தன. அகன்ற இடுப்பின் கீழே வலிதோடு சதைத் திரட்சி பெற்ற கால்கள் இறங்கியிருந்தன. அந்த ஆகிருதியோடு அவளால் எவரையும் அச்சப்படவைக்க முடியும். ஆனாலும் அப்போது ஒரு சாந்த நிலையிலும், காம எறிகையு டனும் அவள் நின்றுகொண்டிரு ந்தாள். அப்போது அவள் வெகு அழகுபோல் தோன்றினாள் நாகனுக்கு.

தன்மேல் பதியும் நாக பார்வையினை மெல்லிய கிறக்க த்தோடு மேனிச் சூடு கிளர அனுபவித்துக் கொண்டிருந்தாள் வியாழி. குடுவையை எடுத்துமேலும் தனக்குப் போதையேற்றினாள்.

சிறிதுநேரத்தில் நாகன் கேட்டான்: "உன்னோடு இருந்தானே ஒருத்தன், இப்ப எங்கே?"

"முசுறன்! போய்விட்டான் முடிந்து போனான்."

"எப்பிடி?"

"சிங்கம் கடித்துத் தின்றுவிட்டது."

"அய்யோ! எப்பிடி நடந்தது?"

வியாழி சொன்னாள்.

அவளுக்கு வேட்டை பிடித் திருந்தது. கும்பலைவிட்டுத் தனியாய் அலைய ஆரம்பித்ததன் பின்னர் வேட்டையே ஜீவனோபாயத்து க்கான ஒரே மார்க்கமாகவும் இருந்ததில் பிடிப்பினைச் செயற் படுத்துவது அவசியமாகவும் போய் விட்டிருந்தது. இச்சாபூர்வமான திரிதலில் அவள் லயம் கண்டி ருந்தாள். நீண்டகாலம் அவள் குழந்தைப் பேறு காரணமாய் வேட்டைக்குச் செல்லமுடியாதவளாக இருக்கையில் முசுறனே வேட்டை யென்று போய் இயன்றதை அடித்து வந்து போட்டான். தோள் வலுவிருந்தும் வில் அம்பின் தேர்ச்சி குறைந்திருந்தவனால் பெரிதாக என்ன இரையை அடித்து வந்து போட்டிருக்க முடியும்? வியாழி குழந்தைப் பேறு முடிந்து சுகதேகம் கொள்வதன் முன் னேயே அவனையும் அழைத்துக் கொண்டு வேட்டைக்குப் புறப்பட் டிருந்தாள் ஒருநாள். கோடையின் அனல் திசைகள்தோறும் பறந்து கொண்டிருந்த நாளாயிருந்தது அது. அடர்ந்த காடடைய இடுப்பிலிருந்த குழந்தை தடையாகவிருந்ததில், அன்றைய வேட்டையை கரைக் காடுகளிலேயே மையப்படுத் தியிருந்தாள் வியாழி. வெகுநேரம் காட்டில் அலைந்தும் தோதான மிருகமேதும் அவர்களது பார்வைக்கு அகப்படவில்லை. நேரம் மத்தியானத்தைக் கடந்து கொண்டி ருந்தது. பேற்றில் வியாழி மிகவும் வாடிப் போயிருந்ததில் அன்றைக்கு மிருக தடத்தைக் கண்டு வேட்டையை முன்னெடுத்தது பெரும்பாலும் அவனாகவிருந்தான். நேரமாக ஆக களைப்பும் பின் பசியும் தாகமும் மேவிப்போனாள் வியாழி. நடை நலிந்தது. சிறிது நேரத்தில் அவள் முசுறனைவிட்டுப் பின்தங்கியும் போனாள். முசுறன் திரும்பிப் பார்த்து அவள் வருத்த த்தைக் கண்டுகொண்டு அவளை வந்தடைந்து அங்குள்ள பாறை-யொன்றில் அமரவைத்துவிட்டுத் தண்ணீர் தேடிவரப் போனான். அவன் போய் வெகு நேரமில்லை. திடீரென முசுறனின் அலறல் கேட்டது. கூட மிருகத்தின் ஆக்ரோஷமான கர்ச்சனை. வியாழி இயலாமை மறந்தாள், பாய்ந் தெழுந்து சத்தத் திசையைநோக்கிப் பறந்தாள். எருத்து மயிர் சிலிர்த்து நிற்ப, சிங்கமொன்று முசுறனைக் கழுத்துப் பிடியில் பிடித்திருந்தது. முசுறன் எதிர்ப்படங்கி சிங்கத்துக்கு அனேகமாகத் தன்னைத் தோற்கக் கொடுத்துக் கொண்டிருந்தான். வியாழி கதிகலங்கிப் போனாள். ஆனாலும் கணம் தாமதமற்ற

சுதாரிப்போடுவில்லை உயர்த்தினாள். வளைத்த வில்லிலிருந்து சீறிப் பறந்தது ஒரு விசை அம்பு. அது சிங்கத்தின் பளுவினுள் புகுந்ததும் சிங்கம் சினத்தோடு ஓரவிழி திருப்பியது வியாழியின் திசையில். பின்னர்தான் தன்னுள் புகுந்த அம்பின் வலியை அது உணர்ந்ததுபோலும். உயிர் வகிரும் எய்திறனுடன் அம்பு உள்ளே புகுந்திருந்ததில், எய்தக்கூடிய மரண சாத்தியத்தைத் தெரிந்ததுபோல் முசுறனின் மார்பை நிலத்தோடு அழுத்தியிருந்த தன் முன்பாதம் விலக்கிக்கொண்டு மெல்ல நடந்து அடவியினுள் மறைந்தது. வியாழி கிட்ட ஓடிப்போய்ப் பார்த்தாள். சிங்கப் பற்கள் முசுறனின் கழுத்தை பெரும்பாலும் அறுந்து தொங்கும் நிலைக்காக்கிவிட்டிருந்தன.
ஏற்கனவே செத்துப் போயும் விட்டிருந்தான். வியாழி செய்ய எதுவும் இருக்கவில்லை. குகை யொன்று தேடி அதனுள் அவனை இழுத்துப்போய் வைத்து கல்லுகளெடுத்து மூடிவிட்டுத் திரும்பினாள். அவன் அவளுக்கு இதமாக நடந்தவன். அவனுக்கு முசுறு என்பது காரணமான பெயராகத்தான் வந்தது. அவன் எல்லோரோடும் வெடுவெடுப்பாகவே பேசுவான். எடுத்ததற்கெல்லாம் எவரோடும் எரிந்தும் விழுந்தான். ஆனாலும் வியாழியோடு அவள் ஏவியது செய்து பொறுமையாகவே வாழ்ந்தான். வியாழிக்கு இரண்டு தினங்கள் துக்கம் துக்கமாகவே வந்துகொண்டிருந்தது. பின்னர் எல்லாம் இயல்பாகிப்போனது.

"முசுறன் செத்து இப்ப ஆறேழு நிலாக் காலம் ஆச்சு" என்று முடித்தாள் அவள். மரணம் அதற்குமேல் அவர்களுக்குப் பாதிப்பைச் செய்வதில்லைத்தான்! நாகன் எண்ணினான். பிறகு கேட்டான்: "நீ இங்கு வந்து எவ்வளவு காலம்."

"கொஞ்சம்தான். கெதியில் வேறிடம் போய்விடுவேன்."

"உன் மகன் எங்கே."

"வருவான்.
இருட்டினால் நாளை
வருவான்."

தான் வெள்ளென
எழும்ப
வேண்டுமென்றும்,
வெளியே அந்த
வெங்கிணாந்தி
மரத்தோடு படுத்தால்
பறவைகளே
துயிலெழுப்பி
விட்டுவிடும் என்றும்
கூறிக்கொண்டு நாகன்
வெளியே நடந்தான்.
அவனை விழுங்கும் வேட்கையோடு
பார்த்தபடி மறுப்பின்றி
நின்றுகொண்டிருந்தாள் வியாழி.
அவன் வெளியே படுப்பதுதான்
தனக்கு வசதிபோல் அவளது
விழிகளில் மெல்லிய சிரிப்பின்
வரிகள்.

(தொடரும்)

தமிழன் கால்வாயும் சுற்றுச் சூழலும்

மறவன் புலவு சச்சிதானந்தம்

கடலின் தரையை ஆழமாக்கி, கால்வாயாக்கும் மனித முயற்சி, பாரிய கப்பல்களை அக்கால்வாய் வழியாக அனுப்பும் மனித முயற்சி, இவை அச்சூழலின் இயல்பு நிலையைப் பாதிக்கும் என்பர்.

கடலின் தரை, தாங்கி நிற்கும் நீர்த்தொகுப்பு, மேலே காற்று மண்டலம், தலையிலும் நீரிலும் காற்றிலும் வாழும் தாவரம் மற்றும் விலங்கு உயிரினங்கள் - இந்நான்கும் தம்மிடையே ஒன்றுடன் ஒன்று இயைந்து இயல்பாகச் செயல்படும் சமச்சீர் நிலை, கால்வாயாக்கிக் கப்பலோட்டும் முயற்சி இந்தச் சீர்நிலையைப் பாதிக்கிறது, மீட்டுக்க முடியாத அளவுக்குப் பாதிக்கிறது, சேதுகால்வாய்த் திட்டத்தை எதிர்ப்போரின் வாதங்கள் இவையே.

சூழலின் நான்கு முகங்களாகத் தரை, நீர், காற்று, உயிரினம், மனித முயற்சியின் இரண்டு முகங்களாகக் கால்வாய் தோண்டிப் பராமரித்தல், கப்பல் ஊட்டல்.

தரை:

ஈராண்டுக் காலத்தில் 75கி.மீ. நீளம், 300 மீ. அகலம், சராசரி 4 மீ. ஆழமுமாகத் தோண்டி, 8 கோடி கன மீ. சேற்று மணலை (பாக்கு நீரிணையின் தரையில் 17மீ. ஆழம் வரை கற்பாங்காக இல்லை) அள்ளி வடக்கை வங்காள விரிகுடாவின் 1,000மீ. ஆழமுள்ள கடற்பகுதிக்குள்ளும் தெற்கே மன்னார் வளைகுடாவின் 500 மீ. ஆழமுள்ள கடற்பகுதிக்குள்ளும் கொட்டுவர்.

இத்தகைய மணல் அகழ்வுப் பணிகள் துறைமுகப் பகுதிகளில் வழமை, கொச்சித் துறைமுகத்தில் ஆண்டு தோறும் 1 கோடி கன மீ. வரை அகழ்ந்து வாரி, அரபிக் கடலுள் கொட்டுவர். நெதர்லாந்துத் துறைமுகங்களில் ஆண்டுக்கு 4 கோடி கன. மீ சேற்று மணலை அகழ்ந்து வாரி அத்திலாந்திக் கடலுள் கொட்டுவர். சென்னை தொடக்கம் கொல்க்த்தா வரையுள்ள துறைமுகங்களில் இவ்வாறு தொடர்ந்து அகழ்வதும் தூர்வாருவதும் ஆழ் கடலுள் சேற்று மணலைக் கொட்டுவதும் வழமை. இந்தியக் கரையோரத் துறைமுகங்களில் தரையில் தொடர்ந்து படியும் சேற்று மணலை அகழ்ந்து பாரி ஆழ்கடலுள் கொட்டித் துறைமுகங்களைக் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதாக வைத்திருக்க இந்தியத் தூர்வாரும் கழகம் நீண்ட காலமாகப் பணிபுரிந்து வருகிறது. இந்தக் கழகமே தமிழன் கால்வாயையும் அகழவுள்ளது. சூற்றுச்சூழலைப் பேணுவதில் உலகத்தர நியதிகளை இந்த நிறுவனம் கடைப்பிடித்து வருவதால், முன் அநுபவங்கள் தமிழன் கால்வாயைத் தோண்டலிலும் பயன்படுமாதலால் சூழலின் சமச்சீர்நிலை பெருமளவுக்குக் கெடாது.

கால்வாயைத் தோண்டியபின், தொடர்ந்து படியும் சேற்று மணலை அவ்வப்போது தூர்வாருவர். பாக்கு நீரிணையில் ஆண்டுக்கு 0.001மீ. பருமனுக்குச் சேற்று மனல் படிவதாகச் சந்திரமோகனும் பிறரும் (2001) ஆய்ந்து கூறினார். கோடிக்கரை அருகே ஆண்டுக்கு 0.24 மீ - 0.29 மீ. பருமனுக்குச் சேற்று மணல் படிவதாக எஸ்.எம். இராமசாமியும் பிறரும் (1998) பின்னர், விக்டர் இராசமாணிக்கமும் (2004) ஆய்ந்து கூறியுள்ளனர். எவ்வாறாயினும் ஏனைய கிழக்குத் துறைமுகங்களைப் போலச் சேதுக் கால்வாயிலும் பராமரிப்பு தூர்வாரும் பணி இடையீடின்றித் தொடர வேண்டும் என்பதையே இந்த ஆய்வுகள் கூறுகின்றன.

பாலைவன மணல் சொரிந்து நிரவாமல் சூயசுக் கால்வாயைத் தொடர்ச்சியாகத் தூர்வாருவதும், பனாமா, சென் லாரன்சு போன்ற கால்வாய்களில் இடையீடின்றித் தூர்வாருவதும் வழமையான பணிகள், சூழலுக்குப் பாதிப்பு மிகக் குறைவு.

பாக்கு நீரிணையின் தரைப் படிமங்களில் ஏற்கனவே தார், எண்ணெய்ச் சாயல்கள் உள்ளதாக தேசிய சுற்றுச் சூழல் பொறியில் ஆய்வு மையம் (2004) கூறியுள்ளது. இது உலகளாவிய எந்திரமயமாக்கலின் விளைவு. கட்டுமரம் தொடக்கம் பாரிய கப்பல் வரை பெட்ரோலிய எரிபொருளை நம்பி இருப்பதால் ஒதுக்குக் கடலான ஆழம் குறைந்த பாக்கு நீரிணையின் தரையும் பெட்ரோலியக் கசிவுகளைத் தாங்குவது வியப்பன்று. புதிதாக இக்கசிவுகளை உணவாக்கும் நுண்ணுயிரினங்கள் கடலில் இருப்பதால், காலப்போக்கில் இக்கசிவுகள் மறைவது உலக-ளாவிய நிகழ்வு.

சேதுகால்வாய்த் திட்டத்தை எதிர்ப்போரின் வாதங்கள் சூழலின் நான்கு முகங்களாகத் தரை, நீர், காற்று, உயிரினம், மனித முயற்சியின் இரண்டு முகங்களாகக் கால்வாய் தோண்டிப் பராமரித்தல், கப்பல் ஊட்டல் ஆகியவை

நீர்:

ஐராவதியும்,

தொடர்ச்சி 17 ஆவது பக்கம் ...

ஆயுதப் போரில் வெற்றி! பரப்புரைப் போரிதோல்வி!

அமெரிக்கப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆயுதப்போரை கியூபா வெற்றிகொண்டது. அமெரிக்க முதலாளித்துவ அரசின் அருகேயே ஒரு பொதுவுடமை அரசை கியூபா அதிபர் ஃபிடல் காஸ்ரோ அவர்கள் படைத்திருக்கின்றார். அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் விதித்திருக்கும் பொருளாதாரத் தடைக்கு எதிராக பெரும் அவலங்களுக்கு மத்தியில் கியூபா முகம் கொடுத்து வருகின்றது. அந்த நாட்டின் பெரும் வருமானமாக உல்லாசப் பயணத்துறை விளங்கி வருகின்றது.

கியூபா செல்பவர்கள் விபச்சாரம் விருப்பிப் போபவர்கள் என்று அமெரிக்கா தொடுக்கும் பொய்ப்பரப்புரைப் போரில் கியூபா வெற்றியடையவில்லையோ என்ற ஐயம் பலருக்கும் எழுகின்றது.

ஆய்ந்தறிந்து வெளியிடும் ஏடுகள் என்று தம்மை வெளிப்படுத்தும் சில பார்ப்பன பொதுவுடமை வாதிகளின் ஏடுகளில் கூட கியூபாவில் விபச்சாரம் நடைபெறுகிறது என்று சொல்லப் படுகின்றது. இவர்கள் கியூபாவுக்கு போகாத பார்க்காத ஆனால் தரவுடன் எழுதுகிறோம் என்று தோரணை ஏற்பட எழுதுபவர்கள்..

சட்டவிரோதமாக விபச்சாரம் அமெரிக்கா, கனடா, இந்தியா போன்ற நாடுகளில் நடைபெறவில்லையா? அமெரிக்காவின் மான்கற்றன் 42 வீதி எதற்குப் பெயர்பெற்றது? அங்கு பாலியல் சார்ந்த பொருட்களும் சேவைகளும் மட்டுந்தான் நாள் ஒன்றுக்கு விண்ணை முட்டும் விலை பேபவை என்ற கூற்றை அமெரிக்க காவல்துறையால் மறுக்கமுடியுமா?

உலகப் பயங்கரவாதியாக தானே இருந்து வரும் அமெரிக்கா சிறு போராட்டக்குழுக்களைப் பார்த்து பயங்கரவாதப்படட்டம் கட்டுவதுபோன்றே பாலியலில் பாதள உலகம் வைத்து கொண்டிருக்கும் அமெரிக்கா, கியூபாவை அரசு பெண்களை விபச்சாரம் செய்யப்பாவிக்கின்றது என்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றது.

கியூபாவில் ஒரு வெளிநாட்டார் அந்த நாட்டு பெண்களுடன் வீட்டிலோ அன்றி உரிமம் பெறாத இடங்களிலோ தங்க முடியாது. அவ்வாறு மீறுபவர்களுக்கான தண்டனை பல ஆண்டுகள் சிறை வரை நீண்டது. கியூப நாட்டு குடியானவரை மணமுடிப்பதற்கு அங்கு செல்பவர் தான் செல்லும் நாட்டில் உள்ள கியூபாத் தூதரகத்தில் திருமணம் ஆகப்போவதற்கான முன் உரிமம் பெறவேண்டும். அவ்வாறு பெற்றுச் செல்பவர் அங்கு உள்ள திருமணப்பதிவாளரிடம் முறைப்படி திருமணம் செய்தபின்னரே விடுதிகளிலோ அன்றி வீட்டிலோ தங்கமுடியும்.

அதிபர் ஃபிடல் காஸ்ரோவை கொலை செய்வதற்கு அமெரிக்கா தீட்டிய 32 இக்கும் மேற்பட்ட கொலைச் முயற்சியை கியூபக் காவல்துறை முறியடித்திருக்கின்றது.

தொலைபேசி மணி அடித்தவுடன் தொலைபேசியில் யார் அழைக்கின்றார்கள் என்று எண்ணைப் பார்க்கின்றார். தமக்கு தேவையானவர்கள் அழைத்தால் இதமான ஓசை எழுப்பும் விதமாக எல்லாம் இப்போ கைத்தொலைபேசிகள் வந்து விட்டன. யார் அழைக்கின்றார்கள் என்று தொலைபேசி எண்ணைக் காட்டும் புரோகிராமை ஒட்டோவாவில் உள்ள நோரல் நிறுவனம் செய்து முழுமைப் படுத்தியது. இந்த புரோக்கிராம் சிபிளஸ்பிளஸ் என்ற புரோகிராம் மொழியில் எழுதப்பட்டது. சுமார் 25,000 வரிகளுக்கு மேல் கொண்ட இந்த புரோக்கிரமின் வரிகள் பலவற்றை கால்ரன் பல்கலைக்கழத்தில் படித்த தமிழர்கள் பலரும் எழுதியிருக்கின்றனர். அவர்களில் ஜெகா, மணிமாறன் கனகசபாபதி ஆகியோரும் அடங்குவர்.

குடிவரவாளரின் அரசியல்





புதிய சனநாயகக் கட்சியைச் சேர்ந்த நகரசபை உறுப்பினர் ஒலிவியா. சீனாவைப்பிறப்பிடமாகக் கொண்ட புலம்பெயர்ந்த பெண்மணி. தற்பொழுது ஸ்படைனா தொகுதியின் நகரசபை உறுப்பினர்.

இந்நாட்டில் புதிய குடிவரவாளர் களுக்கும் ஆங்கிலம் தெரியாதவர் களுக்கும் உதவும் பணியில் தொடக்கத்தில் இருந்துள்ளார். பொதுமக்களுக்கு ஆங்கிலத்தில் படிவங்களை நிரப்புவதற்கு, தாய், தந்தை என உறவினர்களை கனடாவுக்கு 'ஸ்பொன்சர்' மூலம் எடுப்பதற்கும் உதவிசெய்துள்ளார்.

ஆனால் நாளாந்த நடைமுறையில் நிறைய அரசுத் திட்டங்கள் மக்களை நேரடியாகச் செல்லவில்லை என்பதை அறிந்தார்.

பொது மக்களில் குறிப்பாக புதிய குடிவரவாளர்களில் வறுமையுற்றோர், முதியவர், ஆங்கிலம் தெரியாதவர்கள் எனப் பலதரப்பட்டவர்களுக்கு அரசின் உதவிகள் சரியாகச் சென்றடைவதற்கு பல தடைகள் இருப்பதை கண்டார். அவற்றில் அரசியல் மூலமான மாற்றத்தைக் கொண்டுவரும் நோக்கோடு தன்னை அரசியலில் ஈடுபடுத்தினார். பல வருடங்களாக நகரசபை உறுப்பினராக இருந்துள்ள இவர் பாராளுமன்றத் தேர்தலிலும் கடந்த தடவை போட்டியிட்டுள்ளார்.

ஒரு பெண்ணாக, குடிவரவாளராக, நகரசபை அங்கத்தினராக இருப்பதால் மக்கள் எதிர்கொள் ளக்கூடிய சிக்கல்களில் அவரால் எளிதில் ஈடுபட்டு தீர்க்கக் கூடியதாக இருக்கிறது என்கிறார்.

எடுத்துக்காட்டாக 911 அழைக்கும் போது இப்பொழுது பலமொழிகளில் சேவைகிடைக்கிறது என்பதை மக்களுக்கு அறியப் படுத்தவேண்டும். இவ்வாறு ஏற்கனவே வழங்கப் பட்டுவருகின்ற பல சேவைகளை மக்களுக்கு தெரி விப்பது தேவை. இவற்றின்கான வழிவகைகளை செயற்படுத்துவது ஒலிவியாவுக்கு முக்கியமாகத் தெரிகிறது.

தன்னுடைய மொழி அறிவு பற்றியும் அதைத்தான் இலக்கணப் பிழையுடன் பாவிப்பதையும் வெளிப் படையாக ஒப்புக்கொள்கிறார். தான் சீன இனப் பின்னணி உடையவர் என்பதால் சீன மொழியில் இல்லாத ஒருமை பன்மைப் பயன்பாட்டை ஆங்கிலத்திலும் விட்டுவிடுவதாக நேர்மையுடன் கூறுகிறார்.

ஒலிவியாவின் ஆங்கிலம் இலக்கணத்தில் சிக்கல்களை உடையது. ஆனாலும் அதை ஒரு குறையாகக் கொள்ளாது சவாலோடு உலாவருகிறார்.

இதுவரையில் நடைமுறையில் அரசுத் திட்டங்களில் பெரிதாக அவரால் ஏதாவது மாற்றங்களைக் கொண்டு வர முடிந்ததா என்றால் இன்னமும் இல்லை என்பதே விடை.

ஏதாவது செய்யவேண்டும் என்ற உண்மையான ஈடுபாட்டோடு

சந்திப்பும் உரையாடலும்: அபி சிங்கம்

மொழியாக்கம்: அலைமகள்

செயற்படுதல் பல வேலைகளைச் செய்விக்கும் என்ற நம்பிக்கை இவருக்குண்டு.

சிறுபான்மை இனக்குழுக்கள் தங்களை வெளிப்படுத்துவதில்லை - பாராளுமன்ற நிலையிலோ, மாகாணசபை வழியிலோ, நகரசபையிலோ முன்நிலைப் படுத்துவதால் தங்கள் குரல்களை ஒலிக்கச் செய்யவும் பொதுமைப் படுத்தவும் முடியும். தன்னுடைய அரசியல் ஈடுபாட்டுக்கு இதைக் காரணமாகச் சுட்டுகிறார்.

மாகாணசபை மன்றுகள், நகரசபைத் திட்டங்களில் தேர்தல் முறையில் தெரிவு செய்யப்படாமல் வெளித்தெரியும் சிறுபான்பாமைச் சமூகங்களை அரசியல் சார்ந்து இவற்றில் ஈடுபடுத்துவதற்கு புதிய சனநாயகக் கட்சி பலதரப்பட்ட வேலைத் திட்டங்களைக் கொண்டுள்ளது.

பல்வேறுவகையான இனக்குழுக்களின் சமூக நிலையங்களிற்கு சென்று அங்கு அரசியல் நடைமுறைகள் பற்றி விளக்கமளிக்கப்படுகிறது. நூலக அவர்களிற்கு வழிகாட்டுதல், நூல் நிலையங்களை அதிக சிறுவர்கள் பாவிப்பதால் அவற்றில் சில சேவைகளும், பாடசாலை நேரத்திற்குப் பின்னான நடவடிக்கைகள் போன்றனவும் இவற்றில் அடக்கம்.

தற்பொழுது தொடக்கப் பாடசாலைகளில் சத்துணவுத் திட்டம் நடைமுறையில் உள்ளது. இதனால் ஏறக்குறைய 78000 பிள்ளைகள் மதிய உணவையோ, காலை உணவையோ பெறமுடிகிறது. சிறுவர்களுக்கான பல்வைத்தியச் சேவையில் 12 வயதுவரைக்கும் இலவச வைத்தியசேவை நடை முறையில் உள்ளது. இதை இன்னும் அதிக வயது வரை அதிகரிக்க பரப்புரை செய்யவும் திட்டமிட்டுள்ளதாக ஒலிவியா சொல்கிறார்.

> **ஒலிவியா தனது மொழிப்பயன்பாட்டை குறை... கொள்ளாது சவாலோடு உலாவருகிறார்...சிறுபான்மை இனக்குழுக்கள் பாராளுமன்ற மாகாண... நகரசபையிலோ தங்களை ... தங்கள் குரல்களை ஒலிக்கச் ...**

பல்பண்பாட்டுச் சமூகத்தில் சிறுபான்மை இனக் குழுவினர்கள் பாரளுமன்றத்தில் தங்களை முன்னிலைப்படுத்துவதன் மூலம் தங்கள் சமூகங்களின் தேவைகளில் கூடுதலாக ஈடுபடமுடியும் என்கிறார்.

ஸ்காபுரோ போன்ற குடிவரவாளர்கள் அதிகமாக வாழும் சிறுநகரங்களில் அரசியல் நடைமுறையில் மக்கள் தங்களை சமூக பண்பாட்டுத் தரத்தில் ஈடுபடுத்துவதற்கு கல்விச்சபை போன்ற வற்றில் முதலில் தம்மை முன்நிலைப்படுத்தல் வேண்டும்.

கல்விச்சபை எப்போதும் அதிகாரங்களையுடையது. நிறைய அரசதிகாரச் செயற்பாடுகளுக்கு கல்விச்சபையே காரணமாயிருந்துள்ளது.

தற்பொழுதுள்ள நடைமுறையில் பெண் என்ற நிலையில் பலரின் குரல்கள் பாராளுமன்றத்திலே கேட்பதில்லை.

உண்மையில் பகுதிப் பிரதித்துவத்தைக் கொண்டுள்ள நாட்டில் பெரிய அளவில் பொதுமக்கள் வாக்களிப்புக்கு மதிப்பளிக்கிறார்கள்.

பாராளுமன்றம், சபைகள், கல்விச் சபைகள் போன்றவற்றில் பொதுமக்களைப் பங்களிக்கச் செய்தல் முக்கியமாக்கப்படுகின்றது. பல்வேறுபட்ட சமூக நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்தல், பட்டறைகள் நடத்துதல் போன்றனவாகும்.

இளைஞர்களுக்கிடையே வளர்ந்துவரும் வன்முறையைத் தடுப்பதற்காக அவர்களைப் பல்வேறுவிதமான வேலைத் திட்டங்களில் ஈடுபடுத்துகின்றது புதிய ஜனநாயக் கட்சி. இளைஞர்கள் அமைப்புகளை நிறுவுதல், இளைஞர்களைக் கொண்டு போக்குவரத்து நிலையங்கள், வியாபார அங்காடிகளில் தொண்டுகளைச் செய்வித்தல், சேவைப் பயிற்சிகள் வழங்குதல், பல் வேறுபட்ட இனக்குழுக்களின் இளைஞர் அமைப்புக்களிற்கு உதவி வழங்குதல் போன்றன. இளைஞர் வேலைவாய்ப்பு சேவைகள் முதலியனவும் நடைமுறையில் உள்ளன.

வீதிகளின் வாழும் சிறுவர்கள் இவர்கள் வன்முறையின் பாதிப்பைக் கண்டிருப்பதால் இளைஞர்களின் ஆற்றலை சரியானபடிக்கு செயற் படுத்தவேண்டும். அவர்களும் தங்கள் சமுதாயத்தில் தங்களிலான பங்களிப்பைச் செலுத்த முன்வர வேண்டும். அவர்கள் சமுதாயத்தில் இணைந்து வாழ்தல், தன்னம்பிக் கையை வளர்த்தல் என தங்களை நெறிப்படுத்தவேண்டும். இவ்வாறாக ஒலிவியாவின் இளைஞர்கள் பற்றிய பார்வை உள்ளது.


தனிப்பட்ட வகையில் இவரின் கணவராக புதிய சனநாயகக் கட்சியின் தலைவர் ஜக் லெய்ரன் இருக்கிறார். குடும்பத்திலிருக்கும் பெண்ணாக, நகரசபை உறுப்பினராக தனது வேலைப் பாடுகளில் சமநிலையைப் பேணுகிறார்.

தான் சார்ந்த சீனச் சமூகத்தையும் பிற பல்லினச் சமூகங்களையும் பொறுத்தவரை "எந்தச் சமூகத்திற்கு எப்பொழுது எது யாருக்குத் தேவையோ அதன்படி அதற்காக தான் வேலைசெய்வதாக" அவர் உறுதி கூறகின்றார்.

வேலிக்குப் பின்னால்

மொழியின் பயன்பாட்டில் அம்மொழி பேசும் இனம் தன்னை வளர்த்துக் கொள்ளும். புலம் பெயர்ந்த தமிழர் பெரும்பான்மையாக வாழ்ந்த மக்களின் பண்பாட்டில் ஓங்கி அச்சாணியாகவும் பண்பாட்டு இசைவாக்கத்துக்கும் வலுச் சேர்த்தது வேலி. இதற்குப் பின்னால் பல கதைகள், இதன் பெரும் போக்கில் நாம் மறந்து விட்ட, மறக்க முயல்கின்ற நல்ல கருத்துக்களைத் தர இயல்வதற்கு ஏதுவாகவே இந்த வேலிக்குப் பின்னால்.....வேலிக்குப் பின்னால் வேரில்பழுத்த பலாப்பழம் இது சுவையில் எதனையும் விஞ்சியதே, இதனைச் சுவைத்தவர் எத்தனைபேர்? ஆனால் இதன் பின்னுக்கு ஒழிந்திருக்கும் பலாப்பழத்தின் முள் போன்ற நெருடல்கள் ஒவ்வொருவரின் இதயங்களிலும் இருப்பதை சொல்லில் வடிப்பது என்றால் இயலாது, முயல்கிறேன்

நாகாக்க..... என்ன திரைப்படத் தின் பாதிப்பா என்கிறீர்களா? இல்லை, எமது நாவில் இருந்து


மாதுளா

வரும் சொற் சிலம்பங்களை காப்பாற்றுவோம் என்கிறேன்.

அண்மையில் நண்பர்கள் பலர் திருமண விழாவின்போது ஒன்று சேர்ந்தோம். பிற மொழிச் சூழலில் பழகிய நண்பர்கள் பலரும் இருந்ததில் பல கதைகள்.

ஒவ்வொரு கனடிய டொலரையும் எறும்பு சேர்ப்பது போல் சேர்த்து பின்பு "பூப்புனித நீராட்டு சடங்கு, பிறந்த நாள் கொண்டாட்டம்" என்று தண்ணியாகச் செலவளித்துப் பின் திரும்பவும் கையில காசுக்கு வேலை என்று ஓடிக் கொண்டிருக்கும் நிலையில் கல்வியின் பயன்பாட்டை விமர்சிக்க எத்துணை அருகதையும் இல்லை. சொல்ல வந்ததை கதைப் போக் கில் விட்டிட்டனா? இல்லை... இல்ல வேயில்லை.

"எமது மொழியின் பயன்பாடு என்பது வீடீயோ படத்தைப் பார்க்கவும், தொலைக் காட்சி நாடக நிகழ்வுக் காகவும் இல்லை. அல்லது திரை இசை நடனத்தைப் பார்த்து இரசிப்பதற்காகவும் இல்லவே இல்லை. அப்படி எண்டா எங்கட ஆக்களுக்கு மொட்டைக் கடுதாசி எழுதுவதற்கா?

ஊகூம்... எனக்கு விளங்கவே இல்லை. வேலிக்கு பின்னால எதுவும் செய்வம். ஆக்களுக்கு முன்னால நாங்கள் சுத்தமானவர்கள்.

என்னங்கோ டயனசோர் மாதிரி கதை விடுறியளோ? இல்லை நினைத்துப் பாருங்கள். எது பண் பாடு? தனிமனித உணர்வுகளை மதிக்காத, மதிக்க முனையாத அத் தனை பேரும் கூட்டில நிக்க வேண் டியவர்கள்தான்.

எங்கள் சொந்தங்கள் வேண்டாம், உறவுகளும் வேண்டாம் என்று ஓடிய குடும்பம், தங்களையும் தொலைத்து விட்டு நிற்கிறது. இப்படி ஒன்றா, இரண்டா பல, இதற்கு என்னதான் கூறப் போறியள்.

போலி விழாக் களை, போலி அதிதியாக்கலை (கௌரவம்) பொதுச் சூழலில் இருந்து சிறிது தனிமைப்பட்டு நல்ல வாசிப்புக்களை தேடுங்கள். அப்போது உங்களை நீங்கள் அறிவீர்கள்.

மகிந்தன்

சிறு உதாரணங்களை அல்லது அறிவுசார் இலக்கியங்களை தனதாக்கிக் கொண்டு வாழ்ந்த வர்களை அணுகி எமது கருத்தைக் கூறும்போது அவர்கள் எப்படி ஏற்கிறார்கள் என்று பாருங்கள். உங்கள் கருத்து மனித உ ரிமைகளை மீறுவதாக இருந்தா ஏ வர்கள் எப்படி கேட்கிறார்கள் என்று பாருங்கள். அதன் பிரதிபலிப்பாக, "நாங்கள் இதனை ஏற்கிறோம் அல்லது இதைப்பற்றி யோசிக் கிறோம்" என்பார்கள்.

ஏன்! இது இவர்களின் பெருந் தன்மை.

அன்று நண்பனின் முதல் மகனின் பிறந்த நாள். அவரோ உழைத்து தன் செலவுகளை தானாக எதிர் கொள்ளும் செய்யும் நிலையில் இருப்பவன். தாயோ கூலிக்கு வேலைசெய்யும் தினக்கூலி. இரத் தத்தை வேர்வையாக்கி உழைப்பை எல்லாம் NIKE என்ற பெயர்



அ:எல்லாரையும் விட வித்தியாசமாக ஒரு அந்தப் பேரறிஞர் யோசிக்கிறார்.

ஆ: எப்பிடி?

அ: எல்லாரும் 'டாக்டர்' பட்டம் தானே வாங்கிறாங்க... நான் எஞ்சினீயர் பட்டம் வாங்க முயற்சி பண்ணப் போறேன் என்கிறர்.

ஆ: நல்லதுதானே

அ: என்ன நல்லது? காசுக்கு வாங்கிற கொளரவ பட்டத்தையெல்லோ அவர் சொல்லிறார்.

விளம்பரத்தில் வரும் பாத அணிக்கு மூல மாக்கி, தன் பிள்ளையை அறிவுள்ள வனாக்குபவள்.

இன்று மகன் கனடிய காவல்பிரிவில் தேடப்படுபவனாகவும் தாய் பாதி மனநோயாளியாகவும் ஆகி, பலரின் கேலிக்கு உள்ளாகி இருக்கிறாள். இது தேவைதானா?

பாதணி மற்றவர்கள் பார்ப்பதற்கு அல்ல பாதங்களுக்கு பாதுகாகப் பளிப்பதற்கே. உடைகள் குளிருக்கேதவிர பெயரை விளம்பரப் படுத்த அல்ல. எத்தனையோ வேறு பெயர்களில் விலை குறைவாக விற்கும் ஆடை அணிகளை வேண்டிக் கொடுத்து குழந்தைகளின் அறிவுக்குத் தீனி போடுங்கள். இல்லாவிடில் இந்நிலை தொடர நீங்களும் உடந்தையாவீர்கள்.

வியாபாரத்திற்கு விளம்பரம் தேவை. விளம்பரமே வியாபாரமாகிய நிலையை நாம் இன்று காண்கிறோம். அதில் நாம் சிக்க வேண்டாம்.

நாம் யாவரும் மனித சமூகத்தின் பிரதிநிதிகளாக முன் வரலாம். யாவரையும் மதிப்போம், கருத்துக்களுக்கு. கதைகளுக்கு அல்ல.

சுடலையில் ஆடிய பேய்

இது நடந்தது 60 வருடங்களுக்கு முதல். துண்டி மயானம் கடற்கரை ஓரமாக காட்டுப் பகுதிக்குள் அமைந்திருந்தது. அதனை பார்த்தவாறு கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சி கலாசாலை. ஆசிரியர்கள் அங்கு தங்கி பயிற்சி பெறுவதுதான் வழக்கம். இரவு சாப்பாட்டுக்கு பிறகு ஆசிரியர்களில் பலர் சுருட்டு புகைப்பர். அவர்களும் மற்ற ஆசிரியர்களும் கலாசாலையின் படிக்கட்டுகளில் அமர்ந்து கடற்கரைப்பக்கமாக இருண்டு கிடக்கும்காட்டை பார்த்தபடி பலதும் பேசிக்கொள்வர்.

சில நேரங்களில் சுடலைப் பக்கம் ஒன்று இரண்டு சிதைகள் எரிந்து புகை எழுவதையும் காணக்கூடியதாக இருக்கும். அந்த காலத்திலே மின்சாரம் கிடையாது. .இலாம்பு விளக்குகள் கலாசாலையில் தேவைப்படும் இடங்களில் எரியும். வீதிகள் இருண்டு கிடக்கும்.

இப்படியான ஒரு நாளில் ஆசிரியர் ஒருவர் சுருட்டை சப்பியபடி சுடலைப்பக்கம் திரும்பி பார்த்தார். அவருக்கு அவர் கண்களையே நம்ப முடியவில்லை. சுடலைப்பக்கம் சில சிதைகள் எரிந்து கொண்டிருந்தன. ஆனால் அவற்றில் ஒன்றுக்கருகில் தணல்கம்புகள் நடனம் ஆடுவது போல இருந்தது. தன் கண்களை நம்பமுடியாமல் அருகில் இருந்த ஆசிரியரையும் அழைத்து சுடலைப்பக்கம் பார்க்க சொன்னார். அவரும் பார்த்து அதிர்ந்து போனார். தணல் கம்புகளுடன் நடனமாடுவது பேய்தான் என்ற முடிவுக்கு வந்தனர். ஆசிரியர்களை பயம் பிடித்து கொண்டது. சுடலைப்பக்கம் அமர்ந்து புகைபிடிக்கும் ஆசிரியர்கள் இப்போது அந்த பக்கம் வருவதில்லை. இப்படி மூன்று நாட்கள் ஆடிய பேய் அதற்கு பிறகு நடனம் ஆடுவதை நிறுத்தி விட்டது. சுடலையில் ஆடிய பேய் வேறு யாருமல்ல. அந்த ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் மாணவர்களாக இருந்த எனது தந்தையாரும், அவரது நண்பரும் தான். சுருட்டு மணம் பிடிக்காத இவர்கள், ஆசிரியர்களை கலாசாலையின் மறுபக்கம் .இருந்து சுருட்டு புகைக்க வைக்க செய்த விளையாட்டு தான் அது. இருட்டுக்குள் துண்டி மயானத்தில் எரிந்து கொண்டிருந்த கட்டைகளை தூக்கிபிடித்தபடி இவர்கள் மூன்று நாட்கள் ஆடிய நடனம், கலாசாலையின் கடற்கரை பக்கத்து படிக்கட்டுகளில் இருந்து புகைக்கும் ஆசிரியர்களை மறுபக்கம் அனுப்பிவிட்டது. -சூரி யூட்

(உண்மைக் கதை- யாழ்பாணம் கொழும்புத்துறையில் நடந்தது)

ஓர் பிரெஞ்சுத் திரைப்படம்

Civilsees (1999)

கடந்த இதழில் குறிப்பிடப்பட்ட பிரெஞ் திரைப்படம் பற்றிய விமர்சனம்

திரைப்படத்தின் பெயர் Civilsees (1999) ஆங்கிலத்தில் இத்திரைப்படத்தின் பெயர் A Civilized People என இருக்கும்

பிரெஞ் நாட்டினதும் லெபனான் நாட்டினதும் கூட்டுத் தயாரிப்பு என்று விளம்பரங்களில் எழுதப் பட்டிருந்த இந்தப்படம் லெபனானில் இத் திரைப்படம் தடை செய்யப் பட்டிருந்தது. இத் திரைப் படத்தை உருவாக்கியவர் ஒரு லெபனானிய பெண், பிரான்ஸ் நாட்டில் வளர்ந்தவர்.இப்போதும் பிரான்ஸி லேயே வாழ்ந்து வருகிறார். இவரின் பெயர் Randa Chahal (Sabage). இப்படத்தின் கதையை எழுதி தானே இயக்கி இருந்தார். இத் திரைப் படத்தின் கதை லெபனானில் நடை-பெற்ற 20வருட உள்நாட்டுப் போரின் போது அன்றைய லெபனானிய மக்களின் யுத்தச் சூழலின் சமூகப் போக்குகள் இப்படத்தில் உள்ளார தெரியக் கூடியதாக இருந்தது. முஸ்லீம் மக்களுக்கும் கிறிஸ்தவமத மக்களுக்கும் இடையிலான போர் அந்நாட்டு மக்களின் வாழ்வியல் எப்படித் தறி கெட்டுப் போய் இருந்தது என்பதைப் பார்வையா ளர்களுக்கு காட்டுவதற்கு படாத பாடு பட்டிருக்கிறார் இந்த படத்தின் இயக்குனர் மதவாதிகளாலும், தீவிர வாதிகளாலும் நடாத்தப்பட்ட 20 வருடகால யுத்தம் லெபனிய சமூகத்தை ஒரு நோய்ப்பாங்கான சமூகமாகி வளர்த்துவிட்டார்கள் என்பதே கதையின் கருப்பொருள்.

கீழ்மாடியில் வசித்து வரும் இரு இலங்கைப் பெண்களும் பல்கனிக்கு வருகிறார்கள். அவ்விரு வரையும் நோக்கி லெபனானியர்கள் கூச்சலிடு கிறார்கள்.

லெபனானிய சமூகத்தின் வாழ்க்கைப் பிரச்சினையைத் தொட்டிருந்தாலும், கதையைக் கையாண்டவிதம் சரியான நேர்த்தி யில்லாது இருந்தது. நிறையைப் பாத்திரங்களை கதையில் சேர்த்து இடை இடையே முறித்து முறித்து காட்டியிருந்தார். கதையில் கூறி வரும் சம்பவங்களை தொடராக ஒட்ட வைக்காது படத்தைச் சுவாரஸ்யமாக நகர்த்திச் செல்வ தற்காக கதையை பிசைந்து ஒரு கோமாளித்தனமான ஒரு நகர்வை படத்தில் வெளிக்காட்டியிருந்தார்.

இத் திரைப் படத்தின் கதையின்கரு லெபனானிய மக்களின் சமூக மட்டத்தில் நிகழ்த்தப் பட்டிருந்தாலும் இக் கதைக்கு பின்புலமாக இருக்கக் கூடிய யுத்த சூழல் லெபனானிய சமூகத்தைப் பற்றி ஓர் உணர்வினை இத்திரைப் படத்தைப் பார்க்கின்றவர்களுக்கு உணர்த்துகின்றது. இப்படத்தின் ஒவ்வொரு காட்சியும் மெது மெதுவாக நகர்த்தப்படுகிறது. யுத்தத்தால் அழிந்து போயிருக்கின்ற நகரத்தை கமரா அடிக்கடி படம் பிடித்துக் காட்டுகிறது.

கதையும் முக்கிய பாத்திரமும்

ஒரு கிறிஸ்தவப் பெண் ஒரு முஸ்லீம் இளைஞன் ஒருவனைக் காதலிக்கின்றாள். அந்த கிறிஸ்தவப் பெண்ணின் தந்தை தனது மகளின் காதலை அறிந்து கொதித்துக் குமுறுகிறான். தனது மகள் முஸ்லீம் இளைஞனுடன் காதல் கொண்டி ருப்பதை லெபனானிய சமூகத்தின் காதிற்கு எட்டமுன் தனது மகளைக் கொன்று விட வேண்டும் என்று எண்ணுகின்றான். தனது மகளையும் அவளது காதலனையும் கொல்வதற்தாக ஒரு மனிதனின் உதவியை நாடி இருவரையும் கொலை செய்யும் பொறுப்பு அந்த மனிதனிடம் ஒப்படைக்கப்படுகிறது.

அந்த மனிதனின் அசமந்தப் போக்குக் காரணமாக மகளை இலகுவில் கொல்ல முடியவில்லை. மகளின் காதல் லெபனானிய சமூகத்தின் காதில் கசிகிறது. பொறுக்க முடியாத தந்தை தனது மகளைக் கொல்வதற்கான பொறுப்பைத் தானே எடுத்துக் கொள்கின்றான். கொலையும் செய்து விடுகின்றான். இப்படத்தில் வரும் காட்சிகள் சில சம்பவங்கள் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட வையாகக் காண்பிக்கப்படுகின்றன.


புலம்பெயர் நாடுகளில், தொடர்ந்து உலகத் திரைப் படங்கள்பற்றி தரமாக எழுதிவரும்

பாலா

படம் தொடங்கும் போது ஒரு இடிந்த கட்டிடப் பகுதியில் இருவர் உரையாடும் காட்சி. ஒரு மனிதன் துப்பாக்கியை ஏந்தியபடி நிற்கின்றான். இன்னும் ஒரு மனிதன் துப்பாக்கியும் நிற்கும் மனிதனுடன் தர்க்கம் புரிகிறான். கோபமாக அங்கும் இங்கும் நடக்கிறான். உரத்துக்கத்துகிறான்.

அடுத்த காட்சியில் ஐந்து... ஆறு சிறுவர்கள் ஒரு பூனையின் வாலில்(டைனமைட்) வெடிகுண்டைக் கட்டி திரியில் நெருப்பு கொழுத்தி ஓடவிடுகின்றார்கள். அப்பூனை பயப்பீதியில் கத்தி அலறிக் கொண்டு அந்தச் சிறுவர்களில் ஒருவனினல் பாய்ந்து ஏறுகிறது. குண்டு வெடிக்கிறது.

இது லெபனான் நாட்டு சிறுவர்களின் போர்ச் சூழல் வாழ்க்கை முறையை சித்தரிப்பதற்கு எடுக்கப்பட்ட சம்பவம். அடுத்து வரும் ஒரு காட்சியில் ஒரு 7 வயது மதிக்கத்தக்க முஸ்லீம் குழு உறுப்பினர் ஒருவரிடம் சென்று தனக்கு ஒரு A.K. 47 துப்பாக்கி இரவலாகத் தரும்படி கெஞ்சுகி ன்றான். தனக்கு ஒரு துப்பாக்கி கிடைத்தால் வறுமையில் வாடும் தனது குடும்பத்தை காப்பாற்ற முடியும் என்று கூறுகின்றான். போராளி எப்படி முடியும் என்று கேட்டபோது அவன் கூறுகிறான், "பிரன்ஸ் நாட்டிலிருந்து ஒரு டாக்டர் வளர்ச்சி சேவை செய்வதற்காக வந்திருக்கிறார். அதாவது யுத்தத்



திற்குள் அகப்பட்டு காயமடை ந்தவர்கள் அல்லது வருத்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சேவை செய்வதற்காக வந்திருக்கிற். அவரைக் கடத்திக் கொண்டு போய் பணம் தரும்படி கேட்டால். அவர் பணம் தருவார். அதை வைத்து தனது குடும்ப கஷ்ரங்களைத் தான் தீர்க்க முடியும்" என்கின்றான். அப்போராளி சிறுவனைத் துரத்தி விடுகின்றான். சிறுவனின் தகவல் அவர்களுக்கு வாய்ப்பாக இருந்தது. பிரான்ஸ் நாட்டு டாக்டரைத் தாங்களே கடத்தி சித்திரவதை செய்து பணம் பறிக்கின்றார்கள்.

டாக்டர் கத்துகிறார், "நான் உங்கள் மக்களுக்கு சேவை செய்யவே வந்திருக்கிறேன். உங்கள் மக்களின் உயிர்களைக் காப்பாற்றவே தான் எனது உயிரையும் மதிக்காது வந்திருக்கின்றேன். என்னை விட்டு விடுங்கள்" என்று கெஞ்சுகின்றார். இதற்கிடையில் கமரா ஓடிச்சென்று யுத்தங்கள் நடை பெறுவதையும், யுத்த அழிவுகளையும் படம் பிடித்துக் காட்டுகிறது. யுத்தச் சூழலில் வாழுகின்ற மக்கள் எந்தப் பயங்கரமான நிகழ்வுகளையும், பயங்கரங்களையும் சமாளிப் பவர்களாவும், எல்லாவற்றுக்கும் தம்மைத் தயார் பண்ணப்பட் டவர்களாகவும் வாழ்கின்றனர். ஒரு தொடர்மாடிக் கட்டிடத்தில் வாழுகின்ற மக்களின் வாழ்க்கையை கமரா அடிக்கடி படம் பிடிக்கின்றது. அக்கட்டிடத்தில் வாழுகின்றவர்களின் பாத்திரங்கள் இத்திரைப்படத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது.

இத் தொடர்மாடிக் கட்டி டத்தின் கீழ் மாடியில் இரண்டு இலங்கைப் பெண்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஒரு பெண் சிங்கள இனத்தைச் சார்ந்தவர். மற்றவர் தமிழ்ப்பெண்.

மேல் மாடிக் கட்டிடத்தில் வாழ்பவர்கள் பெரும்பாலானவர்கள் லெபனானியர்கள். ஒரு காலைப் பொழுதை காட்சியாகப் படம் பிடிக்கப்படுகிறது. அத்தொடர் மாடிக் கட்டிடத்தில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் காலைக் கடன்களை முடிப்பதற்காக தயாராகின்றனர். தொடர்மாடிக் கட்டிடத்தின் பல்கனிக ளில் எல்லாமக்களும் கூடிநின்று பல்துலக்குவதும், குசலம் விசாரிப் பதுமாக காட்சி நகர்கின்றது.

கீழ்மாடியில் வசித்து வரும் இரு இலங்கைப் பெண்களும் பல்கனிக்கு வருகிறார்கள். அவ்விரு வரையும் நோக்கி லெபனானியர்கள் கூச்சலிடு கிறார்கள். அதாவது, "Hey SriLanki Monkey, You just turn down from the monkey, You blackey monkey, Go back to jungle" என்று கத்துகின்றார்கள்.

இவ் லெபனானியர்களின் கூச்சலுக்கு ஏற்றால் போல் இவ்விரு இலங்கைப் பெண்களும் குரங்கு போல் பாசாங்கு செய்கிறார்கள். சரியாகக் கூறப் போனால் நிறையக் காட்டி குரங்கு போல் சொறிந்து காட்டுகிறார்கள்.

இக்காட்சியை இப்படத்தின் இயக்குனர் என்ன துணிவில் படம் பிடித்தார் என்பது தெரியவில்லை. ஆனால் நகைச்சுவையாகப் படம் பிடித்ததாகக் கூறுகிறார்கள்.

ஆனால் ஒன்று மட்டும் புரிகிறது. இலங்கையர்களான நீங்கள் உங்கள் நாட்டில் நீ பெரிது, நான் பெரிது என்று சண்டை பிடிக்கிறீர்கள். ஆனால் நீங்கள் உங்கள் நாட்டின் எல்லையைக் கடந்த பின்பு மற்ற மனிதர்களுக்கு நீங்கள் தாழ்ந்தவர்கள் என்று புரிய வைக்க இப்படத்தின் இயக்குனர் முயன்றுள்ளதாகத் தெரிகிறது.

இன்னுமொரு காட்சியில் அத்தொடர் மாடிக் கட்டிடத்தில் வசித்து வந்த அந்த இலங்கைப் பெண்களில் ஒருவரான தமிழ்பெண் சுகவீனம் அடைகிறாள். சிங்களப் பெண் அழுது அழுது ஒவ்வொரு அறையின் கதவுகளையும் தட்டி உதவும்படி கெஞ்சுகிறாள். அப் பெண்ணுக்கு ஆங்கிலம் பேச வராது. ஓரிரு ஆங்கிலச் சொற்கள் மட்டும்தான் தெரியும். அறைக் கதவைத் திறப்பவர்களிடம் சிங்களத்தில் கதைக்கிறாள்.

"சறோஜா சனிப்ப் சனிப்ப றத்தா" என்று கூறும் போது லெபனானியப் பெண் ஒருவர் கூறுகிறார். Don't Speak Jungle Language. Speak English என்றும் கூறுகின்றார்.

கமரா படத்தின் காட்சி களுக்கு சம்பவங்களைப் படம்

சிங்களவர்கள் சிலர் கிறிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பொறுக்கமாட்டாத லெபனானியர் ஒரு ஆர்மட் ட்ரக் வண்டி கொண்டு வந்து அவர்களை நோக்கி சுடுகிறார்கள். சுடும்போது You Monkeys ! playing in my land **என்று கூறுகிறார்கள்.**

பிடிக்கிறது. ஈமைக்கிரியைக் காட்சி மக்களைப் பாதிக்கிறது.

மரணம் அடைந்த ஒருவரை காவி வந்து குழி தோண்டி புதைத்து விட்டு வேதம் ஓதிக் கொண்டிருக்கின்றார்கள். திடீரென விமானங்கள் குண்டு போட்டு தாக்குகிறது. மரணித்தவரை அப்படியே விட்டு விட்டு ஓடுகின்றனர். குண்டுத் தாக்குதல் நின்ற பின்பு பல மணி நேரத்தின் பின்பு தொடர்ந்து வேதம் ஓதுகின்றனர். இதற்கிடையில் ஒரு மனிதன் குண்டு அடிபட்டு அவனின் வயிற்றின் அடிப்பாகம் கிழிந்து போய் கிடக்கின்றது. அந்த மனிதன் தனது இருப்பிடத்தை நோக்கிச் சென்று தானே அந்தப் பெருங்காயத்தை சேர்த்து வைத்து பொருத்துகின்றான். இப்படியாக ஒன்றை ஒன்று தொடர்பில்லாமல் நிறையக் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

இலங்கைப் பெண்ணான அந்தத் தமிழ்ப் பெண் இறந்து விடுகிறாள். அந்தப் பகுதியில் தொழில் பார்க்கும் வீட்டுப் பெண்மணி அப் பெண்ணின் பிரேதத்தை ஒரு சூட்கேசில் வைத்துப் பூட்டி இலங்கைக்கு அனுப்புவதற்காக கடற்கரை யோரமாக நீண்ட தூரம் இழுத்துச் செல்கிறாள்.

இறுதிக் காட்சியில் இலங்கையைச் சேர்ந்த சிங்களவர்கள் சிலர் விளையாட்டு மைதானத்தில் கூடிக் கிறிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பொறுக்கமாட்டாத லெபனானியர் ஒரு ஆர்மட் ட்ரக் வண்டி கொண்டு வந்து அவர்களை நோக்கி சுடுகிறார்கள். சுடும்போது You Monkeys playing in my land என்று கெட்ட வார்த்தைகளால் திட்டுகின்றனர். இலங்கையர் நிலத்தில் படுத்துத் தப்புகின்றனர். அங்கு ஒரு பாதிரியார் அவரும் இலங்கைச் சிங்களவர், ஓடி வருகிறார்கள். நடந்த சம்பவத்தைக் கேட்டு ஆறுதல் கூறுகின்றார். ஒரு இலங்கையர் கூறுகின்றார்



'இவர்கள் என்ன காட்டு மிராண்டிகளாக இருக்கிறார்கள். தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டு எங்களுடன் ஏன் பிரச்சினைக்கு வருகின்றார்கள். நாங்கள் இவர்களுக்கு வேலை செய்வதற்கு இவர்களின் நாட்டிற்கு வந்திருக்கிறோம். எங்களை இப்படியா உபசரிப்பது? நாங்கள் எங்கள் நாட்டில் படித்தவர்கள். நான் ஒரு எஞ்சினியர். நாங்கள் நாகரிகம் அடைந்தவர்கள். இவர்கள் இன்னும் நாகரீகம் அடையாதவர்களா? Those people are not civilized yet." என்று கூறுகிறார். பாதிரியாரும் ஒரு இலங்கைச் சிங்களவர். தன்னையும் தனது நாட்டைப் பற்றியும் உபதேசம் செய்கின்றார்.

இத்துடன் படத்தை முடித்துக் கொண்டு விடுகிறார்கள்.

லெபனானியரை நாகரீகம் அடையாதவர்கள் என்று சுட்டிக் காட்டுவதற்கு இப் படத்தின் இயக்குனர் சிங்களவரைத் தெரிவு செய்ததன் நோக்கம் தான் புரியவில்லை.

தொடரும்

வகைகள், பாக்கு நீரிணையின் நீரோட்ட வீச்சை விரும்புவதில்லை. சேதுத் திடல் பகதியில் கால்வாய் அகழ்விப் பணி முடிவடையும் இடத்தில் இருந்து 20 கி.மீ. தொலைவில் செங்கால் தீவு உள்ளது. பாதுகாப்புக்குரிய உயிரியல் கடல்வனம் அங்கு தொடங்குகிறது. மன்னார் வளை குடாவின் மேற்குக் கரையோரமாகத் தூத்துக்குடி துறைமுகப் பகுதிவரை 21 தீவுகளையொட்டிய பிறை வளைவாக இந்த ஒதுங்கு வலையம் நீள்கிறது. சேதுக் கால்வாயின் அகழ்வுப் பணிகளும் பராமரிப்புப் பணிகளும் மன்னார் வளைகுடாவுக்குள் அமைவதில்லை என்பதால், பாதுகாப்புக்குரிய உயிரியல் கடல்வனம் எந்த வகையிலும் பாதிப்புறாது.

சூரிய ஒளி, பச்சையம், உரம் இவைதான் கடலின் மேற்பரப்பில் மிதக்கும் தாவர நுண்ணுயிர்களின் முதனிலை உணவு உற்பத்திக்கு அடித்தளம். நுண்ணுயிர்த் தாவரங்கள் நுண்ணுயிர் விலங்ககள் உண்ண, நுண்ணுயிர் விலங்ககளைச் சிறுமீன்கள் உண்ண, சிறு மீன்களைப் பெரு மீன்களும் சுறாக்களும் விழுங்க, அவற்றுள் மிகச் சிறுபகுதியை மனிதனும் நாடுகிறான். ஆற்று நீருடன் கடலுள் கலந்து உவர் உரமாகும் நைதரசன், பொட்டாசியம் போன்ற ஊட்ட உரங்களைத் தரையிலிருந்து கடலின் மேற்பரப்புக்குக் கொணரும் நீரோட்டக் கலக்கலைப் பாக்கு நீரிணையில் சேதுக்கால்வாய் பெருக்கும். மீன் உற்பத்தி அதிகரிக்க, மீனவர் வளம்பெருகும்.


சுறா, கடற்பன்றி, கடற்பசு போன்ற அளவிற் பெரிய விலங்கினங்கள் ஆழம் அதிகமான, வங்காள விரிகுடாவிலும், மன்னார் வளைகுடாவிலும் பெருந்தொகையாக உள. ஆழம் குறைந்த பாக்கு நீரிணைக்குள் அவற்றின் வரத்துக் குறைவு. கப்பல் போக்குவரத்தால் அவ்விலங்குகள் பாதிப்புறும் என்பது பொருத்தமற்ற வாதம்.

கடலின் தரையிலோ, நீர்த்தொகுப்பிலோ, காற்று மண்டலத்திலோ, உயிரினத் தொகுப்புக்கோ, கால்வாயைத் தோண்டிப் பராமரிப்பதாலோ, கப்பலை ஓட்டுவதாலோ பெருமளவான பாதிப்பு ஏதும் வரக்கூடிய சாத்தியமில்லை. சுற்றுச் சூழலை மாசுபடுத்தாது வைத்திருக்கும் முயற்சிக்கு தமிழன் கால்வாயால் பாதிப்பு ஏதுமில்லை.


நன்றி தென் செய்தி

புதிய வாழிடம்

பலப் பலவானவை இந்தத் தொடர்ச்சிகள்
பொழுதுகள் கரையும்
விலகி ஓடும் வானத்தின் திரைகள்
ஒளிரும் விளக்குகளை இனங்காட்டும்
வேளையாக நினைக்கும் பொழுதுகள்
மீண்டும் துளிர்விடும்
அந்தரத்தில் வானம்
இணையும் குழுக்கள் கூட்டும் முயற்சிகள்
வானம் விலகினும்
விலகாத வாழ்க்கை தொடர்ச்சியில்
துயர விளைவுகள்
வந்துபோகும் எந்த நாளும் இவை மாறா
பயணம் எனக் கொள்ளும்
எவ்வளவும் இருப்பினும் தள்ளிநிற்கும்
வெண்புறா பலதடவை சூடுபட்டதால்
பரம்பரை சொல்லித்தரும் பயத்தினூடு விலகி
ஓடும்
புதிய வானம்
வெள்ளை நிலம் வெள்ளை நிலம்
நீல வானம் நீல வானம்
பொல்லாத நாட்களில்
தள்ளிய பனிக்குவியல் விலகி நிலம் தெரிய
வாழ்வது பூமியென்றுறைக்கும்



தாய்லாந்து என்பதற்கு தாய்நாடு என்ற பொருளும் கொள்ளமுடியும். தாய்லாந்து தாயைப் போல வந்தவர்களை வரவேற்கும் ஒரு நாடு. இனமத வேறுபாடு இன்றி விமானத்திலிருந்து இறங்கி தாய்லாந்துக்குக்குள் சென்று மீண்டும் ஊர் திரும்புவதற்கு விமானம் ஏறும் வரை அந்நாட்டு மக்களின் உபசரிக்கும் விதமே தனியானது.



தாய்லாந்து சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் உகந்த இடம் என்று குறிப்பிடலாம்.. மிகவும் மலிவு விலையில் சகல வசதிகளும் அங்கு கிடைக்கின்றன.

புத்தமதக் கொள்கைகளைப் பின்பற்றும் நாடு. புத்தகோயில்கள் பார்க்குமிடம் எங்கும் காணப்படும். தூரத்திலிருந்து பார்க்கும்போது பொன்னால் கட்டியது போல இக் கோயில்கள் காட்சியளிக்கும். ஒவ் வொரு கோயிலையும் வேறுபடுத்தும் வகையில் கட்டியிருக்கின்றனர்.

தாய்லாந்து அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மக்களாட்சி நடைபெறும் நாடு. இருந்தபோதிலும் பழையகால நினைவாக அரசர் அரசியர் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தாய்லாந்து சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் உகந்த இடம் என்று குறிப்பிடலாம். மிகவும் மலிவு விலையில் சகல வசதிகளும் அங்கு கிடைக்கின்றன. ஒரு சாதாரண விடுதி என்றாலும் அதில் அனைத்து வசதிகளும் உண்டு. விடுதி ஏவல் வேலைகளைச் செய்யக் கூடிய சிறுவர்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடி ஓடி வந்து பணிவி-டைகளைச் செய்வர்.

ஒரு நாளைக்கு டொலர் 100 மிகவும் போதுமானது. சாப்பாடு, தங்குமிடம், பொழுது போக்கு இவற்றிற்கு இவை மிச்சமாக இருக்கும். ஒரு கனடிய டொலர் 30 Bath என்ற பணத்திற்கு சமமானது.

தாய்லாந்து நாட்டில் அதன் நிரந்தரக் குடிகளான மொங்கோலிய இனத்தினரைத் தவிர பல்லின மக்களும் அங்கு வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக இந்திய, பாகிஸ்தானிய மக்கள் வணிக நோக்கம் கருதி அங்கு வாழ்ந்து வருகிறார்கள். புடைவைத் தொழில், பலசரக்கு வியாபாரம், உணவுச் சாலைகள் போன்றவற்றை இவர்கள் நடத்தி வருகின்றனர்.

தையல் வேலை செய்யும் தொழிலாளரின் கூலி மிகவும் குறைவாக இருப்பதால் இத்துறை அங்கு நன்கு வளர்ச்சி யடைந்துள்ளது. எனது தொழிலுக்குத் தேவையான 30 சோடி உடைகளை இரு நாட்களிலேயே தைப்பித்துக் கொள்ள முடிந்தது.

நிறைய உணவுச்சாலைகள் உண்டு. சீன, இந்திய, பிலிப்பீன், பாகிஸ்தானிய உணவு வகைகளை விற்கக்கூடிய கடைகள் நிறைய உள்ளன.

கடலுணவு: கடலுணவு வகைகளைச் சாப்பிட விரும்பினால் நீங்கள் தாய்லாந்துக்குத் தான் போக வேண்டும். எந்தக் கடலுணவு எந்தவிதத்தில் நீங்கள் சமைக்க விரும்புகிறீர்களோ அந்த விதத்தில் சமைத்துத் தருவார்கள். ஏன் நீங்கள் விரும்பினால் உங்கள் முன்னா லேயே சமைக்கக்கூடிய மாதிரியான உணவுச் சாலைகளும் உள்ளன.



கனடாவில் உள்ளத போல் உணவு விற்கும் இடங்கள் நிறைய அங்கும் உண்டு. இங்கு அனைத்துப் பழவகைகளும் மிக மலிவாகவும் புதியதாகவும் கிடைக்கின்றன. சுவைத்துப் பார்த்து வாங்கிச் சாப்பிடலாம்.

தாய்லாந்து மக்கள் தமது பாரம்பரியத் தொழில்களாக மீன் பிடித்தல், பண்ணைகள் வைத்திருத்தல், விவசாயம் போன்ற தொழில்களைச் செய்து வருகின்றனர். உலகளாவிய நிலையில் தகரங்களில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருட்கள் தாய்லாந்திலேயே தயாரிக்கப்படுகின்றது.

சுற்றுலாப் பயணிகளைப் பொறுத்தவரையில் தாய்லாந்து அவர்களை ஈர்க்கக்கூடிய இடம் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

ஐரோப்பிய, ஒஸ்ரேலிய, நியூசிலாந்து மக்கள் அடிக்கடி ஏன் ஆண்டுக்கு ஒரு தடவை கூட வந்து போவார்கள். இதற்கு எடுத்துக் காட்டாக, ஒரு வீதியில் 50 உணவுச் சாலைகள் இருந்தால் அரைவாசிக்கு மேற்பட்டவை ஐரோப்பிய முறைப்படி சமைக்கக்கூடிய உணவுச் சாலைகளாகவே இருக்கும். இங்கு வந்து போகும். வெளிநாட்டவர்களைப் பொறுத்தவரையில் இவர்களை பலவாறு வகைப் படுத்தலாம்.


ஓய்வுக்காக வருபவர்கள், நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காக வருபவர்கள், வியாபாரக் கூட்டங்களை நடத்துவதற்காக வருபவர்கள், ஏன் எல்லாவற்றையும் அனுபவிப்போம் என்று வருபவர்கள் ஆக பலவிதமாக இருப்பர். இவர்களுக்கு வழிகாட்டும் வகையில் இரு இடங்களைக் குறிப்பிட்டுக் கூற முடியும்.

புக்கற்: அண்மையில் சுனாமியால் வெகுவாகப் பாதிப்புக்குள்ளான புக்கற் என்னுமிடம். இந்த இடத்திற்கு பாங்கொக் விமான நிலையத்திலிருந்து போவதற்கு சிற்றுந்து, பேருந்து போன்றவற்றில் 2, 2 ½ மணித்தியாலத்தியாலப் பயணம் மூலம் செல்லமுடியும். விமான நிலையத்திலிருந்து வெளியே வந்து சிற்றுந்தை அழைத்தால் கிட்டத்தட்ட 2000-2500 தாய்லாந்துப் பணம் கேட்பர். ஆனால் பேரம் பேசினால் 1000 கூடக் கொடுத்து இந்தப் பயணத்தைப் பூர்த்தி செய்யலாம். அவ்வளவுக்கு மலிவாக இருக்கும். இவையெல்லாவற்றையும் விட 'walking street| என்று அழைக்கப்படும் ஒரு தெரு இங்கு உண்டு. அத் தெருவில் மாலை 3 மணிக்கு வாகனப் போக்குவரத்தை மூடிவிடுவர். அதிகாலை 3, 4 மணிக்குத் தான் திறப்பர். இந்நேரத்தில் மக்கள் இந்தத் தெருவில் மக்கள் நடந்து செல்லக்கூடியதாக இருக்கும். இரவுக் களியாட்டங்கள் அந் நேரத்தில் இந்த இடத்தில் வெகு சிறப்பாக நடைபெறும். இரவு விடுதிகள், சாப்பாட்டுக் கடைகள், மதுபானக் கடைகள் என்பன மக்களுக்காகத் திறந்திருக்கும். குத்துச்சண்டை, நடன நங்கைகளின் நடனங்கள் போன்றன நடந்து கொண்டிருக்கும். பார்த்துக்களித்தபடி உணவுவகைகளையும் சுவைக்கலாம்.

இத்தெருவில் 100பேர் நடந்து போய்க்கொண்டிருந்தால் அதில் பாதிப்பேர் வெளிநாட்டவர்களாகத்தான் இருப்பர். பெரிய கட்டிடங்கள் இத தெருவில் நிறையக் கடைகளுடன் இருக்கும். இத்தகைய கட்டிடங்களில் ஒரு கட்டிடத்தில் கிட்டத்தட்ட 20, 30 மதுபானக்கடைகள் இருக்கும். இவற்றில் பெண்களும் நிறைந்து காணப்படுவர்.

இங்கு இன்னொரு சிறப்பு 'தாய் நீவிவிடல்' (massage).

இவர்களில் யார் உயரமானவர் ?




உலகெங்கிலும் இத்தகைய நிலையங்கள் இருந் தாலும் அவற்றில் கட்டாயமாக தாய் நீவிவிடல் இருக்கும். அவ்வளவு சிறப்புத்தன்மை வாய்ந்தது அது. பல முறையில் பல மாதிரியான நீவிவிடல் வகைகள் இருக்கின்றன. இது உடலுக்கு மிகுந்த ஆரோக்கியத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு வித சிகிச்சை முறையாகும்.

பத்தயா: இங்கு நிறையப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் வெளி நாடுகளிலிருந்து வருவர். பாங்கொக்கில் இருப்பதால் உல்லாசப் பயணிகள் அல்லாதவர்களும் இவ்விடத்திற்கு வருகிறார்கள் என்பது தான் உண்மை.

இந்த இடத்தில் நிறையத் தீவுகள் காணப்படுகின்றன. படகுகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டு போய்ப் பார்க்கலாம். இந்தத் தீவுகளைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றால் அழகான இயற்கை எழில் நிறைந்த மலைகள் காணப்படுகின்றன. மோட்டார் வண்டிகளை வாடகைக்குப் பெற்றுக் கொண்டு இவ்விடத்தை சுற்றிப் பார்க்கலாம்.

சுற்றுலாப்பயணிகளுக்கு இங்கு மொழிச்சிக்கல் இருப்ப தில்லை. தாய்லாந்து சுற்றுலாப் பயணத்திற்குரிய இடங்களிலுள்ள மக்கள் நன்றாக ஆங்கிலம் பேசுகின்றனர். அண்மையில் ஒரு மிகப்பெரிய அளவிலான விமான நிலையம் ஒன்றைக் கட்டி வருகின்றனர்.



வெறும்பாண்டி

மப்பு வேகமா அப்பு கடைக்குப் போறான். அங்க எல்லாம் கழுவித் தொடச்சிக் கண்ணாடி மாதிரி ரெண்டு போனுக்கும் பொட்டு, மாலையெல்லாம் வேற.

மப்பு கேட்டான்
'என்ன மாப்ள கழுதக்கிக் கல்யாணம் பண்ணி மழ வரலண்ண ஒடனே போனுக்குக் கல்யாணம் பண்ணக் கௌம்பிட்டீங்களா?"

மேல 'நிலா தொலைத் தொடர்பு மய்யம்' போடுக்கு மாலை போட்டுக்கிட்டிருந்த கடப் பையன் ரமணி ஏணியில இருந்தபடி,

'அடப்போங்கண்ணே, இன்னக்கி ஆயுத பூசைல்ல'
மப்பு அவனைப் பார்த்து,

'டேய் பாத்துடா கொஞ்சம் தவறிச்சு போட்ல இருக்க மாலயாலயே உனக்குப் போட்டு நெத்தில நாலணாப் பொட்டு வச்சி அனுப்பிடுவான் ஒங்க முதலாளி'.

அப்புவப் பார்த்து,

'ஏம் மாப்ள நீதான் சாமில்லாம் கும்பிடமாட்டிய பெறவென்ன எழவு இதுல்லாம்.'

அப்பு கொஞ்சம் சங்கடப் பட்டுக்கிட்டு, 'இல்லப்பா, கடயில வேல செய்தவங்க ஆசைப் பட்டாங்க அதான்'...

மப்பு லேசா எரிச்சல்பட்டு 'அவங்க ஆசையோ என்னமோ நீ செய்தது கொஞ்சமும் நல்லால்ல.'

வேலய முடிச்சிட்டுக் கீழ இறங்குன ரமணி மப்புட்ட 'அதெல்லாம் இருக்கட்டும்ணே நாட்டு நடப்பு என்னண்ணே?'

'டே, வேண்டாண்டா ரமணி'

'இருக்கட்டும்ணே, நாட்டு நடப்பப் பத்தி அண்ணன் வாயால நாலு வார்த்த கேட்டாத்தான வெளங்கும்'.

அப்பு ஒடனே, 'ஆமாமா, இன்னக்கு வெளங்குன மாதிரிதான்'

ரமணி மப்புவப்பாத்து,

'ஏண்ணே, நம்ம கேப்டன் கச்சி ஆரப்பிச்சதப்பத்தி என்னண்ணே நெனக்கிறீங்க?'

மப்பு மெரண்டு போயி,
'ஏண்டா கங்குலிக்கு இந்த வேல. கிறுக்குச் சேப்பலோட சண்ட போட்டுகிட்டு அதுக்காக அப்பப்ப பேட்டி கொடுத்திட்டிருந்தான். பதிலுக்கு கிறுக்குச் சேப்பலும் ஈமெயில்ல கடுதாசி மெயில்லன்னு பட்டயக் கிளப்பிட்டிருந்தான். கட்சில கச்சி ஆரம்பிக்க அளவுக்கு போயிட்டானா? அப்ப கிறுக்குச் சேப்பலும் கச்சி ஆரம்பிச்சிருவா—'

அப்பு தலயில அடிச்சிக்கிட்டு,

'மாப்ள அவன் சிறுக்குச் சேப்பலில்ல, கிரேக் சேப்பல்'

மப்பு ரொம்ப யோசனையோட, 'போடா அவன் கிரேக்கோ, பிரேக்கோ அதா இப்பமுக்கியம் இவனுக ரெண்டுபேரும் கச்சி ஆரம்பிச்சா டெண்டுல்கரு யாருக்கு 'வாய்ஸ்' குடுப்பான்?'

ரமணி தாங்கமுடியாம 'நிறுத்துங்கண்ணே நான் கேப்டன்னு சொன்னது நம்ம விஜயகாந்துண்ணே'

மப்பு ஆச்சரியத்தோட, 'என்னடா இது விஜயகாந்த எப்படா கேப்டனானாரு? ஒரு வேளை அடிக்கடி காலக்கால அதும் லெப்ட் காலத் தூக்குவார அதுனால 'லெப்ட் பேக்லாடபோட்டு புட்பால் டீமுக்குக் கேப்டனாக்கிட்டீங்களா? இல்லாட்ட போலீஸ், சீபிஐ, மிலிட்டரின்னு நடிக்கார அதுனால கேப்டனாக்கிட்டீங்களா? என்ன எழவு இது நாட்லதான் யாரத்தான் என்னதான் ஆக்குததுண்ணு வரமொறயே இல்லாமல் போச்சே'

ரமணி, 'இல்லேண்ணே, 'கேப்டன் பிரபாகரன்' படம் நடிச்சாருல்ல அதான் அந்தப் படம்' மப்பு கோவத்தோட

'ஏண்டா வைதேகி காத்திருந்தாள் அவரு நடிச்ச படந்தான அத வச்சு வெள்ளச் சாமின்னு பட்டம் குடுக்க வேண்டியதான'.

ரமணி சலிப்போட, 'ஏணக்கிக்கோண பேசுததே ஒங்க வேலண்ணே, அதவிடுங்க... எங்க கேப்டன் ஆட்சியப் புடிப்பாரா இல்லியா அதச் சொல்லுங்க'

மப்பு அப்புவப்பாத்து, 'என்ன மாப்ள இவன் கேப்டன் ஆச்சியப் பிடிப்பாரா கர்னல் தாத்தாவப் பிடிப்பாரான்னுக் கேட்டுக்கிட்டு ருக்கான் எல்லாம் ஒன்டி ரெய்னிங்தானா?'

அப்பு அமைதியா, 'நீ என்னதான் இழுத்தாலும் இன்னிக்கி ஒன்ட்ட தலயக்குடுக்க நா...வரல்ல அவம்பாடு ஒம்பாடு'

ரமணி, 'நாங்கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கண்ணே. 2006 ல கேப்டன் தமிழ்நாட்டு மொதலமைச்சராவாரா?'

மப்பு கோவத்துல நாற்காலிய விட்டு எந்திச்சு, 'அதென்னடா நாட்ல எவ்ளவோ பேரு நடிக்காங்க கேரளாவுல மம்முட்டி, மோகன்லாலு ஆந்திராவுல சிரஞ்சீவி, பாலகிருஷ்ணான்னு இருக்காங்க. பம்பாய்ல பாத்தா அமீர்கானு, சல்மான்கானு, செங்கிஸ்கானு...'

ரமணி இடமறிச்சு, 'செங்கிஸ்கான இல்லண்ணே ஷாருக்கான்'

மப்பு கோவப்பட்டு, 'எடல ஏதாவது பேசின பிச்சிருவேன். அவனுங் கள்ளாம் அங்கல்லாம் மொதலமைச்சராவனும்னு

ஆசப்படல. இங்க மட்டும் சினிமால வந்தவன் போனவன் தொட்டவன் தொடச்சவன்லாம் ஆளனும்னு துடிக்கானுவ... அதும் வெளிலருந்து வந்தவனுங்கதான் ரொம்பத் துள்ளுதானுவ. சரி அது தமிழ் நாட்டுக்கே சாபக்கேடு. சினிமாவுல மட்டுமே அரசியல்லயும் அப்பிடித்தான் இருக்கானு அது கெடக்கட்டும்'

'அப்பிடிக்கேளுங் கண்ணே, தனக்கு என்னன்ன தகுதி இருக்கு ன்னுட்டுத்தான் மதுர மாநாட்டுல தெளிவாச் சொல்லியிருக்காரு, தெரிஞ்சுக்கிங்க. எங்க கேப்டன் பணக்காரங்களோட பழகினதில்ல, அரிசிக் கஞ்சிதான் குடிச்சாராம், ஏசின்னா என்னன்னே தெரியாதாம் ஒரு நாளக்கி நூறு மூட்டை அரிசி தூக்குவாராம், மக்களப்போல அவரும் கறுப்பாம் இதவிட வேறென்ன தகுதி வேணும் ஒங்களுக்கு?'

மப்பு அமைதியா, 'அவரு சொன்னதெல்லாம் தகுதின்னு வச்சிப் பாத்தா கோயம்பேடு மார்க்கெட் மூட்டைதூக்கிற கந்தசாமியத்தான் மொதலமைச் சராக்கணும். அவன் ஒரு நாளக்கு 200 மூட்டை தூக்குதான் ஏசின்னு எழுதுனாலே படிக்கத்தெரியாது, நனஞ்ச பனமரமாதிரி நல்ல கறுப்பு... ஏண்டா கிண்டலா பண்றீங்க நாட்ல இதுல்லாந் தகுதின்னு இன்னம் எத்தன பேர்ரா கௌம்பிருக்கீங்க?'

ரமணியும் விடாம, 'தகுதிய விடுங்கண்ணே நாங் கேட்டதுக்குப் பதில சொல்லுங்கண்ணே'

மப்பு நக்கலா, 'டேய் ஒங்காளு ஒரே லிஸ்ட்போட்டு பாகிஸ்தான் தீவிரவாதி, பஞ்சாப் தீவிரவாதி, காஷ்மீர் தீவிரவாதின்னு போட்டுத் தள்ளுறதால பேசாம டெல்லில பிரதம மந்திரியா ஆயிரலாமே'

ரமணி, 'போங்கண்ணே அவரு ஆட்சியப் புடிச்சிருவாரன்னு உங்களுக்கு வயத்தக்கலக்குது அதான் இப்படிப் பேசுதீங்க. 72 ல எம்ஜி யாருக்கே மூணு லச்சந்தான் கூடுனாங்க அவரே ஆட்சியப் புடிக்கலியா? எங்காளுக்கு எட்டு லட்சம்பேரு வந்திருந்தாங்க அவரு ஆட்சியப் புடிக்கமாட்டாரா?'

மப்பு, 'ஏண்டா எம்ஜியாரு 77 ல ஆட்சியப் புடிச்சாருன்னா அப்ப திமுக தவுர வேற பெரிய கட்சியளல்ல அரசியல்ல வெற்றிடம் இருந்துச்சு. இப்ப அப்பிடியாடா? எவ்ளோ கட்சியளாப் போச்சு. ஆனா இவரு கட்சி ஆரம்பிச்சதுல வைகோவுக்குத்தான் பிரச்சனை'.

ரமணி ஆச்சரியத்தோட, 'ஏண்ணே ரெண்டு பேரும் மணவாடு தானண்ணே?

மப்பு, 'மணவாடாவது கருவாடாவது நாயக்கரு ஓட்டுப் பிரியும்ல'.

ரமணி, 'சரிண்ணே ரஜினிதான் 'வாய்ஸ்' குடுப்பாருல்ல'.

மப்பு 'ஏண்டா ரஜினி டப்பிங்லாம் பேச ஆரம்பிச்சுட்டாரா? சந்திரமுகி நல்லாத்தான ஓடிச்சின்னாங்க அவருக்கே அவரு பேசுனா புரியாது இதுல எப்படிடா டப்பிங்லாம்...'

ரமணி வேகமா, 'வாய்ஸ்' ண்னா அதுல்லண்ணே தேர்தல் நேரத்துல குடுப்பார அதச் சொல்லுதம்னே'

மப்பு உடனே, 'அந்த 'வாய்ஸ்' ஏகப்பட்டது குடுத்துத்தான் அவரே 'பாய்ஸ்' படப்பெட்டி மாதி சுருண்டு போயுக் கிடக்காரு மேல மேல அவர இழுத்துவுட்டு 'அந்நியன்' மாதி ஆக்கிராதீங்கடா'.

ரமணி , 'ஏண்ணே அன்னியன் நல்லாத் தானண்ணே ஓடுது.'

மப்பு, 'ஆமடா அது கவுஸ்புல்லா ஜென்டில்மேன் தியேட்டர்ல ஓடிக்கிட்டத் தானிருக்கு'

ரமணி புரியாம, 'ஜென்டில்மேன் தியேட்டரு எங்கண்ணேருக்கு?'

மப்பு 'அதாண்டா சங்கர் வீட்டு ஹோம் தியேட்டரு'

இவ்ளோ நேரம் சும்மாயிருந்த அப்பு மெதுவா ரமணிட்டே,

'ஏண்டா ஜாக்கிசான் கூட தமிழ்ல நடிக்க வாராராம் தெரியுமா?'

ரமணி நம்பமுடியாம, 'அவரு ஏண்ணே இங்கவாறாரு'

முக்கால் பங்கு கனடியர்கள் அமெரிக்க அதிபர் புச்சிற்கு கனடாவைப்பற்றி ஒரு புரிதலும் இல்லை என நினைக்கிறார்கள். அதைப் பாதிப்பேர் உறுதியாக நம்புகிறார்கள்.

18 வயதிலிருந்து 34 வயதிற்குட்பட்ட கனடியர்களில் நான்கு பேருக்கு ஒருவரிடமே 6 காற்சட்டைகளாவது இருக்கின்றன.

அப்பு, 'எல்லாம் தமிழ்ல நடிச்சா தமிழ்நாட்ல மொதலமைச்சரா ஆவாங்கன்ன நப்பாசையிலதான்.'

ரமணி ஆச்சரியத்தோட ஆவலோட ,'ஏண்ணே அவருல்லாம் இங்க வந்தா பாம்பு தவள சாப்பிடுவாரா இல்ல சாம்பார் சாதம் தயிர்— சாப்பிடுவாராண்ணே?'

மப்பு குழம்பிப்போயி, 'ஆமடா ஜாக்கிசான் சாம்பார் குடிப்பானா ஜெட்லி இட்லி தின்பானான்னு ஆராய்ச்சி பண்ணுங்க அதுக்குள்ள தமிழ்நாட்ட எவனாவது தூக்கிட்டுப் போற போக்கில உங்க டவுசரயும் உருவிராப் போறான்...திருந்துங்கடா'

அப்புவப் பாத்து, 'இந்தப் பயட்ட பேசிட்டிருந்ததுல எல்லாம் எறங்கிப்போச்சு நான்போயி ஒரு கட்டிங் போட்டுட்டு வாறேன்.'

அப்பப் பாத்து கடைக்குள்ள ஒருத்தன் வந்து மப்புட்ட, 'சார் இங்க பக்கத்தில ஒயின்ஷாப் எங்கருக்கு?' னு கேக்க மப்பு அவன கோவத்துல பாக்க அப்பு உள்ளவந்த ஆள்கிட்ட மப்புவக்காட்டி, 'சார் பின்னாலே பார்த்துக்கிட்டே போங்க . வைன் ஷாப்பு முன்னால வரும்'

மப்பு மொறச்சுக்கிட்டே வெளியே போறான்.

குறுக்கெழுத்துப் போட்டி

எண்: 2

மேலிருந்து கீழ்:

1. பெயருக்கு மாறாய் நடந்த படை
8. பருவ காலத்தில் ஒன்று
40. குழம்பியுள்ளது, குழப்பத்தில் உள்ள தமிழரின் கிழக்கு எல்லை ஊர்.

கீழிருந்து மேல்:

19. மன்னன் வதிவிடத்தின் மற்றொரு பெயர்
63. (குழம்பியுள்ளது) சூடிக்கொடுத்த இலக்கியப் படைப்பாளி
63. '... தழைத்து அறுகு போல் பெருகி'

இடமிருந்து வலம்:

1. ஆறாக மாறும் நீரோடை
9. காதலின் கொஞ்சம் அதிகம் - மேலதிகம்
17. எதிர்காலத் தலைநகரம் - துறைமுகம்
28. தட்டுமுட்டுச் சாமான் வைக்க நாமே அமைத்துக் கொள்வது - பட்டமரத்தினால்..
33. கடல்கொண்ட ஆறு
59. கிழமை இதழ், பூவிதழ், மாத இதழ்...

வலமிருந்து இடம்:

8. இதனிடம் தப்பிய உயிரினம் இல்லை
16. மறந்துபோன தானியம்
48. மன்னன் நல்லாட்சிக் குறி
56. கடாரம்கொண்ட சோழன்

1			■				8
மை		.	■	■	■		தி
		கோ				■	
	■	■	அ	28			■
		35		யா			40
41					கொ		48
ன்							
■	■	59					64

விதிகள்:

1. 'பறை' இதழுடன், பதிப்பகத்துடன் நெருங்கிய தொடர்புடையோர் அவரது குடும்பத்தினர் நண்பர் தவிர அனைத்துத் தமிழரும் பங்கேற்கலாம்.
2. தொடரும் மாதத்தின் 10 ஆவது திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு 'பறை' முகவரியிலோ, தொலைப்படியாகவோ சேர்ப்பிக்கவேண்டும்.
3. போட்டியில் பங்கேற்போர் தங்கள் தொடர்பு தொலைபேசி எண்ணைக் குறிப்பிடவேண்டும்.

பெறுமதிமிக்க பரிசுகள்

குறுக்கெழுத்துப் போட்டியில் வெல்வோருக்கு பரிசாக பறை ஒப்பம் ஒரு வருடத்திற்கு வழங்கப்படும்.

பறை ஆண்டு ஒப்பம்

ஒப்பம் தொடக்கம்: ________ முடிவு: ________

பெயர்: ____________________

முகவரி:

தொலைபேசி எண்

மின்அஞ்சல்: ஒப்ப எண்:

பறை ஆண்டு ஒப்பம்

ஒப்பம் தொடக்கம்:

ஒப்பம் முடிவு:

ஒப்ப எண்:

PARAI
104 Hymus Road
Toronto,ON M1L 2C9
416 261 9099

மால்கம் X

எனது கூற்று

அருள் சிங்கம்

கறுப்பின உரிமை வேண்டி நின்ற மால்கம் X (Malcolm-X) என்ற கறுப்பினத் தலைவரின் உரை: வெள்ளை - கறுப்பு என்ற பதங்கள் சிங்கள-தமிழ் என்று மாற்றப்பட்டும், தேவைக்கேற்ப எண்களும் மாற்றி எழுதப்பட்டது


ஒரு சிங்கள (வெள்ளை) மனிதன் எது செய்தாலும் அது சரி. தமிழ் (கறுப்பு) மனிதன் உணர்ச்சிகள் இல்லாமல் இருந்தல் வேண்டும். ஆனால், ஒரு தமிழ் (கறுப்பு) மனிதன் திருப்பி அடிக்கும் பொழுது அவன் ஒரு தீவிரவாதி. அவன் தன் உணர்வுகளை வெளிக்காட்டாமல், உணர்வுகளே இல்லாமல், அஹிம்சாவாதியாக, தனது எதிரியை நேசித்து, வாழ்தல் வேண்டும். எந்த வகையான தாக்குதலாயினும், அது வாயாலோ அல்லது வேறு விதமாகவோ இருப்பினும், அதனை அவன் சகித்துக் கொள்தல் வேண்டும். அவன் எழுந்து நின்று தன்னைப் பாதுகாத்துக் கொள்ள நினைத்தால் அவன் ஒரு தீவிரவாதி?

தீவிரவாதத்தில், புத்திசாலித்தனமாக இயக்கப்பட்ட தீவிரவாதத்தில், சுதந்திரத்தை காத்துக் கொள்ளும் தீவிரவாதத்தில், நீதி வேண்டிய தீவிரவாதத்தில், நான் நம்புவது ஏனெனில் நான் என் நெஞ்சில் மிகத்திடமாக நம்புகிறேன், ஒரு தமிழின (கறுப்பின) மனிதன் என்றைக்கு ஒரு உடன்பாடற்ற தீர்வை ஏற்று, சுதந்திரம் பாதிப்பிற்குள்ளாகும் பொழுது, எவ்வகையான வழிமுறையேனும் பயன்படுத்தி, தனக்கு சுதந்திரத்தை ஏற்படுத்தும் பொழுதோ, அல்லது அவ் அநீதியை தடுக்கும் பொழுதோ - நான் நினைக்கிறேன் - அவன் தனி மனிதனாக இருக்க மாட்டான்.

சிறீலங்கா (அமெரிக்கா) - எவ்வளவுதான் அது ஜனநாயகத்தைப் பற்றிப் பேசினாலும், அது முன்னைய தென் ஆப்பிரிக்காவையோ, முன்னைய போர்த்துக்கலைப் போலவோ அல்லது உலகின் எந்தவொரு இனவெறி நாட்டைப் போன்றோ இனவெறிபிடித்தது. இதற்கும் முன்னைய தென் ஆப்பிரிக்காவிற்கும் உள்ள ஒரே வித்தியாசம் என்னவெனில், முன்னைய தென் ஆபிரிக்கா பிரிவினையைப் போதித்து அதனையே பின்பற்றியது. ஆனால் சிறீலங்காவோ (அமெரிக்கா) தனிப்படுத்தலைப் பின்பற்றிக் கொண்டு ஒற்றுமையைப் போதிக்கின்றது. இதுதான் ஒரே வித்தியாசம். இவர்கள் தாங்கள் போதிப்பதை பின்பற்றுவதில்லை. ஆனால் முன்னைய தென் ஆபிரிக்காவும், போர்த்துக்கலும் தாங்கள் போதித்ததை பின்பற்றின.

நான் வாழும் இலங்கையில் (அமெரிக்காவில்) மூன்று மில்லியன் தமிழர்களும் (வெளியேற்றப்பட்ட 200,000 மலையகத் தமிழர்களையும், வெளியேறிய லட்சக்கணக்கான தமிழர்களையும் கொல்லப்பட்ட 60,000 க்கும் மேற்பட்ட தமிழர்களையும் சேர்க்கலாம்), பதினேழு மில்லியன் சிங்களவர்களும் வாழ்கிறார்கள். ஆகவே, நான் தமிழ் மக்களைப் பாதுகாக்க எது தேவையோ அதனை செய்ய எந்த வகையிலும் பின் நிற்கவோ, தயங்கவோ தேவையில்லை. நான் உண்மையாக நம்புகிறேன். எப்பொழுது - தமிழ் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்கிறார்களோ, அன்று பல சிங்களவர்களும் அவர்களை மதிப்பர். அத்தோடு இப்பொழுது இந்த “எதிரியை நேசி” அணுகுமுறையோடு நம் பக்கம் இருக்கும் சிங்களவர் களைவிட அப்பொழுது நம் பக்கம் மேலும் பல சிங்களவர்கள் இருப்பர்.

என்னவெனில், நாம் எதிர்கொள்வது, ஒரு இனவாத சமுதாயம், இச்சமுதாயத்தில் உள்ளோர் ஏமாற்றுவோர், வார்த்தை ஜாலவாதிகள். அதனால் நாம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த ஒரே வழி என்னவெனில், நாமும்



அவர்களது மொழியை.... அவர்களுக்கு புரியும் மொழியை பேசுவதே ஆகும். இனவாதிகள், எப்பொழுதும் சாத்வீக மொழியையோ சமாதான மொழியையோ விளங்கிக் கொள்ள மாட்டார்கள். நாம் எதிர் கொண்டிருக்கும் இனவாதிகள் அவர்களது மொழியை 40இற்கும் மேற்பட்ட ஆண்டுகளாக நம்முடன் பேசியுள்ளார்கள்.

எந்தவொரு காலத்திலும்,



மால்கம் X

நீங்கள் சட்டத்தை மதிப்பதாக கூறிக்கொள்ளும் சமுதாயத்தில் இருப்பிழந்து அச்சமுதாயம் தனது சட்டத்தை - மொழி, சமய, காரணங்களுக்காக நடைமுறைப்படுத்த மறுக்குமாயின், நான் கூறுகிறேன். அம்மக்கள் எந்த வகையான வழியையும் பயன்படுத்தி தங்களுக்கு நியாயத்தை தேடிக் கொள்வதில் எத்தவறும் இல்லை.

நான் கூறுவது, நீங்கள் ஆயுதம் தாங்கினால்தான் உங்கள் கஷ்டங்கள் தீரும். ஆனால், ஆட்சியில் இருப்பவர்கள் தீர்த்து வைப்பார்கள் என்று நம்பியிருந்தால் பலகாலம் காத்திருக்க வேண்டியிருக்கும். எனது கருத்து யாதெனில், இந்தக் கறுப்பு, மாநிறம், வெள்ளை மற்றும் எந்தவொரு இளம் சமுதாயம் வாழ்வது, தீவிரவாத காலத்தில் புரட்சிக் காலத்தில், ஆட்சியில் இருப்போர் அவர்களது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி விட்டார்கள். இப்பொழுது மாற்றம் தேவை. ஒரு திருந்திய உலகம் ஏற்படுத்தப்படல் வேண்டும். அதனை ஏற்படுத்த ஒரே வழி தீவிரவாத முறைகளே ஆகும்.

பில்கிளின்ரனின் நிலை மொனிக்கா காலத்திலிருந்து தொடர்ந்தும் பெண்கள் தொடர்பாக கவலைக்குரிய வகையில்தான் இருக்கிறது போலிருக்கிறது. இது தொடர்ந்தும் அப்படியே இருக்கவேண்டும் என்பது என்னுடைய விருப்பமிலை. வேறு யாரும் அப்படி விரும்பப் போவதுமில்லைதான்.
ஆனால் அதற்காக தற்போது வந்திருக்கும் செய்தியின் உண்மைத் தன்மையை நம்பாமலிருக்கவும் முடியவில்லை.

அதையொட்டி ஒரு செய்தி. நான் முன்பொரு நாட்டில் வேலை செய்த இடம் டிஸ்னிலாண்ட் போன்ற பொழுதுபோக்கு நகரம். அங்கே நானும் ஒரு கென்யன் பையனும் - அப்ப நானும் பையன்தான் - இப்ப கொஞ்சம் வயசாகிவிட்டுது - ஒரு மேலாளரின் வீட்டுக்கு வெள்ளை அடிக்கப் போயிருந்தோம்.
வெள்ளை அடிக்க முன் சுவர் உரஞ்சும் வேலை.

கென்யன் பெடியன் சொன்னான் ‘இந்த தூசியில் நீ ஏன் நின்று வேலை செய்கிறாய் என்று தெரியவில்லை. நான் எண்டால் செய்ய மாட்டேன்” என்றான்.

“பிறகு சாப்பாட்டுக்கு என்ன செய்வாய்? ” என்றகேள்வியை நான் கேட்டு வைக்கத்தானே வேணும்.

அவன் சொன்னான் “உனக்கென்ன... சிறிலங்காவில் - அவனுக்கு ஈழம் தெரியாது - நீ மணம் முடித்தால், வரும் பெண் கழுத்து நிறைய தங்கத்துடனும், வீட்டுடனும், காருடனும், வீட்டுச் சாமான்களுடனும் வருவாள். பிறகென்ன “சாப்பாடு, குடி,... பிறகு சாகலாம்” என்ற ஆங்கில் பழமொழியையும் கடைசியில் சேர்த்துச் சொன்னான். அவனுக்கு அவன் நாட்டில் அப்படி யில்லையாம். நிலைமை தலைகீழாம். கவலைப் படுகிறான்.

எங்கள் தமிழர் தாமிருக்கும் அந்தந்த நாடுகளில் தாங்கள் மொழியைக் கற்கிறார்களோ பண்பாட்டைக் கற்கிறார்களோ இல்லையோ தாங்கள் வந்த வழிமுதலான எங்களது மொழியின் கெட்டவார்த்தைகள் அனைத்தையும் பண்பாட்டின் சீரழிவுகள் அனைத்தையும் பெருமையாக நினைத்து மற்றவர்கள் அனைவருக்கும் சொல்லிக் கொடுத்துவிடுவார்கள்.

தற்போது நடந்திருப்பது வேறு. 20 பசுக்களும், 40 ஆடுகளும் பில்கிளின்ரனுக்கு அனுப்பி வைத்துவிட்டு கிளின்ரனின் மகளை மணக்கக் கேட்டிருக்கிறார் கென்யர் ஒருவர். கொட்வின் கிப்கெமுவா செப்குர்கோர் என்ற கென்யர் இப்படி பரிசுப் பொருளை அனுப்பிவிட்டு செல்சிக்காக காத்திருக்கிறாராம். இப்போதல்ல 2000 இல் அனுப்பி வைத்த கடிதத்துக்கு கிளின்ரன் பதில் வரும் என்று பார்த்திருக்கிறார். பக்கத்திலிருக்கும் உகண்டாவுக்கு கிளின்ரன் போயிருந்தபோது இந்தக் கடிதத்தை அனுப்பியிருக்கிறார். “கிளின்ரன் குடும்பம் பற்றி எனக்கு நிறையவே தெரியும். அவர்களின் கிறீத்தவப் பற்று, எளிமை ஆகியவை எனக்கு மிகவும் பிடிக்கும்” என்று அறிக்கைவேறு விட்டிருக்கிறார் செப்குர்கோர். அதுமட்டுமல்ல “இதுதான் எனது முதலும் கடைசியுமான காதல்“ என்றுஅடுத்த அதிரடி கொடுத்திருக்கிறார்.

இதை கண்டுபிடித்து எழுதிய பிரஞ்சு ஊடகவிய லாளருக்கு கிளின்ரனில் என்ன கோபமோ?

இதே காலப்பகுதியில் பிரான்சிலிருந்த எனது ஒரு நண்பர் அடிக்கடி செல்சியை நினைத்து உருகியிருக்கிறார். அவர் ஒரு அறிவு சீவி. கொட்வின் கிப்கெமுவா செப்குர்கோர் உம் அறிவு சீவிதான்போல.

பில் கிளன்ரன் மகளுக்கு சீதனம்

கென்யாவிலிருந்து வந்த யாரையாவது தெரிந்தால் கேட்டுச் சொல்லுங்கள்.

ஆனால் ஆப்பிரிக்காவில் சில நாடுகளில் சில பண்பாடுகளிடையே இப்படி ஆண்கள்தான் சிறீ-தனம் கொடுக்க வேண்டும் என்பது மரபு. எங்களுடைய ‘ஆப்பிரிக்காவில் பணிமுடித்துத் திரும்பிய’ பல ஆசிரியர்களைக் கேட்டால் சிலருக்கு இது தெரிந்திருக்க வாய்ப்பிருக்கிறது. இது பற்றி தமிழறிஞர் முனைவர் க.ப.அறவாணனின் நூல்களிலும் தமிழில் சில தகவல்கள் கிடைக்கும் வாய்ப்பிருக்கின்றது.

சுமார் 30 படங்களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிய பிறகு அழகி படத்தின் மூலம் இயக்குநரான தங்கர்பச்சான், 'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' படத்தின் மூலம் நடிகராகவும், தயாரிப்பாளராகவும், விநியோகஸ்தராகவும் மாறியிருக்கிறார். ஏராளமான சிக்கல்களைச் சந்தித்த பிறகு படத்தை வெளியிட்டுவிட்டு, அலுவலகத்தில் உட்கார்ந்து தினசரி வரவுகளைக் கவனித்துக் கொண்டிருந்த அவரிடம் ஒரு பேட்டி.


கேள்வி: பட வெளியீட்டிற்குப் பிறகான உங்கள் உணர்வுகள்...?
பதில்: மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நடிகர் கிடைக்காததால் நானே நடித்தேன். தயாரிப்பாளர் கிடைக்காததால் நானே தயாரித்தேன். விநியோகஸ்தர்கள் மிகவும் குறைந்த விலைக்குப் படத்தைக் கேட்டதால், நானே வெளியிட்டேன். இப்படி கட்டாயத்தின் பேரில் எல்லா வேலைகளையும் நான் செய்த போதும், மனதிற்குள் ஒரு பயம் இருந்து கொண்டிருந்தது. படம் வெளியாகி மக்களிடம் போய்ச் சேர்ந்தவுடன், அவர்கள் கொடுத்த ஆதரவு எனக்கு நிறைய தைரியத்தைக் கொடுத்திருக்கிறது. என்னை நடிகனாகவும் ஏற்றுக்கொண்டதில் மகிழ்ச்சி.

கேள்வி : இயக்குநராக, நடிகராக வெற்றிபெற்ற நீங்கள், தயாரிப்பாளராக வெற்றி பெற்றுள்ளீர்களா...?
பதில்: தயாரிப்பாளராக நான் முழுமையாக வெற்றிபெறவில்லை என்று சொல்ல முடியாது. படம் நன்றாக இருக்கிறது என்று எல்லா இடங்களில் இருந்தும் தகவல் வந்தாலும், வசூல் கணக்கு அந்த அளவுக்கு நன்றாக இல்லை. இந்தப் படத்தைத் தொடர்ந்து ஓட அனுமதிப்பதா? அல்லது எடுத்துவிடுவதா? என்ற குழப்பத்தில் பல திரை அரங்க உரிமையாளர்கள் இருக்கிறார்களாம். இதுபோன்ற குழப்பம் இதுவரை வந்ததில்லை என்கிறார்கள்.

கேள்வி: நடிகைகள் பற்றி கூறிய கருத்துக்காக நீங்கள் மன்னிப்பு கேட்ட நிகழ்வு, இப்பொழுது குஷ்பூ பற்றிய விவாதங்கள் குறித்து...?
பதில்: அந்த நேரத்தில் நான் கடும் மன நெருக்கடிக்கு ஆளானேன். அவற்றையெல்லாம் தாண்டி படத்தின் வெற்றியை மட்டுமே கருத்தில் கொண்டு உழைத்து, வெற்றியும் பெற்றேன். குஷ்பூ பேசியது, அதன் எதிரொலியாக நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நியாயம் புரிந்திருக்கிறது. அது போதும்.

கேள்வி : தொடர்ந்து நடிப்பு, தயாரிப்புப் பணிகளில் ஈடுபடுவீர்களா?
பதில் : கதையைப் பொறுத்து எல்லாமே தீர்மானமாகும் என்றாலும், நானும் தொடர்ந்து நடித்துக் கொண்டிருப்பது என முடிவு செய்திருக்கிறேன்.

அஜித், இப்போது 'பரமசிவன்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்புக் கிடையில் ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி 'காட்.ஃபாதர்' படத்துக்காக ஒரு வாரம் தேதி கொடுத்தார். அந்தத் தேதிகளில் தயாரிப்பாளர் சக்ரவர்த்தி படப்பிடிப்பை நடத்தவில்லை. ஒருநாள் பார்த்த அஜித், அடுத்த நாள் தானே நேராகப்போய் இயக்குநர் கே.எஸ்.ரவிகுமாரைப் பார்த்து செய்தியைச் சொல்லிவிட்டு அந்தத் தேதிகளையும் 'பரமசிவன்' படத்துக்கே கொடுத்துவிட்டார். 'காட்.ஃபாதர்' படம் என்னவாகும் என்று யாருக்குமே தெரியவில்லை.



விஜய் நடிக்கும் 'சிவகாசி', விக்ரம் நடிக்கும் 'மஜா' சேரன் நடிக்கும் 'தவமாய் தவமிருந்து' ஆகிய படங்கள் தீபாவளியன்று திரைக்கு வருவதாக இருந்தது. இப்போது இந்தப் பட்டியலில் விஜய்காந்த் நடிக்கும் 'பேரரசு' படமும் சேர்ந்திருக்கிறது. படம் முன்பே தயாராகிவிடும் என்றாலும், தீபாவளி தினத்தன்றே வெளியிட வேண்டும் என்று விஜய்காந்த் விரும்புகிறாராம். இதனால் தயாரிப்பாளர் காஜாமைதீன் வருத்தத்தில் இருக்கிறாராம். தீபாவளிக்கு பல படங்கள் வரவுள்ளதால், அந்தக் கூட்டத்தல் முதல் கட்ட வசூல் குறைந்துவிடுமே



கொண்டிருக்கிறார்.

★ ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த இயக்குநர் கே. பாக்யராஜின் மகள் சரண்யா, கதாநாயகியாக நடிக்கும் 'பாரிஜாதம்' படப்பிடிப்பின் பெரும்பகுதி முடிவடைந்துவிட்டது. இந்தப் படத்தில் நாயகிக்குத்தான் முக்கியத்துவம் இருக்கும் என்பதை தெரிந்துதான் நாயகனாக நடிக்க, நடிகர் பிருத்விராஜ் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனாலும், தனக்கு நடிப்பதற்கே வாய்ப்பில்லாத அளவுக்கு கதையோட்டம் இருப்பதாக, நண்பர்களிடம் வருத்தப்படுகிறாராம் பிருத்விராஜ்.

சிறீகாந்த் நடித்துள்ள 'பம்பரக்கண்ணாலே' படம் முழுவதுமாக தயாராகிவிட்டது. கடந்த மாதத்தில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், 'கஜினி', 'மழை' ஆகிய படங்களின் வெளியீட்டால், இந்தப் படத்தைத் திட்டமிட்டபடி திரையிடுவது தள்ளிவைக்கப்பட்டது. தற்போது தீபாவளிக்கு நிறைய படங்கள் வெளியாகும் என்பதால், உடனடியாக இதனை வெளியிட வேண்டாம் என முடிவு செய்துள்ளனர். தீபாவளிக்கு வெளியாகும் படங்களின் ஓட்டத்தைப் பொறுத்து இந்தப் படத்தை வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

★ சிறீகாந்தின் மற்றொரு படம்

க்க... சுவைக்க

என்பது அவரது

...' நடிக்கும் 'ஆதி' படத்தை அவருடைய ...ஏ.சந்திரசேகரன் தயாரிப்பதாகச் ...கிறது. உண்மையில் அந்தப் படத்தின் ...ர் மு.க.ஸ்டாலினின் மகன் உதயநிதியாம். ... அடிப்படையில் எஸ்.ஏ.சந்திரசேகரன் ...ள்ளார். இப்போது உதயநிதிக்கும், ...் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ...டப்பிடிப்பு தடைபட்டிருப்பதாகத் தகவல்.

...போது கே.எஸ்.ரவிகுமார் இயக்கத்தில் ...ன்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். ...் ரவிக்குமாரின் வேகத்துக்கு ஈடுகொடுக்க ...சிம்பு தடுமாறுகிறாராம். இதனால் அடிக்கடி ...ன் மோதலில் ஈடுபடுகிறாராம். ஆனால் ...ாளர்களிடம் இந்தப் படத்தில் இயக்குநர் ... மட்டுமே செய்கிறேன் என்று சொல்லிக்

கனடாவில் வாழும் ஈழத்துத் திரைப்படத்தின் மூத்த தலை நடிகர்கள் கே.எஸ்.பாலச்சந்திரன் மற்றும் சுப்புலட்சுமி காசிநாதன்





ரொரன்ரோவில் தொடர்ந்து நடைபெற்று வரும் குறுந்திரைப்பட விழா நடைபெற்றது. ஈழ, இலங்கை, தமிழக, கனடிய, ஐரோப்பிய திரைப்படங்கள் இடம்பெற்றன. சிறந்த திரைப்படமாக கிச்சான் என்ற ஈழத்துத் திரைப்படம் பெற்றுக் கொண்டது. சிறந்த நடிகை என்ற விருது சத்தியா தில்லைநாதனுக்கு இரண்டாவது முறையாக தொடர்ந்து வழங்கப்பெற்றது.

நான்காவது சர்வதேச தமிழ்க் குறுந் திரைப்பட விழா 27 குறுந்திரைப்படங்கள் இங்கு திரையிடப்பட்டன. பலவகையான திரைப்படங்களும் தியைிடப்பட்டன.

பிரான்ஸ் நாட்டில் உருவாக்கப்பட்ட "பேரன் பேத்தி" என்ற திரு. குகநாதனின் படத்துடன் விழா ஆரம்பமாகியது. புலம்பெயர்ந்த தமிழ்ச்சிறார்களுக்கு தமிழ் கற்பித்தலின் அவசியத்தை தாத்தா பேத்தி உறவோடு கலந்த சோக முடிவோடு படம் பல நிமிடங்களை விழுங்கிக் கொண்டது.

கிழக்குத் தமிழீழத்தில் உருவாக்கப்பட்ட "கிச்சான்" படம் அடுத்ததாகத் திரைக்கு வந்தது. கதை, வசன அமைப்பு, இயக்கம் என்று எல்லா வழிகளிலும் பல விருதுகளைத் தட்டிச் சென்றிருக்க வேண்டிய படம் ஆனால் சிறந்த நடிகருக்கான விருதை மட்டுமே பெற்றுக் கொண்டது. சிறந்த படமாக தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட "வெள்ளைப் பூனை" தெரிவு செய்யப்பட்டது.

கனடாவின் பங்காக ரூபனின் "யூ ரூ" என்ற படம் ஒருபாற் காதல் வன்முறைகளால் பலவீனப்பட்டுப் போனவர்களிடம் உருவாகுவது என்ற தொனியில் அமைந்து சலசலப்பை ஏற்படுத்தியது.

கனடாவின் இன்னுமொரு தயாரிப்பான " றெட் வின்ரர்" கே.பி.நாத் அவர்களால் உருவாக்கப்பட்டு இயக்கப்பட்டது. சிறந்த தொகுப்பாளருக்கான விருதை பெற்றுக் கொடுத்தது. சிறந்த நடிகைக்கான விருதை ரூபனின் "ஐயோ" படத்தின் மூலம் சத்தியா தில்லைநாதன் பெற்றுக் கொண்டார். புலம் பெயர்ந்த நாடுகளிடையேயான சிறந்த குறும்படமாக பற்றிக் பத்மநாதனின் "அந்த ஒருநாள்" தட்டிக் கொண்டது.



உலகளாவிய தமிழ்க் குறும் படவிழா

சிறந்த படம்	வெள்ளைப் பூனை	இந்தியா	
சிறந்த கதை	'யூ ரூ'	சுமதி ரூபன்	கனடா
சிறந்த நடிகை	ஐயோ	சத்தியா	கனடா
சிறந்த படம்	தீர்ந்து போன காதல்	இந்தியா	
சிறந்த படம்	அந்த ஒரு நாள்	கனடா	
சிறந்த படம்	கிச்சான்	இலங்கை	



'சதுரங்கம்'. முழுவதுமாக தயாராகி விட்ட பின்னரும், இப்படம் வெளியாகாமல் இருப்பதற்கு காரணம், இந்தப் படத்தின் உச்சக் கட்டக் காட்சியைப் போலவே அண்மையில் வெளியான 'தொட்டிஜெயா' திரைப்படத்தின் காட்சி அமைந்துள்ளதாம். இதனால், 'சதுரங்கம்' படக்குழுவினர் அதிர்ச்சியில் உறைந்துபோயுள்ளனர்.

* பாலுமகேந்திரா இயக்கத்தில் உருவாகியிருக்கும் 'அது ஒரு கனாக்காலம்' படத்தில் நிறைய சிக்கல்கள். இறுதியில் தயாரிப்பாளருக்கும், இயக்குநருக்கும் மோதல். இவற்றுக்கிடையில், திரையிடத் தயாராக உள்ள இந்தப் படம்,



ரஜினிகாந்துக்கு திரையிடப்பட்டுள்ளது. அடுத்தப் படத்தை அவர் மிகவும் அருமையாக வந்திருப்பதாகவும், உடனடியாக திரையிடுங்கள் என்றும் படக்குழுவினரிடம் தெரிவித்தாராம். இதனால், இப்படத்தை தீபாவளியன்று திரையிட திட்டமிட்டுள்ளனர். இப்படம் தனக்கு புதிய வாய்ப்புகளை நிச்சயம் உருவாக்கும் என, படத்தின் நாயகன் தனுஷைவிடவும், நாயகி பிரியாமணி எதிர்பார்ப்புடனுள்ளார்.

* 'தம்பி' படத்தின் இறுதிக்கட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ளார் இயக்குநர் சீமான். இந்தப் படம் முடிவடைந்த பின்னர், அவரும் நடிகர் ஆகப்போகிறார். அதற்காக இப்போது தீவிர உடற்பயிற்சிகள் செய்து உடலைத் தயார்படுத்தி வருகிறார்.

சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி

விமர்சனம்

அழகி, சொல்ல மறந்தகதை, தென்றல் ஆகிய படங்கள் வழி வாழ்வின் பல முகங்களை ஓரளவு அதன் இயல்வு மாறாமல் காட்டிய தங்கச் பச்சான் 'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' வழி மேலும் ஓர் அவல முகத்தை நம் பார்வைக்குக் கொணருகிறார். இம்முறை குடிமயக் கத்திலும் அதை விட பக்தி மயக்க த்திலும் சிக்கி உழலும் பொறுப்பில்லா குடும்பத் தலைவர்களைத் தோலுரிக் கிறார். குடி, சீட்டு இன்னபிற என்று பொறுப்பின்றி இருக்கும் குடும்பத் தலைவனை திருத்தும் வழியாக அவனை சபரிமலைக்கு அனுப்புவதும் அதன்பின் அவன் பக்திமயக்கத்தில் சிக்கி அதனால் ஏற்கனவே சீர்கெட்டுநிற்கும் அவன் குடும்பம் எப்படி மேலும் பாழ்பட்டுப் போகிறது என்பதை இயக்குனர் வெகு இயல்பாகச் சொல்லிச் செல்கிறார். குடி போன்ற பழக்கங்களை ஆட்பட்ட ஓர் ஆணால் அவனது குடும்பமும் உறவுகளும் எவ்வளவு பாதிப்புகளுக்கு உள்ளாவதையும் அதனால் எளிதானதாக இருக்கவேண்டிய குடும்ப வாழ்க்கையை எவ்வளவு சிக்கலான-தாக்கிக் கொள்கிறான் என்பதையும் எளிதாகக் காட்சிப்படுத்துகிறார்.


குடித்துவிட்டு இரவில் பசி தாங்க முடியாமல் சட்டியில் சாப்பி டுவது, தோசைக்கல்லை விற்பது, மனைவியை நடிகையைப்போல உடை அணியச்செய்து இரசிப்பது போன்ற காட்சியமைப்புகள் மூலம் இப்படிப்பட்ட ஆண்கள் எப்படித் தங்கள் தகுதிக்கு கீழானதும் இயல்புக்கு மாறானதுமான செயல்களைச் செய்கின்றார்கள் என்பதை மிக இயல்பாகக் காட்டுகிறார்.

குடிகார நாயகனை அவனது தந்தையும், மாமனாரும் திருத்த முயல்வதும் பின்னர் பக்தியிலிருந்து அவனை மீட்க முயல்வதுமான காட்சிகளில் சிறிது நகைச்சுவை.

அதே நேரத்தில் அவனது செயல்களினால் மனைவியும், குழந்தை களும் பாதிக்கப்படுவதை மிகுந்த அழுத்தத்தோடு கூறியிருக்கிறார். குடிகா ரனாக இருக்கும்போது போதை தெளிந்தவுடன் தவறை உணர்ந்து வருத்துவதையும், குடும்பத்தோடு இயல்பாக இருப்பதையும் காட்டுகிறார்.

ஆனால் பக்தி மாயையில் சிக்கியபின் மனைவி பிள்ளைகளுடன் பேசுவதை அறவே நிறுத்துவதையும், ஒருநாளில் ஒரு மணித்துளிகூட அவனால் இயல்பாக இருக்கமுடியாமல் போவதையும் காட்டுவதன் மூலம் குடியைவிட அதிக பக்தி எந்தளவு கொடியது எனப்படம் பிடிக்கிறார்.

பிள்ளைகள் சேர்த்து வைத்திருந்த உண்டியலை உடைப்பதை மனைவி பார்க்கும் காட்சியையும் அதன்பின் சாமிபடங்களை மனைவி உடைப்பதைக் கணவன் காணும் காட்சியையும் தொடரும் ஒருங் கிணைந்த உருவாக்கக் காட்சிகளாகப் பார்க்கலாம். அதைப்போன்று கணவன் காணாமல் போனபின் தானே உழைத்துப் பிள்ளைகளை வளர்க்க முடிவு செய்த காட்சியும், கணவன் மீண்டும் வந்தபின் உடனே அவனை ஏற்றுக் கொள்ளாமல் விலக்குவதும் இது போன்ற சூழல்களில் நமது பெண்களின் நிலைப்பாடு என்னவாக



இருக்கிறது என்னவாக இருக்க வேண்டும் என்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகள்.

இளையராஜாவின் பின்னணி இசை, இதைப்போன்ற படங்களுக்கு அவரது தேவையை மீண்டும் வலியுறுத் துகிறார். இன்றையத் தமிழ்ச் சமூக த்திற்கு மிகத் தேவையான கதைக்கு இயல்பான காட்சியமைப்புகள் மூலம் கதை சொல்லும் முறை ஆகியவற்று க்காகத் தங்கர்பச்சானைப் பாராட்டி னாலும், அய்யப்பன் பாடலின் போது அய்யப்பசாமி படம்பார்ப்பது போன்ற உணர்வேற்படுகிறது. தேவையான இடத்தில் சேர்க்கப் பட்டிருந்தாலும் 'காபரே' பாடலைத் தவிர்த்திருக்கலாம் என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்கக்கூடாது. தனது எல்லாப் படங்களிலும் 'தேவையான' இடத்தில் ஒரு கவர்ச்சி நடனப்பாடலைத் தங்கர் வைப்பது நெருடலான ஒன்று. இயல்பான கரு, காட்சியமைப்புகளுடன் வந்திருக்கும் முன்மாதிரியான படம். குடும்பத்துடன் பார்க்கலாம்.

கதை, திரைக்கதை, உரையாடல், இயக்கம்- தங்கர்பச்சான். ஒளிப்பதிவு பி. கண்ணன் இசை - இளையராஜா. **- லியோ**

அடைக்கலத்தால் அவப்பெயர்?

ஈழத்தமிழர்கள், தமிழ்த் திரைப் படத்துறைக்கு வந்து படங்களைத் தயாரிப்பது, அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. ஆனால், இது வரையிலும் குறிப்பிட்டுச் சொல்லும்படி யாரும் வெற்றிகரமான தயாரிப்பாளராக வரவில்லை.

கனடா மற்றும் நேபாளத்தில் பல தொழில்களில் ஈடுபட்டு வருபவர் நாராயணதாஸ். இவர், பாலுமகேந்திரா இயக்கத்தில் வீடு என்ற திரைப் படத்தைத் தயாரித்தவர். கடந்த ஆண்டு புதிய இயக்குநர் புவன ராஜாவை வைத்து, பிரசாந்த், உமா, தியாகராஜன் ஆகியோர் நடித்த 'அடைக்கலம்' என்ற திரைப் படத்தைத் தயாரித்தார். படப்பிடிப்பு முழுவதும் முடிவடைந்து இன்னும் பின்னணி இசைச் சேர்ப்பு வேலை மட்டுமே மீதமுள்ள நிலையில், படத்தை அப்படியே விட்டு விட்டு நேபாளம் திரும்பிச் சென்று தொழில்களை கவனிக்கத் தொடங்கி விட்டாராம். இதனால், படத்தின் நிர்வாகத் தயாரிப்பை ஏற்றிருந் தவரும், தயாரிப்பில் துணையாக இருந்தவரும் பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளனராம்.

இவர்கள் இருவரும் சொல்லி ஒருவரிடம் 40லட்சம் ரூபாய் கடன் வாங்கினாராம் தயாரிப்பாளர் நாராயணதாஸ். இப்பொழுது அவர் வெளிநாடு சென்றுவிட்டதால், பணம் கொடுத்தவர், நிர்வாகத் தயாரிப்பாளரையும், துணைத் தயாரிப்பாளரையும் நெருக்குகிறாராம். தொலைபேசி, மின்னஞ்சல் என தொடர்பு கொண்ட போதிலும், எதற்கும் அவர் பதிலளிக்க மறுக்கிறாராம்.

இவர் கள் மாட்டிக் கொண்டுள்ளது ஒருபுறம் இருக்க, பணம் கொடுத்த நபர், ஈழத் தமிழர்களுக்கு இனி கடன் கொடுக்கப் போவதில்லை எனப் புலம்பித் திரிகிறாராம். தனிநபர் செய்த தவறால், ஈழத் தமிழர்களுக்கு அவப்பெயரா?



கனடாவில் தயாரிக்கப்பட்ட சுகம் சுகமே படத்தில் ஒரு காட்சி

முதல் அரசன் யார்?

யாழ்ப்பாண அரசின் முதல் அரசன் யார் என்பதில் வரலாற்று ஆசிரியர்களிடம் கருத்து ஒற்றுமை இல்லாமல் இருக்கிறது. அது போலவே யாழ்ப்பாணம் என்ற பெயரின் தோற்றத்திலும் கருத்து ஒற்றுமை காணப்படவில்லை.

யாழ்ப்பாண அரசின் தோற்றமும் மறைவும் 2

நக்கீரன்

யாழ்ப்பாண வைபவமாலை எழுதிய மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாணத்தை ஆண்ட கதிரமலையில் இருந்து அரசாண்ட உக்கிரசிங்கராசன் பின்னர் சிங்கை நகரை (சிங்க நகரை செங்கடக நகரி என்று யாழ்ப்பாண வைபவமாலை கூறியிருப்பது தவறாகும்) தலைநகராக்கி ஆண்டு வந்தான். பின்னர் அவன் தனது மகனான நரசிங்கராசன் என்னும் பெயர் படைத்த வாலசிங்கராசனுக்கு முடி சூட்டி வைத்து இயற்கை எய்தினான்.

வாலசிங்க மகராசன் செயதுங்கவர-ராசசிங்கன் என்னும் பட்டப் பெயருடன் ஆண்டு வருகையில் சோழநாட்டில் இருந்து இரண்டு கண்ணும் தெரியாத கவி வீரராகவன் என்னும் பாணன் செயதுங்கவரராசசிங்கன் மீது ஒரு பிரபந்தம் பாடிக் கொண்டு போய் யாழ் வாசித்துப் பாடினான். அரசன் அதைக் கேட்டு மகிழ்ந்து இலங்கையின் வடதிசையில் உள்ள மணற்றிடல் என்னும் நாட்டைப் பரிசிலாகக் கொடுத்தான்.



யாழ்ப்பாணன், மணற்றிடலுக்கு யாழ்ப்பாணம் என்று பெயரிட்டுத் தமிழ்க் குடிகளைக் குடியேற்றி அவ்விடம் இருந்த சிங்களவர்களையும் ஆண்டு முதுமை அடைந்து இறந்து பட்டான். அவன் இறந்துபோகவே அவனது நாட்டை அரசாளக் கருதி சிங்களவரும் பிறரும் தமிழ்க் குடிகளை ஒடுக்கியதால், தமிழ்க் குடிகள் தங்கள் நாட்டிற்கே (தமிழ் நாட்டிற்கு) போய்விட்டார்கள்.

சிறிது காலம் யாழ்ப்பாணம் அரசு இல்லாமல் தளம்பிக் கொண்டிருந்த வேளையில் பொன்பற்றியூர் வேளாளன் பாண்டி மளவன் என்னும் பிரபு மதுரைக்குச் சென்று அவ்விடத்திலே சோழநாட்டிலிருந்து வந்து கல்வி கற்றுக் கொணடிருந்த திசையுக்கிர சோழன் மகனாகிய சிங்ககேதுவுக்கு மருமகனான சிங்கையாரியன் என்னும் சூரியகுலத்து இளவரசனக் கண்டு, யாழ்ப்பாண நிலவரத்தை அறிவித்து, இவ்யாழ்ப்பாணத்தை அரசாட்சி செய்ய வரவேண்டுமென்று கேட்க, சிங்கையாரியராசன் மறுத்துப் பேசாமற் பாண்டிமழவன் வேண்டுகோளுக்கு உடன்பட்டு, புவனேகவாகு என்ற அமைச்சரையும் காசி நகரத்தில் இருந்து வந்த கெங்காதர அய்யர் என்னும் குருவோடு பாண்டிய அரசன் அனுப்பி வைத்தான்.

யாழ்ப்பாணம் வந்திறங்கிய சிங்கையாரியன் மாடமாளிகைகள் கூட கோபுரங்கள், பூந்தோட்டம், நடுவே குளியல் குளம் உருவாக்கி அதில் யமுனா நதித் தீர்த்தம் கலந்துவிட்டு, நீதி மண்டபம், யானைப்பந்தி, குதிரைப் பந்தி, படை வீரர்கள் இருப்பிடம், நான்கு

திசையிலும் மதில்கள் ஆகிய அனைத்தும் கட்டுவித்து, கெங்காதர அய்யர் அவர் மனைவி அன்னபூரணி குடியிருக்க அக்கிரகாரமும் உருவாக்கினான்.

மேலும் கீழ்த்திசைக்குப் பாதுகாப்பாக வெயிலுவத்த பிள்ளையார் கோயிலையும் மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோயிலையும், தென்றிசைக்கு கைலைவிநாயகர் கோயிலையும் வடதிசைக்குச் சட்டநாதேசுவரர் கோயில், தையல்நாயகியம்மன் கோயில், சாலை விநாயகர் கோயிலையும் கட்டுவித்துத் திலகவதியார் என்னும் தனது அரசியாரோடு குடிபுகுந்து நாட்டை ஆண்டு வந்தான். (யா.வை. மாலை பக்கம் 23-27) திரு. குல சபாநாதன் பதிப்பு)

புராதன யாழ்ப்பாணம் என்ற நூலை எழுதிய முதலியார் சி. இராசநாயகம் யா.வை. மாலை உக்கிர சிங்கன் பற்றி எழுதியது விஜயன் கதைபோல் ஒரு புராணக் கதை என்றும் அவன் கலிங்க அரச குலத்தவன் என்றும், வடபகுதியைத் தாக்கிக் கைப்பற்றி கதிரமலையில் இருந்து ஆட்சி செய்தான் என்றும், அப்படி ஆட்சி செய்து வரும் காலத்தில் கீரிமலைக்கு புனிதயாத்திரை வந்த சோழகுல இளவரசியான மாருதப்புரவல்லி மீது காதல் கொண்டு அவளை வலுக்கட்டாயமாக தூக்கிச் சென்று திருமணம் செய்து கொண்டான் என்கிறார்.

உக்கிரசிங்கன் வன்னிக்கு ஏகி அங்கு ஆட்சி செய்து கொண்டிருந்த ஏழு வன்னியர்களைத் தனக்குத் திறை செலுத்துமாறு கேட்டுக் கொண்டான்.

உக்கிரசிங்கன் மாவிட்டபுரம் கோயிலையைக் கட்டுவதில் ஈடுபட்டிருந்த மாருதப்புரவல்லிக்கு உதவி செய்தான். அரசியாரின் வேண்டுகோளுக்கு இணங்க அவளது தந்தையான சோழ மன்னன் கோயிலில் பிரதிட்டை செய்ய விக்கிரகங்களையும் பூசை செய்யப் பிராமணக் குடும்பம் ஒன்றையும் அனுப்பி வைத்தான். இவ்வாறு கோயில் சிலைகளோடு வந்திறங்கிய இடமே இன்று காங்கேசன்துறை (காங்கேயன் ஸ்ரீ கந்தசுவாமி) என அழைக்கப்படுகிறது. அதற்கு முன்னர் அந்தத்துறை காயத்துறை அல்லது அதன் திரிபான காசாத்துறை என அழைக்கப்பட்டது. புத்தகாயாவுக்கு இந்தத்துறையில் இருந்துதான் பவுத்த யாத்திரீகர்கள் பயணம் செய்தார்கள்.

சிறிது காலம் கழித்து உக்கிரசிங்கன் தனது தலைநகரைக் கதிரமலையில் இருந்து சிங்கநகருக்கு மாற்றிக் கொண்டான்.

யா.வை.மாலை ஆசிரியர் உக்கிரசிங்கன் தனது தலைநகரை கதிரமலையில் இருந்து செங்கடநகருக்கு (கண்டி நகரின் மறுபெயர்) மாற்றினான் எனக் குறிப்பிடுவது தவறாகும். (புராதன யாழ்ப்பாணம் - பக்கம் 242-244)

தொண்டை நாட்டைச் சேர்ந்த அந்தகக் கவி வீரராகவன் பாடல் பாடி மணற்றிடல் என்னும் நாட்டைப் பரிசாகப் பெற்றான் என்ற கதையை வழிமொழியும் யாழ்ப்பாணச் சரித்திரம் பரிசளித்த அரசனையும் அவன் ஆண்ட நாட்டினையும் காலத்தையும் மாற்றி விடுகிறது!

யாழ்ப்பாணச் சரித்திரம் எழுதிய ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை பின்வருமாறு அந்தகக்கவி வீரராகவன் பாடல் பாடி பரிசு பெற்ற கதையைச் சித்தரிக்கிறார்.

தனது மனைவியோடு சண்டை பிடித்துக் கொண்ட அந்தகக்கவி வீரராகவன் தனது இனசனத்தோடும் ஈழம் நோக்கி மரக்கலங்களில் பயணப்பட்டு மணற்றியில் இறங்கி அனுராதபுரத்தை அடைந்தான். அங்கே அரச தரிசனத்துக்குச் சமயம் பார்த்துச் சபாமண்டபத்தில் புகுந்தான். அவன் வரவும் அவன் இயல்புணர்ந்த ஏலேலன், அந்தகர் முகத்தில் விழித்தலாகாது என்னும் வழக்கம் பற்றித் திரை மறைவிலிந்து அக்கவிவாணனை உபசரித்தான். அஃதுணர்ந்த கவிவாணன்,

நரைகோட்டிளங் கன்றுநல்வளநாடு நயந்தளிப்பான்
விரையூட்டுதார்ப் புயன்வெற்பீழ மன்னனென்றே விரும்பிக்
கரையோட்டமா கமரக்கலம்போட்டுனைக் காணவந்தால்
திரைபோட்டிருந் தனையேலேல சிங்கசிரோமணியே!

என்னும் பாடலைப் பாடினான்.

ஏலேலன் அதைக் கேட்டு அதிசயத்தவனாய் 'இக்கவிவாணர் பிறவிக் குருடராயிருப்பினும் அகக் கண்ணினாற் காணும் பெருவல்லமை யுடையராதலின் அவர்முன்னே நாம் திரையிட்டிருத்தல் தகாது' என மதித்துத், திரையை நீக்குவித்து அவன் வரலாற்றை வினாவினான். அந்தகக்கவி தான் கொண்டு வந்த பிரபந்தத்தைப் யாழோடு பாடினான்.

பாடல்களைச் செவிமடுத்த அரசன் அவனைப் புகழ்ந்து வேண்டியதைக் கேட்க என்றான். அந்தகக்கவி தனது மனைவியோடு சண்டையிட்ட கதையைச் சொன்னான். அரசன் அவனுக்கு மணற்றியையும் ஒரு யானையையும் ஒரு பல்லக்கோடு பரிசனங்களையும் கொள்கவெனக் கூறிப் பல வரிசைகளோடு பெருந் திரவியமுங் கொடுத்தான்.

மணற்றியில் பல்லக்கில் வந்து சேர்ந்த

கனடாவில் நடந்த கூட்டம் ஒன்றில் இது நடக்கவில்லை:

கூட்டத்தில் பேசுபவர் தொடர்ந்து நிறுத்தாமல் பேசினார். தடுப்பதற்கு பலரும் முயற்சித்தனர். தலைவர் முயற்சி செய்தார். பிறகு இடையில் துண்டு குடுத்து விட்டார்கள். முடியவில்லை.

ஒருவர் துப்பாக்கியோட மேடைக்கு வந்தார். அதைக் கண்டு பேசியவர் நிப்பாட்டி விட்டார்.

ஆனால் துப்பாக்கியோட வந்தவர் "இல்லையில்ல நீங்கள் பேசுங்கோ. நான் உங்களை பேசக் கூட்டிக் கொண்டு வந்தவரைத்தான் தேடுறன்" எண்டு சொன்னாராம்.

இந்த துப்பாக்கி சொந்தக்காரர் நல்ல வேளையாக கனடாவில் இல்லை.

அந்தகக் கவி மணற்றியைச் சுற்றிப் பார்த்து நல்லூருக்கு அணித்தாகத் தனக்கொரு மாளிகையையும் அதன் சூழலிலே தன் பரிசனங்களுக்கு வீடுகளும் அமைப்பித்துச் சிலநாள் வாழ்ந்து வந்தான். அப்படி வாழ்ந்து வரும் நாளில் ஒரு குளத்தை வெட்டு வித்தான். அக்குளம் இன்றும் பாணன் குளம் என்று அழைக்கப்படுகிறது.

பின்னர் அந்தகக்கவி தனது சொந்த நாட்டுக்குச் சென்றான். தொண்டைமானிடம் சென்று தான் பரிசாகப் பெற்ற மணற்றியிற் குடியேற்றுதற்கு இராசதந்திரம் வல்ல அமைச்சர் பிரதானிகளையும் சிறு படையையும் தரல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அந்தகக்கவியிடம் அவன் பரிசாகப் பெற்ற நாட்டின் வளங்களைக் கேட்டறிந்து கொண்ட தொண்டைமான் 'இயற்கையாக விளையும் உப்பை நீர் எமக்குத் தருவீராயின் உமக்குத் தேவையான குடிமக்களைத் தருவேன்' என்றான்.

அதற்கு அந்தகக்கவி உடன்படவே அவனுக்கு வேண்டிய அமைச்சர், பிரதானிகள், சிறுபடை, குடிமக்கள் ஆகியோரைக் கொடுத்ததோடு உப்புக்காக மரங்கலங்களையும் வேலையாட்களையும் ஒரு அதிகாரியையும் கொடுத்து அனுப்பினான்.

(வளரும்)

தமிழரின் முகவரி ஈழத்தமிழர்



எனது இதயத்தில் ஈழத் தமிழர்களுக்கு எப்போதும் ஒரு சிறப்பான இடமிருக்கிறது. ஏனென்றால் தமிழன் என்கின்ற இனத்திற்கு உலகில் முகவரி தேடித் தந்ததவர்கள் ஈழத் தமிழர்களே ! - **சத்தியராஜ்**

ஒரு இருப்பின் தொலைவு

ஊர் உறவறுத்து
உலகத்து மூலையில்
அகதி முகத்தில்
ஒழியும் என வாழ்வு!

நிந்திக்கப்பட்ட - இவ்
வாழ்விற்கு முன்னதாய்,
இனிமைச் சுரப்பில்
சிரித்துக் கிடந்த - என்
ஊர்த்தெருவில் - தாத்தாக்கள்
கையில் கைவிரல் தொடுத்து
நடைபயின்ற கதையினைச்
சொல்வேன்!!

என் ஊர்க்கரையில்
உட்கார்ந்திருந்து - ஒளியாய்....
உணர்வாய், உயிராய்த்....
தூங்காததொளிர்ந்த -
தூண்டாமணிகள்
துடைத்தெறியப்பட்ட
துயரத்தைச் சொல்லுவேன்!!

பனம் பழம் விழுந்திட,
ஊரே விழிக்கும்.
பசுக்களின் மொழியில்,
ஊர் பரபரப்பாகும்.
மத்தொலி முழங்க....
மன்னர்கள் போல....
திண்ணையில் சாய்வர் - என்
உயிர் தாத்தாக்கள்!!
பூங்கொத்தெனவே - அவர்
மடி நிறைந்த பேரர்கள்
சகிதமாய், அரசர்கள் போல
அவர்களின் இருப்பு!!
தாத்தாக்களில் ஊறிக்கிடந்த
உதிரமெங்கணும் தமிழெனும்
உணர்வே மூச்சாய் இருந்தது!!

வாடை பெயர்ந்தால் - ஊர்
தடுமாறும்
காட்டுப் பிள்ளையார்,
வேட்டைக்குப் போகும்!
நெளுவினி வினாயகர்
திருவிழாக் காணும்!
நாலுகரையும் ஆட்கள் திரள....
அந்தோனியாரின்
ஊர்வலம் போகும்!!!

கடவுள்களாகிய மனிதரும்....
மனிதர்களாகிய கடவுளும்....
வாழ்ந்த அற்புதப் பூமி!

கல்லை உயர்த்தி
வேலியாய் நிமிர்த்திப்,
"பகிர்" என்றழைத்து
எல்லை சமைத்த என்னரும்
முன்னோர்,
புதிரும் வியப்பும் கலந்திடக்
கொள்ளி வாற்பேய்களின்
கூத்துக்கள் பற்றிக்
கதையாய்ச் சொல்வர்!!

வயது முதிர்ந்து
பொல்லூன்றிய நாளில்
துர்த்தேவதைகள்
வழியை மாற்றியும்....
"பறை" தட்டி அதனை
துணிவுடன் எதிர்கொண்டிருந்த
அஞ்சாமை சொல்வர்!!

காலப்போக்கில்
துர்ச்சொர்ப்பனமாய்
போனது வாழ்வு!!

முதுவேர் முறுக்கி
ஆலடி வனமெனச்
சூழ்ந்த என் சுற்றம்....
மணல்மலையெனச் சரிந்து
சிதைந்தது!!

தாத்தாக்கள் எமக்குச்
சொன்னதைப் போலவே - எம்
வழியை மாற்றிடப் பேய்கள்
வந்தன!
ஊரை, உறவை..... மொழியை
அழித்துப்
புதைத்துப் போட்டன!!
போரின் கொழுந்துகள் எம்மை
எரித்தன!!
புத்தனைச் சொல்லியே
எம்முடல்
கருக்கின!!

பார்வையை மறந்து
உலகம் ஊனமான ஓர்
பொழுதில்....
எம்மூரின் நம்பிக்கைத்
தாத்தாக்களின்
"பறை" முழக்கம் கல்லாடெ-
தாழிந்தது!!
பிறகென்ன????

பேய்கள் மனிதரைப்
பிணங்களாக்கின!
மரங்கள் அழித்து மயானம்
சமைத்தன!
மனிதர்கள் காணாமற்
போனார்கள்!
உறவுகள் ஊர் பேர் அறியாது
அலைந்தழிந்தன!

பிள்ளையார்..... முருகன்.....
அந்தோனியாருடன்
நானும் அன்னிய நாட்டில்
அகதியாகினேன்!!!

மா. சித்திவினாயகம்



ஆண்களும் வயிற்றில் குழந்தை சுமப்பது சாத்தியமா?



ஞானம் அன்ரனி

கருவை வயிற்றிற் தாங்கி பத்து மாதம் சுமந்து பிள்ளை பெறுவது என்பது தியாகமும் துன்பமும் கலந்த ஒரு வாழ்வா சாவா என்னும் போராட்டம். இதில் ஒரு தாயின் பங்கு ஈடு இணையற்றது.

கடந்த ஏப்ரல் 30ம் நாள் இலண்டன் ஒன்ராறியோவில் 33 வாரங்களை மட்டுமே அடைந்த பெண் குழந்தை ஒன்று அவசர அறுவைச் சிகிச்சை மூலம் தாயின் வயிற்றிலிருந்து எடுக்கப்பட்டது. இந்தக் குழந்தை அதிசயக் குழந்தை என மருத்துவர்கள் பூரித்துப் போனார்கள். நம் வாழ்நாளில் இப்படியான இன்னொரு குழந்தையை பார்க்க வாய்ப்பே இல்லை என்றார் பிள்ளைப் பேற்றில் பணியாற்றிய ஒரு மருத்துவர். முழு உலகிலும் இவ்வாறு பிறந்த 5வது குழந்தை எமிலியா என்றும் இதற்கு முன் கடைசியாக தென் ஆபிரிக்காவில் 2003ம் ஆண்டு நில-ாலா (சுலு மொழியில் பேறு அல்லது அதிஷ்டம் என்று பொருள்) என்று பெயர் சூட்டப்பட்ட பெண் குழந்தை பிறந்ததாகவும் புள்ளி விபரங்கள் தரவுகளை வழங்கு கின்றன.

சரி, அப்படி இந்த 5 குழந்தைகளிலும் என்ன சிறப்பு எனக் கேட்பது புரிகிறது. இந்தக் குழந்தைகள் கருப்பையினுள் வளராமல் வயிற்றின் இடைவெளியில் ஈரலை ஒட்டி வளர்ந்து உயிர் பிளைத்தவர்கள்.

எவ்வாறு?

எவ்வாறு இது நிகழ முடியும் என மருத்துவர்கள் தரும் விளக்கத்தைப் பார்ப் போம். வழக்கமாக, கருவுற்ற முட்டை பலோப்பியன் குழாயூடாக பயணம் செய்து கருப்பையை சென்றடைந்து அங்கு வளருகின்றது. சில வேளைகளில் கருவுற்ற முட்டை பலோப்பியன் குழாயிலேயே தங்கி வளர்வதனால் இந்தக் குழாய் வெடித்து உயிராபத்துக்களை ஏற்படுத்துவதும் உண்டு.

மேலும் அரிதான சில வேளைகளில் (ஏறத்தாள ஒரு மில்லியனுக்கு ஒரு தடவை) கருவுற்ற முட்டை பலோப்பியன் குழாயிலிருந்து வெளியே வீழ்ந்து வயிற்றில் எங்காவது தங்குகின்றது. மேற் கூறிய குழந்தைகளின் சூழ்நிலையில் கருவுற்ற முட்டை இரத்தச் செறிவு கூடிய உறுப்பான ஈரலில் ஒட்டி வளர்ந்துள்ளது. இவ்வாறு வளர்ந்து உயிராக மீட்கப்பட்டவர்கள், இந்த 5 குழந்தைகளுமே. ஆகவே தான் இவர்களை வியப்பான (அதிசயக்) குழந்தைகளாகக் கருதுகின்றார்கள்.

இவ்வகைக் கருவுற்றல் பல்வேறு சிக்கல்களை வலியச் சென்று பெற்றுக் கொண்ட வையாகவே இருக்கின்றது. காரணம் இக்குழந்தைகள் கருப்பை தரக் கூடிய அதியுயர் பாதுகாப்புகள் அனைத்தையும் இழந்து நகரத்து நடு வீதியில் விடப்பட்டவர்கள் போல வயிற்றின் இடைவெளியில் விடப்பட்டு நசிந்து நெரிந்து உருப் பெற்றவர்கள். இதனால் முறையற்ற வகையில் வளைந்தும் நெளிந்தும் வளர்ந்து விட்ட எலும்புகள் போன்றவற்றைச் சரி செய்வது ஒரு புறம் இருக்க, தாயின் உயிருக்கே தீங்கு விளைவிக்கக் கூடியவையாக இருப்பதனால் தொடக்கத்திலேயே தெரிய வரும் சூழ்நிலையில் இவை அழிக்கப்படுகின்றன. அனைத்து வகைத் தொழில் நுட்ப சோதனைகளின் கண்ணிலும் மண்ணைத் தூவுவதன் மூலமே இக் கருக்கள் உருப்பெறுவது மேலும் வியப்பைத் தருகின்றது.

இனி இக் கட்டுரையின் தலைப்பு எழுப்பிய கேள்வியின் பக்கம் நமது பார்வையைத் திருப்புவோம். எதிர்காலத்தில் அறிவியல் இவ்வகைக் கருவுற்றலில் எழக்கூடிய சிக்கல்களைக் குறைக்கலாம். கூடவே ஆண் தன் வயிற்றில் கருவைத் தாங்க முடியாது என்று இல்லை என்ற நிலையும் வரலாம். காரணம், அதற்கான கருத்தியலை மருத்துவர்கள் வரைவது பற்றி எண்ணத் தலைப்பட்டு விட்டனர் என்பதே.

ஆனால், கருப்பை தரக்கூடிய இதமும், அதியுயர் பாதுகாப்பும்?

ஆண் தன் வயிற்றில் கருவைத் தாங்க முடியாது என்று இல்லை என்ற நிலையும் வரலாம். காரணம்,

நீ அவல் கொண்டு வா நான் உமி கொண்டு வருகிறேன்

"நீ அவல் கொண்டு வா" நான் உமி கொண்டு வருகிறேன் நாமிருவரும் அதை ஊதி ஊதித் தின்போம்" என்றொரு பழமொழி தமிழகத்தின் கிராமங்களில் பிரபலம். அந்த வகையில், வெறும் வாயை மெல்வதில் கூட வீரப்பிரதாபங்களை வெளிப்படுத்தும் தமிழக ஊடகங்களுக்கு இப்போது அவல் கிடைத்துள்ளது. அதுவும் கை நிறைய!

"கலை குறித்த சிந்தனை துளியுமின்றி, வெறும் பணத்துக்காக நடிக்கும் நடிகைகள் விபச்சாரிகளுக்கு ஒப்பானவர்கள்" என்று திரைப்பட கலை மீது உள்ள ஆர்வத்தில் இயக்குநர் தங்கர் பச்சான் கூறிய கருத்துக்காக, அவர் மன்னிப்பு கேட்டப் பின்னரும் வானத்துக்கும், பூமிக்குமாக குதித்தவர் குஷ்பு. அவரது அன்றைய கோப வெறிக்கு காரணம் இருந்திருக்கலாம். எங்கோ மும்பையில் பிறந்து, வளர்ந்த அவர், கலைச் சேவைக்காக தமிழகத்திற்கு வரவில்லைத்தான். பணத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டிருந்ததால், தங்கரின் கருத்துக்கள், அவரை அவமானப்படுத்தியிருக்கக் கூடும்.

ஆனால், இந்தியா டுடே பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில், ஒட்டுமொத்த தமிழினத்தின் மீதே தனது அடி மனதில் புதைந்து கிடந்த எதிர்ப்புணர்வை கொட்டித் தீர்த்தார். "தமிழ்நாட்டில் செக்ஸ் பற்றி தெரியாதவர்கள் இருக்கிறார்களா? திருமணத்திற்கு முன் செக்ஸ் உறவு வைத்துக் கொள்ளாத பெண் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்றெல்லாம் கருத்து தெரிவித்து, வாங்கிக்கட்டிக் கொண்டிருக்கிறார்".

இப்படி தமிழக ஊடகங்கள் வாய் வலிக்கும் அளவிற்கு அவல் கிடைத்த ஆனந்தத்தில் திளைத்துள்ளனர்.

இதில் தங்கர் பச்சான் விவகாரம், நடிகர் சங்கத்திற்கு நேரில் சென்று மன்னிப்புக்



கோரியதுடன் முடிவுக்கு வந்து விட்டது. ஆனால், ஒட்டுமொத்த தமிழ்ப் பெண்களையும் கொச்சைப் படுத்தியதால், குஷ்பு விவகாரம் மட்டும் இன்னும் சூடு தணியாமல் இருக்கிறது.

பண்பாட்டு சீரழிவுக்கு வழி வகுத்துவிட்டு, கிளிசரின் அழுகைக்கு பின்னால் ஒளிந்துகொள்ள முடியாது என்பதை, ஆர்ப்பாட்டம், உருவ பொம்மை எரிப்பு, நீதி மன்றங்களில் வழக்கு என தமிழகப் பெண்கள் உணர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால்,தமிழக ஊடகங்கம், மக்களின் சொரணையை சீரழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. வார இதழ்களாயினும், நாளிதழ்களாயினும், தொலைக்காட்சியாயினும் அனைத்து ஊடகங்களின் செயல்பாடுகளும் வணிக நோக்கில் இருப்பதால், கலாச்சார சீரழிவின் தொடக்கமாகவே உள்ளன.

குஷ்பு விவகாரம் பொருத்தவரையிலும், தமிழ் உணர்வு, பண்பாட்டு மேம்பாடு என்பதைவிடவும், சொந்த நலனுக்காகவும், விற்பனையை அதிகரிக்கவுமே ஊடகங்களின் முக்கிய செயல்பாடுகம் அமைந்துள்ளன. தங்கர் பச்சான் விவகாரத்தை ஊதி, ஊதி பெரிதுபடுத்திய தினமலர் போன்ற நாளிதழ்களால், குஷ்பு பிரச்னையை திசை திருப்ப மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதற்கு முக்கிய காரணம், இந்த விவகாரத்தை அரசியல் கட்சிகள் அல்லாமல், பொதுமக்களே நேரடியாக கையில் எடுத்ததுதான்!.

ஆனாலும், தினமலர் வகையறா ஊடகங்கள், இப் பிரச்னையை பா.ம.க., விடுதலை சிறுத்தைகளுக்கும், குஷ்புவுக்கும் இடையேயான மோதலாக்கி திசை திருப்ப மேற்கொண்ட முயற்சிகளும் பலன் அளிக்கவில்லை.

மக்களின் கொந்தளிப்புக்கு முன்னால், இத்தகைய முயற்சிகள் தோல்வியையே தழுவின.

தமிழக ஆட்சியாளர்களின் கையில் உள்ள தொலைக்காட்சியில்

பெண்களுக்கான நிகழ்ச்சி ஒன்றை குஷ்பு தொகுத்தளிக்கிறார் என்பதற்காக, அவரது செயலுக்கு நியாயம் கற்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், மக்களிடம் அச்செயல் நகைப்புக்குரியதாகவே இருந்ததுதான் உண்மை.

ஊடகங்கள் ஒருபக்கம் விற்பனைக்காகவும், பரபரப்புக்காகவும், அரசியலுக்காகவும் தங்களது கருத்துக்களை வெளியிட்டபோதிலும், மக்கள் தங்களது கொந்தளிப்பை கைவிடவில்லை என்பதற்கு, மாநிலம் முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளே சாட்சியாகும்.

இந்த நேரத்தில், அறிவு ஜீவிகள் என்று தங்களை மகுடம் சூட்டிக் கொண்டுள்ளவர்களின் கருத்துக்கள் பற்றியும் சொல்லியே தீரவேண்டும்.

அண்மைக்காலமாக எழுத்தாளர்கள் வெளியிட்டு வரும் கருத்துக்களால், அவர்களுக்கு சமூக அக்கறை இருக்கிறதா? என்பதே கேள்விக் குறியாக்கியுள்ளது. ஒருசிலர் தங்களது மேதா விலாசத்தை வெளிப்படுத்தி மக்களை குழப்பவும் முயற்சித்தனர்.

"ஆண் திமிர் அடக்கு" என்று அ. மார்க்ஸ் எழுதியதும், தலித் முரசில் ஜெயராணியின் கட்டுரையும் குஷ்புவின் குரலாகவே ஒலிக்கிறது. தீம்தரிகிட ஞானி, இந்தியா டுடே வாஸந்தி எனப் பெரும் படையே குஷ்புவை கண்டிப்போரை கடுமையாக சாடி வருகிறது. குஷ்பு கூறிய கருத்துக்களை திட்டமிட்டு இருட்டடிப்பு செய்துவிட்டு, தமிழ் பண்பாடு குறித்து பேசுவோர் அனைவரும், அடிப்படைவாதிகள் என இவர்கள் புதிய விளக்கம் அளிக்க முயற்சிக்கின்றனர்.

இதற்கு முக்கிய காரணம், மக்கள் எழுச்சிக்குப் பின்னால், மருத்துவர் ராமதாசும், திருமாவளனும் இருக்கிறார்கள் என்பது இவர்களின் சந்தேகம். ஆனால், அவர்கள் மீதுள்ள தனிப்பட்ட விரோதங்களுக்காகவும், காழ்ப்புணர்ச்சிக்காகவும் ஒட்டுமொத்த தமிழர்களை பழிக்கவும் அறிவு ஜீவிகள் துணிந்துவிட்டதும் பின்னணி புரியாமல் இல்லை.

திசைகளில் எழுதியுள்ள மாலன், இன்னும் ஒருபடி மேலே போய், தனது குஷ்பு ஆதரவு நிலைக்கு பெரியாரை துணைக்கு இழுத்திருப்பது ஆச்சரியத்திற்குரிய வினோதமாகும். இத்தகைய நடவடிக்கைகளால் சாமான்ய மக்களுக்கு எதிராக இவர்கள் நேரடி யுத்தத்தை அறிவித்திருப்பதையே அவர்களது எழுத்துக்கள் அம்பலப்படுத்துகின்றன.

தமிழக இலக்கியவாதிகளின் பீடாதிபதியாக விளங்கி வரும் சுந்தரராமசாமி இப்பிரச்னை பற்றி வாய் திறக்காமல் மௌனியாக இருக்கிறார். ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டதும், பதறித்துடித்து அவசர, அவசரமாக அறிக்கை வெளியிட்ட அவர், இப்போது மட்டும் அமைதியை நாடியதன் மர்மம்தான் என்ன? ஜெயேந்திரர் கைதை தான் கண்டித்ததுடன், சக எழுத்தாளர்களையும் கண்டித்தத் தூண்டும் வகையில் உடனடியாக கருத்தை வெளிப்படுத்தக் கோரிய சுந்தரராமசாமியின் அறிக்கையை, தமிழக நாளிதழ்களில் தினமணி தவிர வேறெதுவும் கண்டு கொள்ளவில்லை.(அதிலும் குறிப்பாக தினகரனில் அவரது அறிக்கையின் ஒரு பகுதி, வாசகர் குரல் பகுதியில் வெளியிடப் பட்டிருந்தது!)

தங்கர்பச்சான் பிரச்னையில் ஓடோடி வந்து பஞ்சாயத்து செய்ததுடன், மன்னிப்பை கேட்டுப் பெற்ற விஜயகாந்தும், ஜெயேந்திரர் கைதை அவசரத்துடன் கண்டித்து அறிக்கை வெளியிட்ட சுந்தர ராமசாமியும், இப்போது ஓடி ஒளிந்து கொண்டனர்.

இப்படியாக, தமிழர்கள் மீது யார் யாருக்கு அக்கறை இருக்கிறது என்ற உண்மையை குஷ்பு உளறல் உணர வைத்துள்ளது.

கட்டுரை அச்சுக்குப் போகும் கடைசி நிமிடத்தில் சுந்தரராமசாமியின் மறைவுச் செய்தி கிடைத்தது. கட்டுரை எழுதியவரை உடனடியாகத் தொடர்பு கொள்ள முடியாதபடியால் கட்டுரை வெளிவருகிறது.
14-10-2005 நள்ளிரவு- ரொன்ரோ

'பறை' கருத்துக் கணிப்பு

காலை உணவைப் பற்றிப் பெரும்பாலான ரொரன்ரோ வாழ் எம் தமிழர்கள் அக்கறையுடன் இருக்கிறார்கள்.

காலை உணவு உண்கின்றீர்களா என்ற கேள்வி கேட்கப்பட்டது.

60 வீதமான தமிழர் பதில் சொல்ல மறுத்துவிட்டனர்.

பதில் சொன்ன எம் தமிழர்களில்

73 வீதமானோர் காலை உணவு உண்கின்றர்.

62 வீதமானோர் பாணைக் காலை உணவாகக் கொள்கின்றனர்.

10 வீதமானோரே காலையில் புரத உணவை உட்கொள்கின்றனர்.

காலையில் புளிப்புச் சுவையுடைய பழச்சாறுகள் அல்லது மோர் அல்து பழஞ் சோற்றுத் தண்ணீர் போன்றன முதலில் அருந்த வேண்டும் என்பது 80 வீதமானவர்களுக்கு தெரிந்திருக்கிறது.

பதிலிறுக்க மறுத்த பெரும்பாலோர் கனடாவின் வாழ்க்கைச் சுமையில் காலை உணவை நினைக்க எங்கே நேரம் என்பது போன்று எண்ணுகின்றனர்.

90 வீதமான தமிழக் குழந்தைகள் பள்ளிக்கு செல்லுமுன் காலை உணவு அருந்துகின்றனர்.

வறுமையில் வலி(மை)

திருமகள் வேணித்தா - சிவபாலன்

நாள் ஏட்டில் யனனி, யது வாழ்க்கையில் நடந்தவற்றை பரட்டிப் பார்த்தாள். யதுவின் தந்தை கார்திகேயன். அவர்களது குடும்பம் மிகவும் ஏழ்மையானது அவர்கள் தாயகத்தில் முல்லைத்தீவு என்னும் இடத்தில் வாழ்ந்து வந்தார்கள். சுனாமியின் அகோர தாண்டவத்தால் எல்லாவற்றையும் பறி கொடுத்தனர்.

கார்த்திகேயனுக்கு மூன்று மகன்களும், இரண்டு மகள்களும் உண்டு. மூத்த மகன் கபிலன், நாட்டுக்காக உயிர் கொடுக்கச் சென்று விட்டான். இரண்டாவது மகன் தந்தையுடன் கடல் தொழிலுக்கு சென்று விடுவான். மூன்றாவதும், நான்காவதும் மகள் றோசியும், மகள் மேரியும். அவர்கள் படித்துக் கொண்டே வேலைக்கு செல்வார்கள். ஐந்தாவது மகன் யது. இவன் பொறுப்புள்ள மகனாக குடும்பத்தைக் கவனித்தான்.

மார்கழி மாதம் 26ம் நாள் கடற்கரை சற்று விநோதமாக விளையாடியது. ஆனால் ஒருவருக்கும் புரியவில்லை, தாங்கள் ஆபத்தை நெருங்கப் போகிறோம் என்பதை. கடல் பொங்கி எழுந்து சிறுவர்களை பெரியவர்களை, வீடுகளை என அனைத்தையும் கொண்டு சென்றது. அப்பொழுது கூக்குரல் ஒலித்தது. "எல்லாரும் தூர ஓடிப் போங்கோ, ராட்சத அலை வருகுது...." யது திரும்பிப் பார்த்தான். மக்கள் தூர ஓடிச் சென்றனர். தனது தந்தையையும், அண்ணரையும் பார்க்க காத்திருந்தவனுக்கு கண்கள் பெருகின. "ஐயோ என் தங்கச்சி, அம்மா" என்று இவனும் அலறி ஓடி அவர்களை காப்பாற்றினான். கடலுக்கு மீன் பிடிக்க சென்றவர்கள் கரை திரும்பவில்லை என்ற தாயாரின் புலம்பல். மறு பேரலை போல யதுவின் காதில் ஒலித்தது.

யதுவிற்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. யதுவின் தாயாரின் சகோதரி கனடாவில் வசித்தாள். அவர்கள் யதுவை வெளிநாட்டிற்கு கூப்பிட்டனர். யதுவும் தனது குடும்ப நிலைமையை எண்ணி கனடா சென்றான். யதுவின் பெரியம்மா மிகவும் கடுமையாகவே இருப்பாள். பெரியப்பா நல்ல மனதுடன் எல்லோருடனும் பழகுவார்.

அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். ஆண் விதுசனும், பெண் நிலானியும். இருவரும் உயர்தரப் பாடசாலைக்குச் செல்கின்றனர். யது அந்த வீட்டின் ஒரு அறையில் தங்கினான். அவனது பெரியம்மா அவனை எழுப்பும் குரல் கேட்டது. "யது உனக்கென்ன நித்திரை இந்த நேரத்தில, பாவம் எண்டு தான் உன்னை இங்கு கூப்பிட்டனான். படுத்து நித்திரை கொள்றதுக்கு இல்லை" என்று கூறிவிட்டு சென்றாள்.

யது எழும்பி காலைக் கடன்களை முடித்துவிட்டு பெரியம்மாவுடன் வேலைக்குச் சென்றான். இது அவன் கனடா வந்த மறுநாள்.

கண்கள் கலங்கியது. ஆனால் அழ முடியவில்லை. வேதனைகளை மனசில் பூட்டி வைத்து வேலைகளைச் செய்ய தொடங்கினான். அவன் தனது வயிற்றுப் பசியை பார்க்காமல் வேலை செய்தான்.

வந்து இரண்டு மாதம் ஆகியது. அகதிக்காசு கிடைத்தது. அதோடு தமிழ் கடையில் வேலை செய்து மாதத்திற்கு 700 டொலர்கள் சம்பாதித்தான். அதை அவனது பெரியம்மா உன்னுடைய கடன் காசு கொடுக்கணும் என்று வாங்கிக் கொள்வாள். இவனும் மனம் சலிக்காமல் கொடுப்பான். மனசுக்குள் நினைத்தான், "நான் எப்ப வந்த கடனை முடித்து, குடும்பத்துக்கு பணம் அனுப்பிறது" என வேலைகளைச் செய்தான்.

ஒரு நாள் பெரியம்மாவின் வீட்டிற்கு முன்னால் கார்கள் வந்து நின்றன. யது யன்னலோரமாக கவனித்தான். அங்கே தமிழில், "டேய் மச்சான், எங்கேடா? அவனை இன்னும் காணல?" என்று கதைத்தார்கள். அந்த வேளையில் பெரியம்மாவின் மகன் விதுசன் நண்பர்களோடு காரில் வந்து இறங்கினான். ஒரு நிமிடத்தில் விதுசன் தாக்கப்பட்டான். இரத்தம் றோட்டில் படம் கீறியது. அயலவர் பொலிசாருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டார்கள். உடனே யது விரைந்து சென்று கதறினான். "அண்ணா, என்ன அண்ணா, இவை யாரு?" என்று அழுதான். உடனே பொலிசாரின் வண்டியும், மருத்துவமனை வண்டியும் வந்தன. அதிலே அவசர அவசரமாக விதுசனை ஏற்றிச் சென்றனர். யதுவை பொலிசார் விசாரித்தனர்.

> கனடவுக்கு புதிதாக வந்த தம்பி நான் பணியால் வீட்டிற்கு வரும்போது சொன்னான்
> "ஏதாவது வருத்தமா? மருத்துவரிடம் இருந்து தொலைபேசி வந்துது"
> "இல்லையே...ஏன் இங்கிலீசில கதைச்சார்களோ?" என்று நான் கேட்டேன்.
> "இல்லை தமிழிலதான்... ஆனால் போன் எடுத்தவர் நான் டொக்டர் கதைக்கிறன் எண்டு சொன்னவர்"
> "ஓ அவரோ? அது எனக்கு படிப்பிக்கிற அசிரியர். அவர் எடுத்த முனைவர் பட்டத்தைத்தான் தொலைபேசியில அப்பிடிச் சொல்லுவார்."

ஆனால் அவனுக்கு விளங்கவில்லை. அப்பொழுது தமிழில் ஒரு பொலிஸ் வந்து "என்ன இங்கு நடந்தது என்று விபரமாகச் சொல்லு தம்பி" என்று வினவினார். யதுவும் பார்த்தவற்றை கூறினான். பொலிசார் சென்று விட்டனர்.



யது மனசிலே, "என்னடா இங்க இப்படியான வாழ்க்கையா?" என்று முணு முணுத்துவிட்டு பெரியம்மா, பெரியப்பாவிற்கு தொலைபேசியில் விபரமாகக் கூறினான். அவர்கள் வைத்திய சாலைக்கு ஓடோடிச் சென்றனர். விதுசன் மோசமான நிலைமையில் இருந்தான். யது இதனை பார்த்தான், வேதனையுடன் பெரியம்மாவை அழைத்தான்.

"இந்தாங்கோ பெரியம்மா அண்ணனுக்கு மருந்துச் செலவுக்கு காசு. நான் அடுத்தமாசம் என்ர கடன் காசு தாறன்" என்று சொன்னான். பெரியம்மா அதனை வாங்கி
"யது இங்க பாரு தம்பி, அடுத்த மாசம் நீ இந்த மாசத்தான் கடனையும் சேர்த்து தா, நீ இப்ப தந்த காசை நான் காசு இருக்கிற நேரம் தாறன்" என்று கூறினாள்.

பெரியம்மாவின் பண ஆசை இன்னும் முடியவில்லையா என்று மனசுக்குள் நினைத்தவாறே வெளியேறினான் யது. பகல் இரவாக வேலைக்குச் சென்று உழைத்தான்.

ஆறு மாதங்கள் ஓடின. ஒரு நாள் தொலைபேசியில் ஒரு குரல் ஒலித்தது.

"ஹலோ அக்காவே, எப்படிச் சுகமாக இருக்கிறியா?" என்று யதுவின் தாயாரின் குரல் ஒலித்தது. இவன் என்ன சொல்வதென்று தெரியாமல்
"யாரு அம்மாவே எப்பிடியணை இருக்கிறா?" என்று அவர்கள் உரையாடத் தொடங்கினர். தாயார் யதுவைக் கேட்டாள்,
"தம்பி உன்ர தங்கைமார் படிக்க கஸ்ரப்படுகிறாங்கடா, ஆன துணி இல்லை, சாப்பாடு இல்லை" என புலம்பினாள். யது ஆறுதல் கூறினான்.

"அம்மா நான் வர்ற மாசம் அனுப்பிறன். இப்ப போனை வையணை" என்று கூறி தொலைபேசியை வைத்தான்.

அப்பொழுது யதுவின் உடல்நிலை ஏலாமல் இருந்தது. அவன் "தைநோல்" போட்டு விட்டு மீண்டும் வேலைக்குச் சென்றான். ஆனால் அவனுக்குப் புரியவில்லை, அது மிகவும் மோசமான நோய் என்று.

அவன் பெரியம்மாவுக்குத் தெரியாமல் வீதியில் கிடக்கும் போத்தல்களை பொறுக்கி விற்றான். அவனால் 100 டொலர்கள் மட்டுமே ஒரு மாதத்திற்கு சேமிக்க முடிந்தது. அதைத் தனக்குத் தெரிந்த ஒரு நண்பரின் கடைமூலம் ஊருக்கு அனுப்பினான்.

அப்பொழுது ஒரு காகிதத்தாள் எழுதி அனுப்பினான்.
'அன்புள்ள அம்மாவுக்கு, இந்தப் பணம் நான் அனுப்பியதைப் பற்றி பெரியம்மாவிற்குச் சொல்ல வேண்டாம்' என்று சில வரிகளுடன் அனுப்பினான்.

இதனை எல்லாம் நிலாணி கவனித்தாள். "அண்ணா, ஏன் இப்பிடி கஸ்ரப்படுகிறீங்கள். இந்தாங்கோ எனக்கு அம்மா பாடசாலைக்கு சாப்பிட தர்ற காசு. நான் எனி உங்களுக்குச் சேர்த்துத் தர்ரன்" என்று பணத்தை நீட்டினாள். யது அதை வாங்க மறுத்து விட்டான். அவள் விடவில்லை. "என்னை உங்களோட பிறந்த றோசியாவோ, மேரியாவோ நினைச்சு வாங்குங்கோ அண்ணா" என்று கொடுத்து விட்டுச் சென்றாள்.

கனடியர்களின் கருத்து பின்வருமாறு இருக்கிறது. பொதுவாகவே நம்பமுடியாதவர்கள் யார் என்ற கேள்விக்கு பின்வருமாறு பதிலிருுத்திருக்கிறார்கள்.

அரசியல் வாதிகள்	60%
சட்ட வல்லுனர்கள்	40%
வணிக தலைமை நிர்வாகிகள்	35%
தொழில் சங்கத் தலைவர்கள்	31%
திரைப்பட புகழுடையோர்	22%
இதழியலாளர்	17%
விளையாட்டுப் புகழுடையோர்	14%

"யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்"

HomeLife/Champions Realty Inc



உங்கள் வீடுகளையும் மிக குறைந்த
கொமிசனில், மிகவிரைவில் விற்க
இன்றே அழையுங்கள்
உதயன் பொன்னுத்துரை

416-505-2120

www.TorontoRealHome.com

Uthayan Ponnuthurai, BSc(Hons), Sales Representative




75 Brenda Blvd $236,900
Orangeville




Gas Station , CoffeeTime,
Land & Building
$599,900



Irish PUB $139,900
Islington / Bloor



6 Courtlands Dr
Morningside/ OldFinch
3 Br + Fin Bmt $319,000



46 Brimstone Cres $319,900
MiddleField & Finch
100 Renovated: Newer Roof,windows,Floors etc

எல்லாப் பணத்தையும் சேர்த்து இவனுக்கு 200 டொலர்கள் சேமிப்பாகின. மாத்திற்கு ஒரு தடவை அதை ஊருக்கு அனுப்பினான்.

நிலாணி தனது நண்பியான யனனிக்கு இதையெல்லாம் கூறுவாள். யனனியும் கவலைப்படுவாள். தன்ளை அறியாமலே யனனி, காலப்போக்கில் இதையெல்லாம் கேட்டு வந்த யனனி யதுவைக் காதலித்தாள். ஆனால் அவன் தனது சூழந் நிலையை எடுத்துக் கூறினான்.

"இங்க பாரு ஜனனி நான் என்ன கஸ்டத்தில் இருக்கிறன் என்று உங்களுக்கு புரியாது. ஏனென்றால் நீங்கள் அந்தச் சூழலில வாழவில்ல. ஒழுங்கா படியுங்கோ. உங்கட தகுதிக்கு ஏற்ற வாழ்க்கையை அமையுங்கோ" எனக் கடுமையாகக் கூறினான்.

சில காலத்தில் இதையெல்லாம் அறிந்த யனனியின் தாயார் யதுவிடம் கதைத்தார். "உன்னை மாதிரி பொறுப்பான, பொறுமையான மருமகன் எங்களுக்குக் கிடைக்காது. தயவு செய்து யனனியைத் திருமணம் செய்து கொள்ளு தம்பி" என்று கூறினார். ஆனால் யது அவர்களுக்குச் சொன்னான்,

"ஜனனி நன்றாக படிச்சவ. நல்ல உத்தியோகம் கிடைக்கும். அதற்கேற்ற மாதிரி வாழ்க்கையை அமைத்துக் கொடுங்கள்" என்று கூறி சென்று விட்டான்.

ஐந்து வருடங்கள் ஆகியும் இவனுக்கு விடிவு கிடைக்கவில்லை. உறவுகள், உடமைகள் எல்லாவற்றையும் இழந்தான். காற்றில் தத்தளிக்கும் படகு போல இவன் வாழ்க்கை மாறியது. ஆனாலும் ஆறாவது வருடத்தில் இவனுக்கு நல்ல செய்திகள் கிடைத்தன. தனது தந்தையும், அண்ணனும் மீளவும் கிடைத்து விட்டார்கள் என்றும், தங்கைமார் அரசாங்க உத்தியோகத்தில் இருப்பதாகவும் செய்திகள் கிடைத்தன.

அவனும் தனது கடன்களைக் கொடுத்து முடித்து 10,000 டொலர்கள் வரை வங்கியில் சேமித்து வைத்திருந்தான். அதை ஊருக்கு அனுப்பினான். உடமைகளை இழந்தவர்களுக்கு உதவி செய்ய.

ஒரு செய்தி நிலாணி வந்து கூறினாள். யதுவுக்கு "டேய் அண்ணா, யனனி உனக்காகக் காத்திருக்கிறாள்." என்று. அவன் உடனே யனனியைக் கைத்தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கதைத்தான்.

"ஹலோ, யாரு யனனியா, நான் யது கதைக்கிறன்" மறு முனையில் இருந்து யனனி பதிலளித்தாள்.
"சொல்லுங்கள் யது". அப்பொழுது அவனுக்கு மார்பில் வலி ஏற்பட்டது. உடனே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். வைத்தியர்கள் யது இன்னும் சில நிமிடங்கள் தான் உயிருடன் இருப்பார் என்று கூறிச் சென்று விட்டனர். பெரியம்மாவின் குடும்பமும், யனனியின் குடும்பமும் அவனைச் சுற்றி நின்று பார்த்து கவலைப்பட்டனர். பெரியம்மா தான் செய்த தீயதை மனசில் போட்டு அழுதாள். யனனி தொலைபேசியில் அவன் கூறிய கடைசி வார்த்தைக-ளைக் கேட்டாள் - "யனனி என்ட வறுமை தான் முக்கியமா போயிடிச்சு, உன்ர ஆசையை என்னால நிறைவேற்ற முடியல. ஆனால் நீ சந்தோசமாக இருக்கணும்" என்று கூறி இறைவன் திருவடியை சேர்ந்தான். வறுமையில் வலியுடனும், வலிமையாகவும் வாழ்ந்து சென்றான். 'மெழுகுதிரி போல் உருகினான் வெளிச்சம் கொடுக்க...இடையிலே அணைந்துவிட்டான் ஆனால் இருட்டாகவில்லை அவன் நினைவுகள்'

உடல் நலத்திட்டங்கள் பற்றிக் கதைக்கப் படும்போது மருத்துவத் தாதியர் ஊடகங்களில் பேசினால் பெரும்பாலான பிற மருத்துவத் தாதியர் அதை நம்புகிறார்கள். வணிக நோக்குடைய நிர்வாகிகள் பேசுவதை அவர்கள் நம்புவதில்லை.
மருத்துவர்கள் ஒன்றியம் விடுக்கும் அறிக்கைகளை 86 வீதம்பேர் உண்மை என நம்புகிறார்கள். மருத்துவம் பற்றி பிரதமர் பேசுவதை 57 வீதத்தினரே உண்மை என நம்புகிறார்கள்.

1982 ஆவது ஆண்டு உருவாக்கப்பட்டு செயல்வடிவப் படுத்தப்பட்ட மனித உரிமைகள் யாப்பு பற்றி . . .

கனடாவில் இந்த மனி உரிமைகள் யாப்பினால் தங்கள் தனி மனித உரிமைகள் பாதுகாக்கப் படுவதாக 74 வீதம்பேர் நம்புகிறார்கள். பெரும்பாலான கனடியர்கள் அனைத்துக் கனடிய மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்கு இந்த யாப்பு உதவவேண்டும் என்றும் நினைக்கிறார்கள், 72 வீதம்பேர்.

எழுதுபதுகளின் இறுதியில் என்று நினைக்கிறேன். ஒரு நாள் நாம் தமிழர் இயக்கக் கூட்டம் முடிந்தபோது ஒரு இளைஞரை உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர் குதிரைக் குட்டி போல குதித்து குதித்து




வேலைபார்க்கும் சுறுசுறுப்பு மிக்க எல்லோரும் போல்அல்லாது ஒரு வித்தியாசமாகக் காணப்பாட்டார். அவர்தான் தம்பி பிரபாகரன். மானமிகு உலகுபோற்றும் போராட்டவீரர்.

-கலைமாமணி தேனிசை செல்லப்பா

பிரமபுத்திரையும் கங்கையும், மாநதியும், கோதாவரியும் அடித்துத் தள்ளிய வண்டல் சேறு, வாடைக்காற்று வலசை நீரோட்டத்துடன், மூன்று திங்களுக்கு, கலங்கல் சேற்றுக் கோலத்தில் வங்கக் கடலிலிருந்து பாக்கு நீரிணைக்குள் புகுகின்றது. இக்கலக்கல் சேற்றின் ஊட்டச் சத்தே பாக்கு நீரிணையில் மிதக்கும் தாவர நுண்ணுயிர்களுக்கு உரம், கிருஷ்ணையும், காவிரியும், வைகையும் வற்று நதிகளாகிய பின், வற்றிய உரத்தை ஈடுகட்டுவது இந்த வலசைக் கலக்கலே, கடலின் கலங்கல் நிலை முதனிலை உற்பத்திக்கு உரமாகிறதேயன்றி ஊறாவதில்லை. அகழ்வுப் பணிகளின் போதும், வாரிய சேற்று மணலை ஆழ்கடலுள் கொட்டும் போதும், பராமரிப்புத் தூர்வாரலின் போதும் கடல்நீர் கலங்குவது உணவு உற்பத்திக்கு விறு, சூழல் சமர்சீர்நிலைக்கு ஊறன்று.

கோடிக்கரையின் அருகே அமையவுள்ள 55கி.மீ. நீளமான, 300மீ. அகலமான, 12மீ. ஆழமான கால்வாய், வாடையின் வலசை நீரோட்டத்தைப் பாக்கு நீரிணைக்குள் வீறுடன் அழைத்துச் சென்று அங்கு முதனிலை உற்பத்தியை ஊக்குவிக்கும்,



தலை மன்னார் வலது புறத்துக் கீழ் மூலையில் உள்ளது

அதுவே மீன்வளப் பெருக்கத்திற்கு ஊற்றுமாகும். அவ்வாறே சேதுத் திடல்களின் அருகே அமையவுள்ள 20கி.மீ நீளமான, 300மீ. அகலமான, 12மீ ஆழமான கால்வாய், தென்றல் கால, வங்கக் கடலின் இடசை நீரோட்ட ஈர்ப்பில், பாக்கு நீரிணையில் இருந்து வெளியேறும் நீரை ஈடுசெய்ய மன்னார் வளைகுடாவிலிருந்து நீர்த்தொகுப்பை வீறுடன் அழைத்துவரும் முதனிலை உற்பத்திக்கு இதுவே முதலீட்டு உரமுமாகும்.

வங்கக் கடலின் வலசை நீரோட்டமான ஆற்றுப் போக்கில், உள்வளைவும் திடல்களாக மணல்மேல்குடிப் பகுதியும், கழிமுகத் திடல்களாக சேதுவின் நகரும் மணல்மேடுகளும் அமைந்திருப்பதைக் கருத்தில் கொண்டு, நீரோட்ட மாற்றங்களால் கரையோர மாறுதல்களை அளவிடும் பொறியிலாளர், இக்கால்வாய் அமைப்பால் புதிய திடல்கள் பாக்கு நீரிணைக்குள் தோன்றுமா என்பதைத் தொடர்ந்து கண்காணிப்பார்.

தமிழகக் கரையோரத்தை, 1881, 1883, 2004 ஆகிய ஆண்டுகளில் ஆழிப் பேரலைகள் தாக்கின. மற்றுமொரு ஆழிப்பேரலை தமிழன் கால்வாயைப் பாதிக்குமா? ஆழிப்பேரலை அடிக்கடி தாக்கும் நாடு அமெரிக்கக் கண்டத்தின் பனமாக் கால்வாய் இடைவிடாது செயற்படுவதை நோக்குக. தமிழகத்தை அரிதாகத் தாக்கக்கூடிய ஆழிப் பேரலை பற்றிய எச்சரிக்கைக் கருவிகள் இந்து மாகடலெங்கும் அமையவுள்ளதையும் நோக்குக.

எண்ணெய்க் கசிவுகள் கப்பலில் இருந்து வரலாம், எண்ணெய் கப்பல் உடைந்தால் கடற்பரப்பில் எண்ணெய் பெருகலாம், கரையெங்கும் தார் திரளலாம் என்பன நியாயமான அச்சங்கள். உலகெங்கும் உள்ள கடல்களில் இடைவிடாது எண்ணெய் கப்பல்கள் பயணிக்கின்றன. உலகுக்குப் பொதுவான அபாயம் என்பதால் 1973, 1978 ஆகிய ஆண்டுகளில் உலக நாடுகளுக்கான விதிகள் தயாரிக்கப்பட்டன. இவ்விதிகளை ஏற்ற நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. இந்த விதிகளை மீறாத கப்பல் போக்கு வரத்து, சூழல் சமச்சீரைப் பாதிக்காது. சேதுக்கால்வாய் விதி விலக்கல்ல.

காற்று:

1891 - 2000 காலப் பகுதியில் மணிக்கு 89கி.மீ. வேகத்தைவிட மிகுந்த வேகத்தில் 23 புயல்கள் பாக்கு நீரிணையைக் கடந்துள. இவற்றுள் 1964இல் வீசிய புயல் கடுமையான விளைவுகளைத் தந்தது. தமிழன் கால்வாயில் பயணிக்கும் கப்பல்கள் தரைதட்ட, கவிழ இத்தகைய புயல்கள் காரணமாகலாம் என்ற கருத்து



இந்தியக் கடலோரக்காவற் பிரிவினால் திட்டமிடப்பட்ட கால்வாய் வழி வரைபடம்

உண்டு. வாடைக்காற்றுக் காலக் கப்பல் பயணம் அபாயமானது என்பதை மாலுமிகள் அறிவர். வானிலை அறிவிப்புகள் அவர்களின் வழிகாட்டிகள், புயல் எச்சரிக்கைகளைக் கையாளும் நடைமுறைகளைக் மீகாமன்கள் பயின்றவர். புயல்கள் உலகெங்கும் வீசுகின்றன. அவற்றை மீறிக் கப்பல்கள் பயணித்தே வருகின்றன.

அகழ்வுப் பணிகள் போதோ, பராமரிப்புப் பணிகளின் போதோ, கப்பல் போக்குவரத்தின் போதோ பாக்கு நீரிணையின் காற்று மண்டலத்தில் பெரிய மாற்றம் ஏற்படும் வாய்ப்பு இல்லை.

உயிரினம்:

தமிழன் கால்வாயின் அகழ்வுப் பகுதியான 75கி.மீ. நீளத்தில் பவளப் பாறைத் தொகுதிகள் எதுவும் இல்லை. ஒதுக்குப்புறம் தேடி, உறையும் தரைநாடி, சுண்ணாம்புக் கூடுகட்ட முனையும் பவளக் குடம்பி

தொடர்ச்சி 22 ஆவது பக்கம் ...

பங்குச் சந்தை விபரங்களை படிப்பதெப்படி?



பங்குச்சந்தை விபரங்கள் நாள்தோறும் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. இவற்றை தொடர்ச்சியாக கவனித்து குறிப்பெடுத்து ஆய்வு செய்வதன் மூலம் அதிக .இலாபம் தரும் நிறுவனங்களின் பங்குகளில் முதலிட முடியும். பின்வரும் பகுதி ரொறன்ரோவில் வெளிவரும் ஒரு ஆங்கில தினசரியிலிருந்து பெறப்பட்டது. (படம் 1)

Toronto Stock Exchange			Distributed by the Canadian Press Monday August 15 17:19:03, 2005				
Stock	Ticker	Div	Bid or High	Ask or Low	Latest Price	Change	Vol
20-20 Techs	TWT		6.80	6.80	6.80	+0.15	500
5banc A p	FBS.PR.A	1.38	25.51	25.51	25.51	-0.01	104
5banc Sp A	FBS.A	1.06	56.70	56.70	56.70	+1.18	500
724 Solutn	SVN		5.96	5.63	5.79	-0.30	29997

படம் 1

பங்குகள் பல சந்தைகளில் வாங்கி விற்கப்படுகின்றன. ரொறன்ரோவில் உள்ள பங்கு சந்தையான TSX ல் வாங்கி விற்கப்படும் சில பங்குகளை மேற்படி தகவல் விபரிக்கிறது. இந்த பட்டியலில் உள்ள விபரங்கள் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி பிற்பகல் 5 மணி 19 நிமிடம் 03 வினாடிகள் நடக்கும் போது இருந்த பங்குவிலைகளின் நிலைப்பாடு ஆகும். (படம்2)

பங்குகளை விற்கும் நிறுவனங்கள்	பங்குகளுக்கான அடையாளங்கள்	பங்கு இலாபம்	கோரம் அல்லது உயர்வான விலை	கேள்வி அல்லது குறைவான விலை	கடைசி விலை	மாற்றம்	தொகை
20-20 Techs	TWT	6.80	6.80	6.80	+0.15	500	
5banc A p	FBS.PR.A	1.38	25.51	25.51	25.51	-0.01	104
5banc Sp A	FBS.A 1.06	56.70	56.70	56.70	+1.18	500	
724 Solutn	SVN	5.96	5.63	5.79	-0.30	29997	

படம் 2

முதல் அடுக்கில் பங்குகளை ரொறன்ரோ பங்குச்சந்தையில் விற்கும் நிறுவனங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. இரண்டாவது அடுக்கில் இந்த பங்குகளின் குறியீடுகள் தரப்பட்டுகள்ளன. இந்த குறியீடுகள்தான் ரொறன்ரோ பங்குச்சந்தையிலும் தொலைக்காட்சியிலும் தொடர்ச்சியாக ஓடி மாறும் விலைகளை காட்டிக் கொண்டு இருப்பவை.

பங்கு இலாபம் (Dividend)

மூன்றாவது அடுக்கில் உள்ளது பங்கு இலாபம். எல்லா நிறுவனங்களும் இலாபத்தை பங்கிட்டு வழங்குவது இல்லை. பெரும்பாலான நிறுவனங்கள் இலாபத்தை மீள முதலீடு செய்கின்றன. பெருமளவு பங்குதாரரான முதலாளிகள் இந்த நிறுவனங்களிலேயே வேலை செய்து கொண்டு, தமக்கு தாமே கொழுத்த சம்பளத்தை வழங்கிக்கொள்வதன் மூலம், தமது முதலீட்டுக்கு உரிய, அல்லது அதற்கும் மேலான வருமானத்தை பெற்றுக் கொள்வார்கள். வெளியார் இந்த பங்குகளை வாங்கினால் பங்கு விலை அதிகரித்த பின் அதனை விற்பதன் மூலமே இலாபத்தை பெற முடியும். இதற்கு மாறாக, வேறு சில நிறுவனங்கள், மாதாமாதம் அல்லது ஆண்டுக்கு ஒரு முறையேனும் இலாபத்தின் ஒரு பகுதியை பங்குதாரருக்கு பிரித்து கொடுக்கின்றன. மேலே உள்ள பட்டியலில் இரண்டாம் வரியும், மூன்றாம் வரியும் ஒரே நிறுவனத்தின் பங்குகளை பற்றிய விபரத்தையே தருகின்றன. இந்த நிறுவனம் FBS என்ற குறியீட்டால் குறிப்பிடப்படுகின்றது. மூன்றாவது அடுக்கில் இரண்டாம் வரியில் பங்கு இலாபம் 1 டொலர் 38 சதமாகவும் மூன்றாவது வரியில் பங்கு இலாபம் 1 டொலர் 6 சதமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த குறியீடுகளான FSB.PR.A, FSB.A ஆகியவற்றிலுள்ள A என்ற எழுத்து A வகுப்பு பங்குகளை குறிக்கிறது. PR என்ற எழுத்துக்கள் முன்னுரிமை

முனைவர் சூரியஜீவன்



(Priority) பங்குகளை குறிக்கிறது. இதன் அர்த்தம், இந்த பங்குகளை வாங்கியவர்களுக்கு பங்கு இலாபத்திலும், நிறுவனம் கைவிரித்தால் மீதமான தொகையிலும் முன்னுரிமையும் கிடைக்கும் என்பதாகும். இங்கே பங்கு இலாபம் இந்த பங்குகளுக்கு 32 சதங்கள் அதிகமாக இருப்பதை காணலாம்.

முன்னுரிமை பங்குகளின் தொகை குறைவாக இருக்கும். இந்த பங்குகளை வாங்குபவர்கள் பங்கு இலாபத்தை நோக்கமாக கொண்டே இவற்றை வாங்குகிறார்கள். வாங்கிய பிறகு இவர்கள் விற்க விரும்புவதும் குறைவு. அதனால் இந்த

பங்குகளுக்கு சந்தைவாய்ப்பு குறைவு. மேலேயுள்ள பட்டியலில் முன்னுரிமைப்பங்குகள் 25 டொலர்கள் 51 சதமாகவும் முன்னுரிமை அற்ற பங்குகள் 56 டொலர்கள் 70 சதமாக இருப்பது மேற்படி காரணத்தால் தான்.

முன்னுரிமைப்பங்குகளில் 1டொலர் 38 சதம் 25 டொலர் 51 சதம் முதலீட்டுக்கு கிடைப்பது 5.4 வீதம் வட்டிக்கு சேமிப்பு கணக்கில் முதலிடுவதற்கு சமமானது. பங்குவிலையும் அதிகரித்துக்கொண்டு போவதனால், உண்மையான வருமானம் 5.4 வீதத்திலும் கூடுதலாகவே இருக்கும். மேற்படி முன்னுரிமைப்பங்குகள் முதலீட்டுக்கு ஆபத்து குறைவான, தொடர்ச்சியான வருமானம் தரத்தக்க பங்குகளாகும்.

பங்கு விலை

மேலே தரப்பட்டுள்ள பட்டியலில் அடுத்து இருப்பது பங்குகளை விற்க விரும்பும் ஒருவர் விற்க விரும்பும் விலை. இப்படி பலர் விற்க விரும்புவார்கள். இங்கே குறிப்பிடப்படுவது, இவற்றுள் அதி கூடிய விலையே. அதே வேளை பங்குகளை வாங்க விரும்புபவர்கள் இந்த பங்குகளுக்கு கொடுக்க தயாராகவுள்ள விலைகளில், அதி குறைவானதை ஐந்தாவது அடுக்கில் காணலாம். இப்படி வாங்க விரும்புபவர்களும், விற்க விரும்புபவர்களும் தான் இன்று உலகின் பொருளாதாரத்தையே நாளும் பொழுதும் முடிவு செய்து கொண்டு இருக்கிறார்கள். பட்டியலில் ஆறாவது அடுக்கு கடைசியாக கொடுக்கப்பட்ட விலையும், ஏழாவது அடுக்கு, அந்த விலையில் விற்கப்பட்டதனால் பங்கு விலையில் உண்டான மாற்றத்தையும், எட்டாவது அடுக்கு மேற்படி விலையில் விற்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையையும் காட்டுகின்றன. கடைசி வரியில் உள்ள 724 Solutions நிறுவனத்தின் பங்குகள் பெரும் எண்ணிக்கையில், நட்டத்துக்கு விற்கப்பட்டிருப்பதையும், பங்குகளை வாங்கியவர்கள், கேள்வி விலையிலும் பார்க்க கூடிய விலையில் பங்குகளை வாங்கியிருப்பதும், வாங்க விரும்புபவர்கள், கடைசி விலையிலும் குறைவான விலையிலேயே வாங்க தயாராக இருப்பதும், இந்த நிறுவனத்தின் பொருளாதாரத்தை, ஆட்டம் காணும் பொருளாதாரமாக காட்டுகின்றன.

www.globeinvestor.com என்ற இணையத்தளத்தில் மேற்படி நிறுவனத்தின் பங்கு விலை மாற்றத்தை, நேற்றுவரை, ஒரு வருட காலத்துக்கு வரைபில் கீறிப்பார்த்த போது பின்வரும் வரைவு கிடைத்தது. கடந்த ஏப்ரல் மாதம் 18 டொலர்களை தாண்டியிருந்த இந்த நிறுவனத்தின பங்குகள், அதன்பின் தொடர்ச்சியாக குறைந்து 4 டொலர்களை அடைந்து இருப்பதை காணலாம். இவ்வாறாக, நாளும் வெளிவரும் விலை விபரங்களை சேகரித்து, வரைவாக கீறி, பங்கு விலை மாற்றத்தின் போக்கை அவதானித்து எந்த பங்கில் முதலிடுவது என்று தீர்மானிக்கலாம்.

முதலிடுவதை பங்கு விலை மாற்றத்தை மட்டும் வைத்துக்கொண்டு தீர்மானிக்கவும் முடியாது, அப்படி ஒரு முடிவை எடுத்து செயற்பட்டால் அதனால் நட்டமும் ஏற்படலாம். பங்குகளில் முதலிட முதல் மேற்படி நிறுவனம் பற்றியும், அந்த நிறுவனம் செய்யும் வணிகம் பற்றியும் போதிய அறிவை பெற்றுக்கொள்ள வேண்டியது முக்கியமானது. அந்த அறிவின் அடிப்படையிலேயே பங்குகளில் முதலிடுவது பற்றி, பங்கு விலை மாற்றங்களை ஆராய வேண்டும்.

வடை சாப்பிட்ட பேய்!

உண்மைக்கதை

(யாழ்பாணம் கொழும்புத்துறையில் நடந்தது)

அந்த காலத்தில் மின்சார விளக்குகள் இருக்கவில்லை. மாட்டுவண்டில் தான் வாகனம். இருட்டிவிட்டால் சந்தியில் இருக்கும் புளியமரத்துக்கு கிட்ட யாரும் வரமாட்டார்கள். ஏன் பகலிலேயெ பலருக்கு அந்த வழியால் போகப்பயம். சில நேரம் இரவில் இந்த பக்கம் இருந்து விசித்திரமான சத்தங்கள், யாரோ அழுவது போல கூட கேட்கும்.

வீட்டிலே கலியாண ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. சோடனைகள் ஒரு புறம், சாப்பாட்டுக்கான ஆயத்தங்கள் மறுபுறம் என்று ஒரே ஆரவாரம். ஆனால் புளியமரத்துப்பக்கம் இருட்டின பிறகு யாரும் போவதில்லை. விடிய எழுந்து சமையல் அறைப்பக்கம் போனவர்களுக்கு அதிர்ச்சி. வடைகள் அடுக்கி வைத்திருந்த கடகத்தை காணவில்லை. எப்படி அந்த முழுக்கடகமும் வடைகளோடு காணாமல் போகும்? உறவினர்கள் வரத் தொடங்கிவிட்டார்கள். அதோடு எல்லாரும் ஏதோ தங்களுக்குள் குசு குசு வென்று கதை.

என்னவென்று போய் கேட்டால், புளியமரத்து சந்தியால் வந்தவர்கள், புளியமரத்து பேயை தாங்கள் கண்டதாக சொல்கிறார்கள். என்ன... இந்த பட்டப்பகலிலா? இல்லை புளியமரத்திலே கடகம் ஒன்று இருக்கிறது. பேய்தான் அதைக்கொண்டு போய் வைத்திருக்கிறது என்று சொல்ல ... இப்ப வடை எங்க போனது என்று எல்லாருக்கும் புரிந்தது. புளியமரத்து பேய்தான் கடகத்தோடு வடைகளை கொண்டு போய்விட்டது. கலியாண வீட்டுக்கு பேய் வந்து போனது பற்றி எல்லோருக்குமே கலக்கம். இரவு அங்கே படுக்கவும் பலருக்கு நடுக்கம். இந்த கதையை சொன்னவர் எனது பாட்டனாரின் சகோதரர். புளியமரத்துக்கு கடகத்தோடு வடைகளை கொண்டு போய் இரவிரவாக தின்று தீர்த்தவர் வேறு யாருமல்ல அவரேதான்.

-சூரி யூட்

இளங்குமரன்

(பீட்டர் சுப்ரமணியம்)

ஆசிரியர்

திட்டமிட்டு மறைக்கப்பட்ட தமிழன் வரலாற்றை மீட்டெடுத்து மாணவர் அறியத்தருவதிலும், தமிழ் மொழிப் பயன்பாட்டை அதிகரிக்கவேண்டும், தூய தமிழ் தமிழன் வாழ்வின் அனைத்துக் காலகட்டங்களிலும் சிறப்பிடம் பெறவேண்டும் என்பதிலும் கண்ணும் கருத்துமாய்ச் செயல்பட்டு வருவது தமிழீழக் கல்வி கழகமும், தமிழ்மொழி வளர்ச்சிக் கழகமும்தான் என்பது இன்று யாராலும் மறுக்கப்படமுடியாத உண்மை. அண்மையில் 46,000 தூய தமிழ்ப்பெயர்கள் கொண்ட கைநூல் ஒன்றையும் உருவாக்கி, தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழில் பெயர் வையுங்கள் என்ற கருத்தையும் இவர்கள் வலியுறுத்தி யுள்ளார்கள். அந்த வகையில், தமிழீழக் கல்வி கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்களை நேர்காண்கிறோம்.

கல்வி மேம்பாட்டுக் கழகத்தின் பணிகள் குறித்து?

முன்பு எமது நிலம் எவ்வாறு கவரப்பட்டதோ அதேபோன்று மொழி சிதைந்து போவதைத் தலைவர் விரும்பவில்லை. அதாவது நில மீட்புக்காகப் போராடுவதுபோன்று மொழியிலும் பிற மொழிக்கலப்புகள் ஆக்கிரமிப்புக்கள் என்பன அகற்றவேண்டித்தான் அக்கழகத்தினூடு சில வேலைத்திட்டங்களை அமைத்தோம். எனவே அந்த அடிப்படையில் இயன்றவரை நாம் பேசும்போதும் எழுதும்போதும் தூய தமிழைக் கையாளவேண்டும். பெயர்களைத் தூய தமிழில் வைக்கவேண்டும் என எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற கோட்பாட்டை வைத்துக்கொண்டு இச்செயற்பாடுகளை நகர்த்தி வருகின்றோம். இவற்றில் சில முக்கியமான பணிகளாக..

1. நாம் பயன்படுத்தும் மொழியில் உள்ள



நேர்முகம்: வானதி, திரு

பிறமொழிச்சொற்களைப்போட்டு (வடமொழி மட்டுமன்றி ஆங்கிலமும்) அதற்குரிய தமிழ்ச்சொற்களையும் போட்டு "நடைமுறைத்தமிழ் வழிகாட்டி" என்ற நூலை ஆக்கினோம்.

2. அதேபோன்று பிறமொழி கலவாத தமிழ்ப்பெயர்களை வைக்கவேண்டும் என்பதற்காக முதலில் "மக்கட்பெயர் அகர வரிசை"என்ற ஆயிரம் பெயர்கள் கொண்ட நூலை ஆக்கினோம். அதேபோல் தொடரியங்கள் என்ற பெயரில் தமிழைப் பிழையின்றிப் பயன்படுத்தக்கூடிய வகையில் பிழைகளைச் சுட்டிக்காட்டி ஆசிரிய மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு வழிகாட்டல் நூலாக ஆக்கினோம்.

3. அடுத்தகட்டமாக 46, 000 பெயர்கள்கொண்ட நூலை ஆக்கினோம். மேலும் அரச பாடநூல்களில் உள்ள பிழைகளையும் பிறமொழிச்சொற்களையும் சிறுவயதில் இருந்தே மாற்றவேண்டும் என்ற ஒரு நீண்ட கால இலக்குடன் செயற்பட்டு அதற்கான இரண்டாண்டுப் பாடநூல்களும் ஆக்கப்பட்டன. ஆனாலும் யாழ்ப்பாண இடப்பெயர்வினால் எல்லா இடமும் இதை முழுமையாக்க முடியவில்லை. எனவே இது இப்போது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

4. . நாம் எம்பகுதியில் உள்ள மாணவர்களுக்குத் தேர்வுக்காக அதைப்படிக்கவிட்டாலும் உண்மையான எம் வரலாறுகளை கருத்துக்களை அரசு திரித்துக்கூறியவற்றை எல்லாம் மீட்டெடுக்கும் வகையில் ஒரு குழுவை அமைத்து எழுதி வெளியிட்டோம். ஒரு குழுவை அமைத்துப் பாடத்திட்டம்போட்டு நூல்களை ஆக்கி ஆசிரியர் கைநூல் கொடுத்து ஆசிரியப் பயிற்சியும் வழங்கி இதே அரச பாடசாலைகளில் (எமது பகுதியில்) இலவசமாகப் புத்தகங்களை வழங்கி எமது ஆசிரியர்களைக் கொண்டு கற்பித்து வருகின்றோம்.

தமிழர் திருமணங்களில் சமஸ்கிருதச் சுலோகங்கள் பாவிப்பதை நிறுத்திப் போராளிகளின் திருமணங்களைத் தலைவர் முன் நடத்தியுள்ளீர்கள். இப்படியான நடைமுறைகளைத் தொடர்ந்து எதிர்காலத்திலும் ஊக்குவிப்பீர்களா?

நிச்சயமாக. மக்களை மாறச்சொல்வதற்குமுன் நாம் அமைப்புரீதியாக மாறிய பின்னர்தான் மக்களுக்குள் கொண்டுபோகவேண்டும் என்பதில் தலைவர் மிகத் தெளிவாக இருந்து நமக்கு வழிகாட்டுகின்றார்.

அந்த வகையில் தமிழ்ப் பெயர்களை நாங்கள் வைக்கவேண்டும். இயக்கம் அதற்கு வழிகாட்ட வேண்டும் என்பதற்காக ஒரே நாளில் இரவோடு இரவாக 4000பேருக்கான வடமொழிப் பெயர்களைத் தமிழில் மாற்றினோம். அத்தோடு புதிதாக இயக்கத்தில் இணைபவர்களுக்கெல்லாம் எமது பெயர்ப்பட்டியலை வைத்து மாற்றிக் கொள்வோம். இவ்வாறு எம்மைப் பார்த்து மற்றவர்களும் மாற்றிக்கொள்ளும் சூழலை நாம் உருவாக்கிக்கொண்டு வருகின்றோம்.

இப்படியான இந்தச் செயற்பாடுகளை வெளிநாட்டில் உள்ள மக்களை அங்குள்ள உங்களது பணிமனைகள் அல்லது தொடர்பகங்கள் ஊடாகக் கேட்பீர்களா?

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்தான் நாம் வெளிநாட்டில் உள்ளவர்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இப்போதுதான் எம் தொடர்பான செய்திகள் வெளியில் போகத் தொடங்கியுள்ளது. அந்த அடிப்படையில்தான் இப்போ நீங்கள்

தமிழகத்தில் தேய்ந்து வரும் தமிழ்!

தமிழகத்தில் தமிழைப் பயன்படுத்துவோர் குறைந்து வருகின்றனர். பிற மொழி மீதான ஆர்வம் அதிகரித்து வருகிறது. எங்குமே தமிழ் இல்லை என்ற நிலை ஏற்பட்டு வருகிறது. சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட பல வெளிநாட்டு விமான நிலையங்களில் அழகு தமிழில் அறிவிப்பு செய்கின்றனர். இந்த நிலை மாற வேண்டும். தமிழ் மீது தமிழர்களுக்கு பிடிப்பு வர வேண்டும்.

- காளிமுத்து குறிப்பிட்டது.

கனடாவில் செய்வதுபோல் தமிழீழத்திலும் ஊக்குவிப்பதற்கு செயற்றிட்டங்கள் நடக்கின்றன. புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளிலும் இது மேற்கொள்ளப்படவேண்டும். அதுவும் நடைபெறும்.

நாம் இங்கு பார்க்கும்போது பெயர்ப்பலகைகள் எல்லாம் நல்ல தூய தமிழில் எழுதப்பட்டு உள்ளது. பாவேந்தர் கண்ட கனவு பலித்ததுபோன்று உள்ளது. இது பற்றிய மக்கள் கருத்து எவ்வாறு உள்ளது?

மக்களிடம் இது முழுமையான ஒரு வரவேற்பைப் பெற்றுள்ளது. இப்போது தமிழகத்தைப் பொறுத்தவரையில் அதற்கு எதிரான கருத்துக்களைக் கொண்டவர்கள்தான் அதிகார பலத்தில் உள்ளார்கள். அதனால் திட்டமிட்ட மழுங்கடிப்புக்களைச் செய்கின்றார்கள். அதுமட்டுமன்றித் தமிழகத்தில் ஆட்சியில் வந்த தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள்கூட மொழியால் தம்மை உயர்த்திக்கொண்டனரே தவிர, மொழிக்கு எதுவும் செய்யாதுவிட்டுவிட்டார்கள். ஆனால் அந்த நிலையில் நாம் இல்லை. இவ்வளவு போராட்டஇ நெருக்கடியான சூழலிலும் எமக்கு மொழிமீது எக்கறை உள்ளது. எமது தமிழ் வளர்ச்சிக்கழகம், உங்களைப் போன்று (முழக்கம் போன்று) தமிழ் எங்கள் உயிருக்கும் மேல் என்றதொரு கோட்பாட்டை வைத்திருக்கின்றோம். பாரதிதாசன் கூடத் தமிழ் எங்கள் உயிருக்கு நிகர் என்றுதான் பாடினார். ஆனால் நாம் அதிலும் ஒரு படி மேலே சென்று உயிருக்கு மேலாக வைத்துள்ளோம்.

தமிழ் மக்கள் நீண்டகாலம் நாட்டைப்பிரிந்து வெளிநாடுகளில் வசிக்கின்றார்கள். இங்கு நடந்திருக்கின்ற மாற்றங்களை அவர்கள் உள்வாங்கிக் கொள்வதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றிக்கூறுங்கள்?

வரக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பவர்கள் எல்லாரும் இங்கு வந்து பார்க்கலாம். போர்ச்சூழலில் நாட்டைவிட்டு வெளியேறிய மக்கள் எம் மொத்த மக்கள் தொகையில் பெருமளவாகும். எனவே அவர்கள் எதிர்காலத்தில் தமிழ்மொழிப்பற்றும் இனப்பற்றும் இன்றி நம்பிக்கையற்ற ஒரு நிலையை அடையாது உறுதியாக நிற்க வேண்டும் என்பதில் தலைவரும் அமைப்பும் செயலாற்றி வருகின்றது. அதற்கு முதற்படியாக தமிழ்மொழியைக் கற்பிப்பதற்காகப் புதிய நூல்களை ஆக்கி இனஇ நாட்டு அடையாளங்களை மறக்காது இருக்கும்வகையில் தொடர்புபடுத்திச் செய்கின்றோம்.

தமிழீழத்தில் பிறமொழிகளைக் கற்பது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

எம்மைப் பொறுத்தவரையில் நாம் எமதுமொழியை எமது தேவைக்காக முழுமையாகக் கற்கவேண்டும். எமது மொழியையே முழுமையாகப் பயன்படுத்தவேண்டும் என்பதில் அக்கறை உண்டு. அதே நேரத்தில் பிற மொழிகளில் உள்ள நல்ல கருத்துக்கள்இ அறிவியல் ரீதியான புதிய மாற்றங்கள் உடனடியாக எமக்குக் கிடைக்கவேண்டுமாக இருந்தால் அந்தப்பிற மொழிகளையும் நாம் அறிந்திருந்தால்தான் எமக்குள் கொண்டு வரலாம். இன்று உலகில் ஆங்கில மொழி சிறப்புற வளர்ந்தமைக்குக் காரணம் ஏனைய பிறமொழிச் சிறந்த கருத்துக்களையும் உள்வாங்கித்தான் அவர்கள் தம்மை வளர்த்துக்கொண்டார்கள். அதேபோல் நாமும் எம்மை வளர்ப்பதற்குப் பிற மொழி அறிவைத் தெரிந்து வைத்திருக்கவேண்டும். இதற்கென்று நாம் தனித்திட்டங்களை அமைத்து எதிர்காலத்தில் பல மொழிகளையும் கற்று அறிவைப் பெறக்கூடிய வகையில் செயலாற்றுகின்றோம். பிறமொழியில் உள்ள நல்லவை தமிழ்மொழிக்குக் கொண்டுவர வேண்டும் என்று பாரதியார் சொன்னதுபோல் உலகின் எல்லா ஏற்றங்களும் மாற்றங்களும் எமக்குள் கொண்டு வரவேண்டும். உலகின் எல்லா விடயங்களையும் உள்வாங்கக்கூடிய ஒரு செழுமையான மொழியாகவே தமிழும் உள்ளது. எடுத்துக்காட்டாக 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எம் சொற்களஞ்சியம் பல ஆயிரக்கணக்கான பழமை வாய்ந்தது. அதை இன்றுள்ள சொற்பயன்பாட்டுடன் ஒப்பிட்டால் நாம் புதிய சொற்களைப் பெருமளவில் ஆக்கவில்லை. ஆங்கில மொழியைப் பொறுத்தவரையில் வெறும் பேச்சு வழக்கில் இருந்த மொழி கடந்த 500 ஆண்டுகளுக்குள் தன் சொல் வளத்தைப் பெருக்கிக் கொண்டது. ஆனால் எம்மைப் பொறுத்தவரையில் நாம் ஆட்சியில் இல்லாது அடிமைத்தனத்தில் இருப்பதனால் எமக்குப் பல சொற்கள் தேவைப்படாது போய் விட்டது. எனவே எமக்கு அதில் அக்கறை இல்லாதுபோனதால் நாம் சொற்களை ஆக்காது விட்டுவிட்டோம். எமக்கென்று நாம் ஆட்சியை அமைக்கும்போது அந்தத் தேவை இருக்கும். ஆட்சியே இல்லாதபோது ஆட்சிச்சொல் பற்றி நினைக்க அவசியம் இல்லை. ஆனால் இப்போ அந்தத்தேவையை உணர்ந்து மற்ற நாடுகளைப்போன்று எல்லாவற்றையுமே நாம் எம் மொழியில் கொண்டுவர விரும்புகின்றோம். அதாவது மொழியாக்கத்தை எல்லாத் துறைகளிலும் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

புலம்பெயர் படைப்பாளிகள்:

வாழும் சூழலில் என்னென்ன உள்ளனவோ அவற்றையெல்லாம் எதிர்காலத்தில் இங்குகொண்டு வரக்கூடியதாக அவர்களின் செயல்பாடு அமையவேண்டும். அதாவது தம்மையும் வளர்த்துத் தமிழீழத்திற்கும் உதவக்கூடியதாக இருத்தல் நல்லது

புலம்பெயர்ந்த படைப்பாளிகள், அறிஞர்கள் போன்றோரிடம் என்ன கேட்க விரும்புகிறீர்கள்?

அவர்கள் இந்தச்சூழலை உணர்ந்து நாம் என்ன நிலையில் உள்ளோம் என்பதை உணர்ந்துகொண்டு அவர்கள் வாழும் சூழலில் என்னென்ன உள்ளனவோ அவற்றையெல்லாம் எதிர்காலத்தில் இங்குகொண்டு வரக்கூடியதாக அவர்களின் செயல்பாடு அமையவேண்டும். அதாவது தம்மையும் வளர்த்துத் தமிழீழத்திற்கும் உதவக்கூடியதாக இருத்தல் நல்லது. உதாரணமாக எமது தாய்மண் உலகில் மிகப் பழமையானது. பல ஆண்டுகளாக இங்கு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளைக் கொண்டிருக்கின்ற மண். சிந்துவெளிகாலத்துப் பொருட்களை-யெல்லாம் நாம் இன்று இங்கும் கண்டு எடுக்கின்றோம். எனவே அப்பொருட்களையெல்லாம் வைத்துத் தொல்லியல் ஆய்வுசெய்யக்கூடிய ஆய்வாளர்கள் இங்கு இல்லை. அது தொடர்பான கல்வியும் இங்கு இல்லை. எனவே அவற்றையெல்லாம் ஈடுசெய்யும் வகையில் வெளிநாட்டில் உள்ளவர்கள் மண்ணியல் தொடர்பாகத் தம் கல்வித்திறனை வளர்த்து அதனூடாக எம் எதிர்காலத்தேவைகளை நிறை வேற்றக்கூடிய வகையில் வாய்ப்பைப்பயன்படுத்தவேண்டும். அதைவிட நீண்டகாலமாக எம் வரலாறுகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அடிமைப்படுத்தி வாழ்ந்தவர்களில் முக்கியமானவர்கள் போர்த்துக்கேய ஒல்லாந்தவர்கள். இன்று இவர்கள் இடங்களில் எம் இனம்சார் ஆதாரங்கள் கிடக்கின்றதாக அறிகின்றோம். எனவே அங்கு வாழும் அறிஞர்கள் அவற்றைத்தேடி மறைக்கப்பட்ட எம் வரலாற்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவி-செய்வது நல்லதொரு செயற்பாடாக இருக்கும்.

சாதனைத் தமிழர்

ஒவ்வொரு விமான நிலையங்களில் பல நிறுவனங்களுக்கு சொந்தமான விமானங்கள் வந்து இறங்கிச் செல்வதைக் கண்டிருப்பீர்கள். [illegible] செல்வதற்கு வரியும் விமானநிலையத்தை பாவிப்பதற்கு [illegible] கேள்விப்பட்டிருப்பீர்கள். இலங்கை போன்ற நாடுகளில் நாள் ஒன்றுக்கு சில விமானங்களே [illegible] செல்வதால் சில மனிதர்களை வைத்து எத்தனை விமானங்கள் வந்தன [illegible] விமான நிறுவனங்களுக்கு கட்டணம் செலுத்த பற்றுச்சீட்டு அனுப்பலாம். ஆனால் கனடா போன்ற பெரிய விமானநிலையங்களில் நாள் ஓன்றுக்கு நூற்றுக் கணக்கான விமானங்கள் வந்து செல்கின்றன. இவற்றை மனிதவளம் கொண்டு செய்வது நெடி. ஆகையால் இதைச் செய்வதற்கு கணனி மற்றும் இயறந்திரங்கள் பயன்படுத்தி தானியாகியாக செய்யகின்றார்கள்.

இந்த தொழில் நூட்பத்தை உலகுக்கு செய்து வழங்கியவர் ஒரு தமிழர். சாமா ரவிசங்கர் என்பவர் காரைநகர் தமிழீழத்தைச் சேர்ந்தவர்.

"விமான நிலையத்தில் முதலில் ஒரு ஒளிப்படம் எடுக்கும் கருவியைப் பொருத்திநேன் கணனியின உதவியுடன் விமானம் வரும் திசையைநோக்கி அந்த ஒளிப்படம் எடுக்கும் கருவி [illegible] செய்தேன். படம் நேர்த்தியாக எடுக்கப்பட்டவுடன அந்தப் படத்தில் உள்ள [illegible] அறிந்து கொடுக்கும். அதன் அடிப்படையில் அந்த விமானம் விமானநிலையத்தைப் பாவித்தமைக்கான கட்டணத்தை கணனியே செய்து கொடுத்து பற்றுச்சீட்டை [illegible] என [illegible] பல்கலைக்கழக பொறியியல் மாணவர்கள் மத்தியில் விரிவுரை வழங்கினார் ரவிசங்கர்

பிரேசிலை மடக்கியது மெக்ஸிக்கோ!

17 வயதுக்குட்பட்டோர் உதைபந்து உலக கிண்ணப் போட்டியில் இறுதியாட்டத்தில் நடப்பு சம்பியன் பிரேசிலை 3 - 0 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சி தோல்வியுறச் செய்தது மெக்ஸிக்கோ. உலக கிண்ணப் போட்டிகளில் மெச்சிக்கோ கைப்பெற்றும் முதல் பெரிய பட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

சோனியா என்னும் இளம் புயல்!



ரெனிஸ் வீராங்கனை சோனியவிற்கு 2005 ஆம் ஆண்டு மிகவும் முன்னேற்றகரமான ஆண்டாகு... US Open போட்டியில் 4வது சுற்றுவரை முன்னேறியதால் உலக தர வரிசையில் 34...து இடத்திற்கு 18 வயதாகும் அழகிய மங்கை சோனியா மிர்சா இந்திய “ரெனிஸ் புயல்” முன்னேறியுள்ளார்.

CHELSEA - தொடர் வெற்றிகள்!

இங்கிலாந்து உதைபந்தாட்டத்தில் Premere பிரிவிவல் CHELSEA அணி 8 வெற்றிகளுடன் எவ்வித தோல்விகளையும் பெறாமல் முன்னேறி வருகிறது. இதுவரை அதிகூடிய கோல்களாக 18 கோல்களையும் அதி குறைந்த கோல்களாக 2 கோல்களையும் வாங்கி முன்னிலையில் திகழ்கின்றது.

சிங்கக் குகைக்குள் மடங்கிய கங்காரு!

1986 - 96 தொடர் முதல் தொடாந்து தக்க வைத்துக் கொண்டிருந்த ஆஷஸ் கோப்பையை இங்கிலாந்திடம் அதன் மண்ணிலேயே இழந்து வெறும்கையுடன் தாயகம் திரும்பியது. உலக சம்பியன் ஆன அவுஸ்திரேலிய கிரிகெட் அணி.

இனிங்ஸ் வெற்றியில் இருந்து தப்பியது சிம்பாவே!



சிம்பாவே அணிக்கு எதிரான கிரிகெ... டெஸ்ட் தொடரில் 2 - 0 என்ற போட்டி ரீதியில் இந்தியா வெற்றி கொண்...19 ஆண்... பின்னர் ...ளிநாட்டில் இந்தியா தொடரை கைப்பற்றுவது குறிப்பிடத்தக்கது. கடைசியாக 1986இல் இங்கிலாந்துக் கெதிரான தொடரை 2 - 0 என இந்தியா வென்றது. இரண்டாவது ஆட்டத்தில் சிம்பாவே அணியை இனிங்சால் வெல்லக் கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தபோதிலும் இந்திய வீரர்களின் மோசமான பீல்டிங் மற்றும் பந்து வீச்சால் சிம்பாவே அணி இனிங்ஸ் தோல்வியில் இருந்து தப்பி பிழைத்துக் கொண்டது!

WHITE WASH பண்ணியது சிறீலங்கா!

சிறீலங்காவிடம் பங்களாதேஷ் அணி நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டது. இரண்டு ஆட்டங்களிலும் சிறீலங்கா அணி இனிங்சால் வென்று 2 - 0 என்று சாதனை படைத்துள்ளது. இவை ஒரு புறமிருக்க 2000 ஆண்டில் டெஸ்ட் போட்டியில் விளையாடும் அந்தஸ்த்தைப் பெற்ற பங்களாதேஷ் அணிக்கு, இது

விளையாட்டுத் துளிகள்

விளையாட்டிலும் ஒளிர்ந்த வீரன் பொன்னம்மான் - குகன்

யாழ்இந்துக் கல்லூரியின் வரலாற்றில் பொன்னம்மான் என்னும் இயக்க பெயர் உடைய விளையாட்டு வீரன் குகன் என்றால் எவரும் மறக்க முடியாது.

-1976 - கல்லூரி U - 19 கிரிகெட் அணியின் தலைவர் (Captain)

-1976ம் ஆண்டு யோகி என்ற இயக்கப் பெயர் உடைய நரேன் (பொன்னம்மானின் அண்ணை) யாழ் இந்துவின் U - 19 கிரிகெட் அணிக்கு பயிற்சியாளர்.

-1974/75/76 தொடர்ந்து முதல் தர அணியில் கிரிகெட் விளையாட்டு வீரர் ஆக விளையாடினார்.



-1976 நாளந்தா அணிக்கு இலங்கை அணியின் வீரர் அநுரா ரணசிங்க தலைமை தாங்கும்போது யாழ் இந்து அணிக்கு பொன்னம்மான் தலைமை தாங்கினார்.

-Field Hockey, Basket Ball ஆகிய விளையாட்டு துறைகளிலும் கல்லூரி அணியில் சிறந்த வீரர் ஆக விளங்கினார்.

-மெய்வல்லுனர் துறைகளில் 200m, 400m, ஈட்டி எறிதல் பாடசாலை ரீதியாக மட்டுமல்லாமல், யாழ் மாவட்டத்திலும், அகில இலங்கை பாடசாலைகளின் போட்டிகளிலும் கூட வெற்றிவாகை சூடினார்.

-அதுமட்டுமல்லாமல் ஜனாதிபதி பரிசு பெற்ற தலைசிறந்த சாரணர் ஆகவும் (Scout) Police Cadet ஆகவும் அகில இலங்கை ரீதியில் யாழ் இந்து கல்லூரிக்கு முதலிடம் பெற்றுத் தந்தவர்களில் இவரும் ஒருவராவர்.

35 வது தோல்வியாக அமைந்துள்ளது. அதேசமயம் 'இனிங்ஸ்' தோல்வியை சந்திப்பது இது 24ஆவது தடவை, இதுவரை 40 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளது.

யாவேஸ் அணி சாதனை!

ரொரன்ரோவில் உதைபந்தாட்டப் போட்டிகள் யாவும் முடிவிற்கு வந்துள்ளன. இவ்வருடம் (C.T.S.A.) கனேடிய தமிழர் விளையாட்டு சங்கத்தின் அனுசரனையுடன் நடாத்தப்பட்ட சகல போட்டிகளும் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன.

2005ஆம் ஆண்டிற்கான LEAGUE CHAMPION பட்டத்தையும் 2005 Cup Winners Cup Champion பட்டத்தையும் வென்றெடுத்த கழகம் என்ற முதல் பெருமையை யாவேஸ் விளையாட்டுக் கழகம் பெறுகின்றது. அது மட்டுமல்லாமல் மொன்றியால் நகரில் நடைபெற்ற மிகப் பெரிய சுற்றுப் போட்டியான கனேடியன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டியிலும் யாவேஸ் விளையாட்டுக் கழகம் Champion பட்டத்தை இம்முறை தட்டிச் சென்றுள்ளது.

சாதனை வீரர் ரோஜர் பெடரர்!

2005ஆம் ஆண்டு 74 ஆட்டங்களில் விளையாடி 71இல் வெற்றி பெற்றுள்ளார் பெடரர். களிமண் தரையில் தொடர்ந்து 35 வெற்றிகளை பெற்று சாம்ப்ராஸின் சாதனையை முறியடித்துள்ளார் பெடரர். சாம்ப்ராஸ் 34 முறை வென்றுள்ளது இதுவரை சாதனையாகும். கடந்த மாதம் நடந்து முடிந்த US Open போட்டியில் 8 முறை Grand Salam சம்பியன் பெற்ற உலகப் புகழ் பெற்ற அமெரிக்க வீரர் ஆன ஆந்திரே அகஸ்ஸியுடன் இறுதியாட்டத்தில் மோதி பெடரர் US Open கிண்ணத்தை கைப்பெற்றினார். பீற் சாம்ப்ராய், ஜிம்மி கானர்ஸ், ஜோன் மெக்கன்ரோ, போரிஸ் பெக்கர், ஸ்டீபன் எட்பேர்க், இவான் லெண்டிப் போன்ற மிக பிரபல்யமான வீரர்களின் தரத்திற்கு ஈடாக ரோஜர் பெடரர் நின்று பிடிப்பாரா என்று காலம்தான் பதில்சொல்ல வேண்டும்.



நவீன ஓவியத்தில் உதைபந்தாட்ட வீரன்

ஆஸ்திரேலிய வானொலியில் உலகத் தமிழர் பண்

ஆஸ்திரேலியாவில் இருந்து இயங்கும் "இன்பத்தமிழ்" வானொலி நாள் தோறும் காலையில் "உலகத் தமிழர் பண்" இசைத்து அதன் பிறகே தனது ஒலிபரப்பைத் தொடங்குகிறது என்பதை அறிய மகிழ்கிறோம்.

கடல்கோளுக்கு பின்னும் இப்படி விளையாட எப்படித் துணிவு?
புகைப்படம்: லியோ



நிகழ்ந்தவை

கவிஞர் நெல்லை புகாரியின் 'பச்சைமிளகாய் இளவரசி' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா கனடாவின் இலக்கிய விருது வழங்குவதற்குப் புகழ்பெற்ற நிறுவனமான இலக்கியத் தோட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந் நிறுவனம் பிரபல எழுத்தாளர் சுந்தர ராமசாமி, வெங்கிடசாமிநாதன், பத்மநாப ஐயர் ஆகியோருக்கு இலக்கியத் தோட்ட விருது வழங்கியிருக்கிறது. மணிமேகலைப் பிரசுர நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட 'பச்சைமிளகாய் இளவரசி'யை இலக்கியத் தோட்டத்தின் தொடக்கநிலை உறுப்பினரும் நிறுவனருமான முத்துலிங்கம் முன்னின்று நடத்தினார். இவருடைய முதல் நூலும் முன்னாளில் மணிமேகலைப் பிரசுரத்தினால் வெளியிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. விழாவில் சிறப்புரையாற்ற வந்திருந்த ரமணன் அருமையாகப் பாடினார். பதிலுக்கு மற்றுமொரு உரையாளரும் அருமையான பாடலைப் பாடினார். இந்த வெளியீட்டில் வெளியிடப்பட்ட நூலின் வரும்படி அனைத்தும் இலக்கியத் தோட்டம் அமைப்பின் நிதிக்குச் [illegible]

[illegible]ரியீட்டுரையில் எழுத்தாளர் அ. முத்துலிங்கம்



நுட்பமான வெளிப்பாடுகள், [illegible] கவிஞர்களுக்கு [illegible] ஓர் அபூர்வமான தருணத்தில் மட்டுமே கிட்டுபவை. பச்சைமிளகாய் இளவரசி என்ற [illegible]. 'மாலை [illegible] மடியில் என மனதுள் [illegible] தைக்கின்றேன்" என்கிறார். மகளுடைய சுரீர் கோபத்தைச் சொல்லும்போது, "[illegible]நாக்கின் நுனியோரம் பொன் ஊசி [illegible]றைப்பு" என்கிறார். கவித்துவத்தின் உச்சம்....புகாரியின் படைப்புகள் புதுமையாக இருக்கின்றன. மயக்கவைக்கும் உவமைகளும், மனதை அசைக்கும் படிமங்களுமாக நெஞ்சிலே நிற்கின்றன." என்று பேசினார். சிறப்புரையில் [illegible] வந்த கவிஞர் ரமணன் "ஒரு கவிஞன் எப்போது [illegible] தெரியுமா? எழுதாத போதும் [illegible] எழுதும் போதும் கவிஞனாகிறான்." என்று பேசினார். [illegible] பாஸ்கரன், [illegible] பலரும் கருத்துரை வழங்கினர்

[illegible]



எல்லோருடனும் [illegible] அன்பாகப் பழகும் கவிஞர் புகாரியின் குணாம்சம் அவரது கவிதைகளிலிருந்து வெளிப்படுகின்றது. ஒரு காலத்தில் [illegible] கவிதை [illegible] இன்னொரு கா[illegible] தள்ளப்படுகின்றன. புகாரியின் கவிதைகள் காலத்திற்கு [illegible] எளிதாக எல்லோராலும் புரிந்து [illegible] [illegible] பலரும் [illegible]

[illegible]

[illegible]

காதோடு காதாக
நடக்காத நூல் வெளியீடு

கே.எஸ்.பாலச்சந்திரன்

ரொரன்ரோவின் பலவித செயற்பாட்டுக் குழுக்களின் பல பிரிவுகளின் தலைச்சன்களையும் பார்க்க முடிந்தது 'காதோடு காதாக' நூல் வெளியீட்டு விழாவில்தான். நூல் வெளியீட்டை விழாவாக நிகழ்த்தவேண்டிய புறச்சூழல் புலம்பெயர்ந்த இடங்களில் உருவாகியிருக்கிறது. அடையாளத்தை முன் நிறுத்துவதிலிருந்து அந்நியமாகிப்போன சமூக ஊர் நடவடிக்கைகளும் இதற்குக் காரணமாகின்றன. அந்தவகையில் அனைவரையும் ஈர்த்து நடந்த இந்த விழா ஒரு பெரும் சமூகக் குழுமமாக இருந்தது.

மூத்த எழுத்தாளர் குறமகள் வள்ளிநாயகி, கவிஞர் கந்தவனம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழர் தகவல் இதழின் ஆசிரியர் திருச்செல்வம், தமிழன் வழிகாட்டி செந்தி ஆகியோரும் கருத்துரை வழங்கினர். நகைச்சுவை நூலாயினும் விழா செறிவானதாக சிறப்பானதாக அமைந்தது. ஈழத்தின் கவிஞர் புதுவை இரத்தின துரையின் நூல் வெளியீட்டுக்கு அடுத்தபடியாக இந்த நூல் வெளியீட்டிற்கே குறிப்பிட்ட நகர மண்டபம் நிறைந்து வழிந்ததைப் பார்க்க முடிந்தது. எதிரும் புதிருமான பலர் விழாவில் கைகுலுக்கிக் கொண்டதையும் பார்க்க முடிந்தது. காதோடு காதாக கதிர் துரைசிங்கத்தால் நூல் வெளியீட்டை செய்யமுடியவில்லை. அந்தளவிற்கு யாரென்றில்லாது இவ்வாறான நாடக, நூல், கலை விழாக்களில் அவர் உதவி செய்து வந்திருக்கிறார். அந்தவகையில் அவருக்கு இது வெற்றியே. மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கனகசபாபதி தலைமையில் விழா நடந்தது.

ஓர் நாடகமும் காலம் இதழின் 25 இதழுக்கான விழாவும் கூத்து ஒளிவட்டு வெளியீட்டு விழாவும் ஒன்றாக சேர்த்து நிகழ்ந்தது. தாம்.சிவதாசன் தலைமையில் விழா நடந்தது. விழாவில் முன்னைவர் யாழ் பல்கலை முன்னாள் தலைவர் சுப்பிரமணியம் மலர் வெளியீட்டுரை நிகழ்த்தினார். அறிவியல் சிறப்பிதழாக காலம் இதழின் 25 ஆவது இதழ் வந்திருந்தது. மீண்டும் வருவார்கள் என்ற நாடகம் நிகழ்த்தப்பட்டது. நாடகத்தை எழுதியவ அரியநாச்சி இயக்கம் பாபு பரதராஜா. கூத்து ஒளிவட்டுக்கள் கலைமாமணி அல்பிரட் அவர்களினால் பாடப்பட்டு கூத்து பாடல்களுக்கு 'ஆர்மோனியம்' வாசிக்கும் புழ்கபெற்ற கலைஞர் சுதி மரியான் ஆகியோரின் பங்களிப்புடன் தொகுக்கப்பட்டிருந்தது. கூத்தின் பல மெட்டுக்களை ஒளி வடிவில் பாடி வெளியிட்டிருந்தார்கள். நடிக்கப்பட்ட கூத்து ஒளிவட்டு அல்ல பாடப்பட்ட கூத்து ஒளிவட்டு இது.



ம்


ஷோபா சக்தியால் எழுதப்பட்ட நாவல். அரசியலையும் அதன் வாழ்வியல் அவலங்களையும் மையப்படுத்தி இலக்கியங்கள் படைத்துவரும் ஈழத்தவர். ஏற்கனவே கொரில்லா என்ற நாவலையும், தேசத்துரோகி என்ற சிறுகதைத் தொகுதியையும் எழுதி வெளியிட்டவர். தற்போது பிரான்சில் வாழ்ந்து வருகிறார்.

"ம்" என்ற இந் நாவல் ஈழத்தின் ஆரம்பகால அரசியல், இயக்கங்கள், வெலிக்கடை படுகொலைகள், சிறைச்சாலைச் சித்திரவதைகள் பற்றிச் சொல்கின்றது. குறிப்பாக வெலிக்கடைப் படுகொலைகள் நடந்த விதங்கள் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன. இதில்வரும் பெயர்கள், சம்பவங்கள் உண்மையானவையாக இருந்தாலும், சம்பவங்கள் எவ்வளவு தூரம் சரியானவை என்பது சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமே வெளிச்சம்.

ஷோபாசக்தியின் அரசியலுடனும், கருத்துடனும் எனக்குச் சிறிதளவேனும் உடன்பாடு கிடையாது. ஆயினும் அவரது சுவாரசியமான எழுத்தாற்றலுக்காக அவரது எழுத்துக்களை வாசிப்பவன். "ம்" நாவலிலிருந்து எனக்குப் பிடித்த சில பகுதிகளை இங்கு தருகின்றேன்




உன்னைப் போல் உன் அயலவரையும் நேசி என்பது வேதாகமத்தின் சத்தியம். நீங்கள் இந்த ஏழை மக்கள் தங்களுக்கென ஒரு கோயில் கட்ட உதவ வேண்டும்! வெள்ளாளர்கள் பாதிரியுடன் ஏற்கனவே பேசிப் பறைந்து வைத்த மாதிரியே வேறொரு இடத்தில் பத்துப் பரப்புக் காணியைப் பள்ளர்களுக்குக் கோயில் கட்டுவதற்குத் தானமாகத் தர வெள்ளாளர்கள் சம்மதித்தார்கள். இதில் பாரபட்சம் எதுவும் இல்லை என்றும், பள்ளர்களும் அந்தோனியார் கோயிலே கட்டலாம் என்றும், தானும் தன் பங்குக்குக் கட்டப்படும் கோயிலுக்குப் பீடமேற்ற ஒரு புனித அந்தோனியார் சொரூபத்தை இலவசமாகத் தருவதாகவும் பாதிரி சொன்னார். தகவல் வெளியே நின்றிருந்த டானியலுக்குப் போனபோது, அவர் உள்ளே அடாத்தாக வந்து பாதிரியைக் கை எடுத்துக் கும்பிட்டு "பத்துப் பரப்புக் காணியும் பள் அந்தோனியாரும் தந்ததற்கு மிக்க நன்றி சுவாமி" என்றார்.




நூல்கள் பகுதியை தொகுப்பவர்

ப. ஸ்ரீஸ்கந்தன்



யாழ். பல்கலைக் கழகத்தில் நாடகமும் அரங்கியலும் துறையில் சிறப்புப் பட்டத்தைப் பெற்ற தே.தேவானந்த் மற்றும் அ.விஜயநாதன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு நாடகக் கலையை முன்னிலைப் படுத்தி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகிறது கூத்தரங்கம் என்ற சஞ்சிகை.

பங்குனி 2004இல் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை ஏழு இதழ்கள் வெளிவந்துள்ளன. இறுதி இதழ் ஆண்டு நிறைவு இதழாக உள்ளது.



இந்த இதழில் அண்மையில் மறைந்த நா.சுந்தரலிங்கம் பற்றி பேராசிரியர்கள் கா. சிவத்தம்பி, சி. மௌனகுரு ஆகியோர் எழுதிய கட்டுரைகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. நா.சுந்தரலிங்கம் அவர்கள் அபசுரம், விழிப்பு ஆகிய நாடகங்களை எழுதியதோடு நாடக விரிவுரையாளராகவும் கடமையாற்றிய பெரும் நாடகக் கலைஞர்.

ஒப்பனை, உடைகள், காட்சித்திரைகள் என்று அரங்கத்துறையை தொழிலாகக் கொண்டு வாழ்ந்த பெஞ்சமின் ஐயா பற்றிய கட்டுரை எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. மேலும் இவ்விதழில் ந முத்துசாமியின் கட்டுரை, யாழ் பல்கலைக்கழக மட்டத்தில் நடைபெற்ற நாடகங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

முக்கியமாக அன்ரன் செக்கோவின் "அந்தி மாலைப் பாடலொன்று" என்ற முழு நாடகப் பிரதியும் உள்ளது. இதனை குழந்தை ம சண்முகலிங்கம் மொழி பெயர்த்திருந்தார்.

நாடக ஆர்வலர்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய சஞ்சிகை.

தொடர்புகளுக்கு: அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் தொலைபேசி: இலக்கம் : 0777286220 email: koot04@yahoo.com

1971 ஏப்பரல் அய்ந்தாம் நாள் ஜே.வி.பி. தொடங்கிய ஆயுதக் கிளர்ச்சியை இலங்கை இந்திய கூட்டுப்படைகள் நசுக்கியதன் பின்பாக பத்தாயிரத்துக்கும் அதிகமான சிங்கள இளைஞர்களும், மாணவர்களும், பெண்களும் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசால் கொல்லப்பட்டு, தெருவிலும், ஆறுகளிலும் பிணங்களாக வீசப்பட்டனர். வகைதொகையின்றி ஜே.வி.பி.யினர் கடுமையான காவல் ஏற்பாடுகளோடு சிறைக-ளில் அடைக்கப்பட்டனர். சிறைப்பிடிக்கப்பட்டிருந்த ஜே.வி.பி. கைதிகளிடையே ஒரு புத்தகம் இரகசியசியக் சுற்றில் இருந்தது. சிறைக்குள் இருந்து ஜே.வி.பி.யினர் இரகசியமாக "மாவோ சே துங் சிந்தனைகள்" என்ற மாவோவின் புகழ் பெற்ற புத்தகத்தைத் தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்த போது ஜே.வி.பி.யினரை சிறையில் அடைத்து வைத்துக் காவலலுக்கு நின்ற பொலிசார் மாவோ அரசு சிறீலங்கா அரசுகடு வழங்கிய நவீனரகத் துப்பாக்கிகளைத் தங்களது கைகளில் வைத்திருந்தனர்.

❖❖❖❖❖

இது நடந்து ஒரு கிழமை கழிந்த போது மேலும் இரண்டு புதிய இளைஞர்கள் செல்வா முற்றத்தில் நிறுத்தப்பட்டு உடுகம்பொலவால் விசாரணை செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் கொழும்பில் வைத்து எழுபத்திரண்டாயிரம் ரூபாய் காசுக்கடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இங்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிந்தது. காசு வந்த வழியை-யக் கேட்டு உடுகம்பொல அவர்களைத் தாக்கிய போது அவர்கள் அந்தப் பணத்தை தாங்கள் கோண்டாவில் பஸ் டிப்போவில் கொள்ளையடித்ததாகச் சொன்னார்கள். உடுகம்பொல தனது தலையைப் பிய்த்துக் கொண்டான்.

"சரி நீங்கள் எந்த இயக்கம்?"

"நாங்கள் றெலோ இயக்கம் சேர்"

"ரெலோ?"

"இல்லை சேர் றெலோ"

உடுகம்பொல "அடியடா அவனை...." என்று ஆத்திரத்துடன் கத்தினான். பின்பு அவன் நிறுத்தி நிறுத்திப் பேசினான்.

"முதலில் உங்களின் இயக்கத்தின் பெயரைச் சரிவர உச்சரிக்கப் பழகிக் கொள்ளுங்கள்! இந்தக் களவு, கொள்ளைகளைப் பின்பும் அடிக்கலாம். T.E.L.O.... ரெலோ இதுதானே உங்களின் இயக்கம்?"

❖❖❖❖❖

திரும்பவும் திரும்பவும் "ஜெயவேவா" முழக்கம் எங்களைச் சூழ்ந்து எழுந்தது. சிங்களத்தில் வெறிக்கூச்சல் வெலிகட முழுவதும் பரவிற்று. நீளமான விசில்கள் சாவை ஒலித்தன. வெள்ளை நிறத்தில் "பப்ளின்" துணியில் முழங்கால்களை முட்டும் காற்சட்டைகளும், மேற்சட்டைகளும் அணிந்திருந்த கைதிகள் வை.ஓ.கட்டத்தின் முகப்பிலிருந்த, கம்பிகளால் பின்னப்பட்ட பிரதான கதவை உடைக்கத் தொடங்கினர். அவர்களில் முதலாவதாக சேபால ஏக்கநாயக்க கோடரியால் அவர்களின் கதவைக் கொத்தினான். வை. ஓ கட்டடத்தைச் சூழவும் சிங்களக் கைதிகள் சுவர்களில் தொற்றி ஏறினார்கள். அவர்கள் தங்களின் கைகளில் சிறையில் குடாரத்தில் சோறு கிளறும் இராட்சத அகப்பைகள், சிறைச்சுத் தொழிற்சாலையில் இருந்து எடுக்கப்பட்டிருக்கக் கூடிய ளிகள், மரம் அரியும் வாட்கள், கோடரிகள் போன்றவற்றை வத்திருந்தார்கள். எங்களின் சிறைக் கூண்டுகள் அதிரலாயின. ஜயவேவா!

இந்திய திரை உலகில் நடிப்புக்காக முதன்முதலாக ஒரு இலட்சம் ரூபாய் பெற்ற பெண் நடிகை என்பதற்காக அல்ல -

ஒரு பெண் ஆண்வேடமிட்டு நாடகங்களிலும், படங்களிலும் நடித்த புதுமைக்காக அல்ல -

இவரது அபாரமான சங்கீதக் கலை காரணமாக தன் காந்தர்வக் குரலில் பாடிய அபூர்வமான பாடல்களுக்காக அல்ல -

பிரபலமான நடிகரும், பாடகருமான கிட்டப்பாவைக் காதல் திருமணம் செய்து கொண்ட பெருமைக்காக அல்ல -

கொடுமுடி கோகிலம்
கே.பி.சுந்தராம்பாள் வரலாறு



ஒளவைப் பாட்டியை நமக்கு உயிர்ப்பித்துக் கொடுத்த அவர் சிறப்புக்காக அல்ல -

இந்தியாவில் முதன் முதலாக ஒரு பெண்மணி அதுவும் நாடக - இசை, திரைபடத் துறையிலிருந்து மேலவை உறுப்பினர் ஆனவர் என்ற புகழுக்காக அல்ல -

ஞானப்பழத்தைப் பிழிந்து தனது ஐந்தரைக் கட்டைச் சுருதியில் அவர் நிகழ்த்திய் சங்கீதக் கச்சேரிகளுக்காக அல்ல -

நடிப்பின் மீது காதல் கொண்டு சிறுமியாக இருந்த போதே வீட்டை விட்டு வெளியேறி - கிட்டப்பாவால் ஓரளவு கை விடப்பட்ட நிலையில் மேலும் சிறு வயதிலேயே விதவையான பின்னரும் -


ஆண்களோடு, சரிசமமாக நின்று நாடகங்களிலும், படங்களிலும், இசை அரங்குகளிலும், அரசியலிலும், விடுதலைப் போராட்டத்திலும் பங்கு கொண்டு - தன்னந்தனியாக ஒரு பெண். பிராமண ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கும் தமிழ் நாட்டில் நடாத்திய போராட்ட வாழ்வுக்காக இந்தப் புத்தகத்தினை அனைவரும் வாசிக்க வேண்டும்.

ப.சோழநாடன் என்பவரால் எழுதப்பட்ட இந்த வரலாற்றை அறிவதன் மூலம் ஆரம்ப கால நாடகத்துறை, சினிமாத்துறை பற்றிய தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.


சனங்களும் வரலாறும் : சொல்மரபின் மடக்குகளில் உறையும் வரலாறுகள்

பதிப்பாசிரியர் முனைவர் ச. பிலவேந்திரன். 2004 வல்லினம் பதிப்பகம். 130 இந்திய ரூபாய்கள்.

வெகு மக்களின் பார்வைகள் சொல்லாடல்களாகப் பதிவு செய்யப் படுவதே வரலாறுகள் என்பவை என்னும் அடிப்படையில் தொகுக்கப் பட்டிருக்கும் நூல். விளிம்பு நிலை என்னும் சொல் இன்று பரவலாக அறிமுகமாகி எது விளிம்பு நிலை எது பொதுப்புத்திப் போக்கு என்று இல்லாத நிலையிருக்கிறது. இந்நிலையில் விளிம்பு நிலை வரலாறே வாழ்வின் வரலாறு என அதற்குரிய அடிப்படைகளை முன்வைக்கும் தொகுப்பு நூல்.



நாட்டார் வழக்காற்றியல் துறையில் பரவலாக தமிழகத்தில் அறிமுகமான பலர் இந்நூலில் கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். ஆனால் அவற்றில் கிடைக்கும் தரவுகளும் உள்ளொளியும் பொதுத் தளத்தின் மூளையைக் குழப்பும் வண்ணம் இருக்கின்றன. ஆ.செல்லப்பெருமாள், தே.லூர்து, ஞா.ஸ்டீபன், அறு இராமநாதன், ஆ. திருநாகலிங்கம், டி.தருமராசன் எனப் பலர் எழுதியுள்ள கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.




வாய்மொழிக் கதைகளின் வழி மக்களின் வரலாறு எவ்வாறு மீட்டுருவாக்கம் செய்யப்படலாம் என்பதற்கான சிந்தனைமரபு இதற்குள்ளால் வெளித்தெரிகின்றது. ஈழத்தின் திரிக்கப்பட்ட முன்னாள் வரலாற்றை மீளக் கட்டியெழுப்ப மக்களின் வாய்மொழி வரலாறே பெரிதும் உதவிபுரியும் என்பது திண்ணம். அதற்கு இந்நூல் கைநூல்களில் ஒன்றாகும் வாய்ப்பிருக்கிறது.

தமிழ்க்கப்பல் மற்றும் தமிழறிவோம்.

ஆசிரியர் முனைவர் கு. அரசேந்திரன். காவிரி பதிப்பகம். 2004

தமிழ்ச் சொற்களின் வேர்களை அடையாளம் கண்டுபிடிக்கும் முயற்சியிலும், அடையாளம் காட்டும் முயற்சியிலும், மீள் வெளிக்கொணரும் முயற்சியிலும் இந்நூலாசிரியரின் பணி செல்கிறது.
பாவாணரின் பாணியில் சொற்களின் மூலங்களை அவர் அடையாளம் காட்டும்போது ஆச்சரியம் விரியும் பல இடங்கள் உள்ளன போலவே நம்பமுடியாத் தன்மையும் ஏற்படுகிறது.
ஏற்கெனவே வந்த இவரது கல் என்ற நூலைப்போலவே அழகான அட்டை வடிவமைப்புடன் வந்திருக்கும் இந்நூல் செய்யும் சொல்லாய்வில் பல புதிய மொழியின் சொற்கள் சிதைவு மாற்றத்துக் குட்படுவது




பற்றிய அறிவினை வியக்கிறோம். மொழி அறிஞர்கள் எவ்வாறு இவரது கருத்துடன் உடன்படுவார்கள் என்பதற்கப்பால் இந்நூல் தமிழ் மொழிபற்றிய பற்றுக்கோட்டை வாசிக்கும் ஒருவருக்கு பலமாக ஏற்படுத்தக் கூடியது.

ஈழ வரலாற்றுப் பதிவுகள்

தமிழ் மொழி வாழ வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துள்ள எந்த ஒரு தமிழனும் உலகில் இல்லை என்பது நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டிய ஒரு விடயம். ஆனால் தனக்கென ஒரு நாட்டைக் கொண்டிராத எந்த ஒரு மொழியும் அழிந்து விடும் என்பதை உணர்ந்து கொள்வதில் நம்மிடையே ஒருமைப்பாடு இல்லை என்றே கூற வேண்டும். ஈழப்போராட்டம் என்பதைத் தமிழன் வாழ்வுக்கும் அழிவுக்கும் விடைகாணும் ஒரு போராட்டமாகக் கொள்ள வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாம் இன்று வாழ்கிறோம்.

இந்த நிலையில் தமிழ் ஈழப் போராட்டத்தின் படிமுறை வளர்ச்சியை, அதன் தேவையை அதன் வெற்றிக்குத் தடையாக இருப்பவை பற்றிய அறிவை நாம் பெற்றிருக்க வேண்டியது அவசியமான ஒன்று. ஐம்பது வருடங்களுக்கும் மேலாக திட்டமிடப்பட்ட வகையில் ஈழத்தமிழர்கள் ஓரம் கட்டப்பட்டுவந்த, வருகின்ற வரலாறு தெரியாமலே நம்மில் பலர் வாழ்ந்து விட்டோம். வாழ்ந்து கொண்டும் இருக்கிறோம். இது இவ்வாறாக, பல்வேறு நாடுகளிலும் சிதறி வாழ்ந்து, தமிழ் மொழி கலாச்சாரம் என்பவற்றில் கவரப்பட்டு வரும் ஒரு சந்ததியினர் தமிழை வாழ வைக்கப் பாடுபடவேண்டிய அவசியத்தை உணர்த்துவதற்கான எந்த ஒரு சூழ்நிலையிலும் இல்லை என்பதும் கண்கூடு. இருப்பினும் இன்று தமிழர் என்ற பெயரில் பரவிவாழும் ஒவ்வொருவருக்கும் தமிழ் ஈழப்போராட்டத்துக்கு வலுச் சேர்க்க வேண்டிய பாரிய கடமை ஒன்று உள்ளது என்பது உணர்த்தப்பட வேண்டியது மிக மிக அவசியம்.



சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பரப்புரைகளை முறியடிப்பதில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பங்கு பாரிய அளவில் உள்ளது.

இதற்கு வரலாற்றுப் பின்னணியை அறிந்திருப்பது அவசியம். ஈழ வரலாற்றை அதன் புவியியல் தோற்றம் முதல் இலக்கை அரசுக்கும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 2002ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் போக்குவரை உள்ளடக்கி 2003 ஜுலையில் வெளியிடப்பட்டது. "ஈழ வரலாற்றுப் பதிவுகள்" என்ற நூல்.


இதனை ஒவ்வொரு தமிழனும் குறிப்பாக இளம் தலைமுறையினர் வாசிப்பதால் தமிழ் ஈழப் போராட்டத்தின் நியாயம் குறித்த தெளிவைப் பெற முடியும்.

அவ்வாறே இன்றைய இளந் தலைமுறையினரில் ஒரு பகுதியினர் தமிழில் வாசித்தறிய முடியாத நிலையில் இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவியாகவும், வேற்றினத்தவர்களுக்கும் எமது போராட்டம் குறித்த நியாயத்தை எடுத்துச் செல்ல உதவியாகவும் எழுதப்பட்டது "Eelam - The Memories of a Nation" என்ற ஆங்கில நூல். இவ்விரு புத்தகங்களும் தமிழர்களைச் சென்றடைவது தமிழினத்துக்கும் தமிழுக்கும், தமிழ் ஈழப் போராட்டத்துக்கும் வலுச் சேர்க்கும்.

அங்கே இப்ப என்ன நேரம்

அ.முத்துலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுதி முதன் முதலாக புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. அக்கா, திகடசக்கரம், வம்ச விருத்தி, வடக்கு வீதி, மகாராஜாவின் ரயில் வண்டி என்ற சிறுகதைத் தொகுதிகளின் சொந்தக்காரர்.

இருபது வருடங்களாக ஐக்கிய நாடுகள் சபையில் அதிகாரியாக பல நாடுகளில் கடமையாற்றிய பின் தற்சமயம் கனடாவில் ஓய்வில் உள்ளார். தான் வசித்த இடங்களில் சந்தித்த அனுபவங்களை "அங்கே இப்ப என்ன நேரம்?" தொகுதியில் கட்டுரைகளாகத் தந்துள்ளார். கட்டுரை என்று சொல்லப்பட்டாலும் அவை ஒவ்வொன்றும் சிறுகதை ஒன்றை வாசிக்கிற உணர்வை ஏற்படுத்துகின்றன.



அ.முத்துலிங்கம் தனக்கே உரித்தான நடையில், தெரிந்தெடுக்கும் சொற்கள், நகைச் சுவையுடனான இழையோட்டம் சொல்லவரும் விஷயங்கள் என்று இத்தொகுதியும் வழமைபோல் பிரமிக்க வைக்கின்றது.

இத்தொகுதியில் எழுதப்பட்டுள்ள இவரது அனுபவங்கள் புதுமையானவை. பல செய்திகள் சொல்லப்படுகின்றன. பிற நாட்டவர்கள் பற்றி அறிய முடிகின்றது. இவர் குறிப்பிடும் நூல்களை வாசிக்க வேண்டும் என்று எண்ணத் தூண்டுகிறது. சில வரலாற்றுத் தகவல்கள் கிடைக்கின்றன.

அ . முத்துலிங்கம் அவர்கள் பற்றிய எனது அபிப்பிராயம் இதுதான் - இவர் எழுதும் கதை அல்லது கட்டுரையை - அதனை மிஞ்சும் வகையில் வேறு ஒருவராலோ. ஏன் இவரால் கூட இன்னொரு முறை எழுத முடியாது. அவ்வாறான சொல்லாடலைப் பயன்படுத்துகிறார்.

அ.மு.வின் அ. இ. எ. கே. கட்டுரைத் தொகுதியை வாசிப்பது அலாதியான அனுபவத்தைத் தரும்.

திருமண விளம்பரம் (கட்டணமில்லை)

புலம்பெயர்ந்த சூழலில் தமிழர்கள் தகுந்த வாழ்க்கைத்துணையை தேர்ந்தெடுப்பதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். வாழ்க்கைத்துணையைத் தேடும் தமிழர்கள் பயன்பெறும் பொருட்டு இவ் விடயம் சம்பந்தமான விளம்பரங்களை இலவசமாகப் பிரசுரிக்கின்றது முழக்கம். உங்கள் தேவைகளை முழக்கம் பணி-மனைக்கு தொலைப்படி மூலம் அனுப்பி வையுங்கள்.

மதம், சாதி, நிறம் மற்றும் சோதிட, ஜாதகப் புரட்டுகள் இடம்பெறாது.

தொலைபேசி: (416) 261 - 9099 தொலைப்படி: (416) 261- 6745 மின் அஞ்சல்: info@muzhakkam.com

மணமகன் தேவை

1. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது இலண்டனில் குடியுரிமைபெற்று தொழில் புரிந்துவரும் 1961ஆம் ஆண்டு பிறந்த மணவிலக்குப்பெற்ற 5-4 உயரமுடைய பெண்ணுக்குத் தகுந்த துணையைத் தேடுகிறார்கள். மணமகன் 50வயதுக்குட்பட்டவராக இருத்தல் நன்று. (416) 493 1806, (416) 438 4377

2. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது கனடாவில் வசிக்கும் அழகான, படித்த, நற்பண்புள்ள 26 வயதுப்பெண்ணுக்கு மணமகன் தேவை. (416) 888 6574

3.. திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 1979ஆம் ஆண்டு பிறந்த பெண்ணுக்கு சகோதரன் மணமகனைத் தேடுகின்றார். (416) 282 8462

4. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 71ஆம் ஆண்டு பிறந்த பட்டம்பெற்றுத் தொழில்புரியும் 5-4 உயரமான பெண்ணுக்கு பொறுப்பேற்பு (ஸ்பொன்சர்) செய்யக் கூடிய வாழ்க்கைத் துணை தேவை. (416) 701 1764

5. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது கொழும்பில் வசிக்கும் 1966இல் பிறந்த பெண்ணுக்குக் கனடாவில் இருக்கும் சகோதரன் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வரன் தேடுகிறார். (416) 993 1082

6. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது கொழும்பில் வேலைபார்க்கும் 72ஆம் ஆண்டு பிறந்த 5-3 உயரமான மகளுக்குப் பெற்றோர் வாழ்க்கைத் துணையை இலங்கையிலோ, வெளிநாடுகளிலோ தேடுகிறார்கள். (905) 846 5084

7. 1972ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பிறந்த யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட, கணக்கியல் டிப்ளோமா படித்த, தனியார் நிறுவனத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் பெண்ணுக்கு, மாமனார் தகுந்த வரன் தேடுகிறார். (416) 666 9346 (மாலை6க்குப்பின்)

8. யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ். கச்சேரியில் எழுதுவினைஞராக வேலைசெய்யும், கணணி படித்த 1980ஆம் ஆண்டு பிறந்த தகுந்த மணம-கனைக் கனடாவில் தேடுகின்றனர். (416) 736 7834

9. 43வயதான, மருந்தகத்தில் தொழில்புரியும் மணவிலக்குப் பெற்ற பெண்ணுக்கு மணமகன் தேவை. 50வயதுக்கு உட்பட்டவராக இருந்தால் விரும்பத்தக்கது. (416) 752 9719

10. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கனடாவில் நிரந்தர வேலை பார்க்கும் 49வய்துடைய மணமாகாத பெண்ணுக்கு சகோதரன் மணமகனைத் தேடுகிறார். (416) 941 5206, (416) 888 6574

11. திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட உயர்கல்வி கற்கும் 1977ஆம் ஆண்டுபிறந்த மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (416) 298 2523, (647) 296 2523

12. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பில் அரச வேலையில் மொழிபெயர்ப்பாளர்க்த் தொழில் புரியும் 1971ஆம் ஆண்டு பிறந்த இளநிலைப்பட்டப் படிப்பு முடித்த மரக்கறி உணவுப் பழக்கமுள்ள அழகான பெண்ணுக்கு இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ மணமகன் தேவை. (416) 421 6469

13. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அண்மையில் பாரிஸ் சென்றுள்ள 1958ஆம் ஆண்டு பிறந்த மணமாகாத பெண்ணுக்கு சகோதரி துணையைத் தேடுகின்றார். தாரமிழந்த மணமகன்களும் ஏற்றுக் கொள்ளத்தக்கது. (416) 264 6969.

14. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது இலண்டனில் சிஜஎம்ஏ படித்துத் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை புரியும் பெண்ணுக்குக் கனடா அல்லது ஐரோப்பாவில் நிரந்தர வதிவுரிமை உள்ள மணமகன் தேவை. 47 901 58 821 (நோர்வே)

மணமகள் தேவை

1. 1971ஆம் ஆண்டு பிறந்த 6-1 உயரமான தனியார் நிறுவனமொன்றில் நிரந்தர வேலை புரியும் மணமகனுக்கு வாழ்க்கைத் துணை தேவை. (514) 961 6892

2. 30வயதிலிருந்து 38 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. தாரமிழந்த பெண்களும் விண்ணப்பிக்கலாம். (416) 316 1625

3. யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகக் கொண்ட கனடாவில் நிரந்தர வதிவுரிமை உடைய 1965ஆம் ஆண்டு பிறந்த, மணவிலக்குப்பெற்ற மகனுக்குத் தகுந்த வாழ்க்கைத்துணை தேவை. (416) 746 6221

4. யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட 15 ஆண்டுகளாக இத்தாலியில் வதியும் கணனிப்பொருட்கள் விற்பனை நிறுவனம் நடத்தும் 27வயது, 5-6 உயரமான மகனுக்கும், விற்பனைப் பிரதிநிதியாகப் பணிபுரியும் 23 வயது, 5-5 உயரமான மகனுக்கும் பெற்றோர் வாழ்க்கைத்துணை தேடுகின்றனர். பெண் ஸ்பொன்சர் செய்யக் கூடியவராக இருத்தல் நன்று. (613) 248 3489.

5. கனடியக் குடியுரிமையுள்ள, கணனிப்படிப்பு படித்து வேலைபார்க்கும் 1967ஆம் ஆண்டு பிறந்த மணவிலக்குப்பெற்ற, கனடாவில் வதியும் ஒருவருக்கு மணமகள் தேவை. (416) 553 8355

6. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ். வங்கியில் வேலை பார்க்கும் 6 அடி உயரமும் 28 வயதும் உடைய மணமகனுக்கு கனடாவில் அல்லது வெளிநாட்டில் தகுந்த மணமகளைத் தேடுகிறார்கள். (416) 635 6373

8. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரித்தானியக் குடியுரிமையுடைய 1973ஆம் ஆண்டு பிறந்த மணவிலக்குப் பெற்ற, 5-6 உயரமுடைய, பட்டதாரி மணமகனுக்குத் தகுந்த துணையைத் தேடுகின்றனர். (416) 857 0448

9. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கனடாவில் நிரந்தரமாக வசித்துவரும் 1969ஆம் ஆண்டுபிறந்து நிரந்தரவேலைசெய்யும் மணமகனுக்குப் பெற்றோர் நற்குணமான, படித்த துணையைத் தேடுகின்றனர். (416) 431 7876

10. கனடியக் குடியுரிமை உள்ள 5-10 உயரமான, நல்ல நிலையில் இருக்கும் ஆண்மகனுக்கு வாழ்க்கைத் துணை தேவை. (416) 698 0961